
படகர்
வாழ்வியல்
முனைவர் க.பார்வதி

# படகர் வாழ்வியல்



திருக்குறள் பதிப்பகம்

DEC 2001

## Bibiliographical Data



| | | |
|---|---|---|
| Title | : | PADAKAR VAAZHVIYAL |
| Auther | : | K.PAARVATHI |
| Language | : | Tamizh |
| Edition | : | First |
| Published | : | March, 2001 |
| Type Point | : | 12.5 Pt. |
| Paper Used | : | White Printing 10.5 kg<br>Double Crown |
| No. of Pages | : | 192 |
| No. of Copies | : | 1000 |
| Publisher | : | Thirukkural Pathippagam<br>66/1, Periyar Street,<br>M. G. R. Nagar, Chennai - 78. |
| Price | : | **Rs. 48.** |

# படகர்

# வாழ்வியல்

முனைவர் **க. பார்வதி,**
எம்.ஏ., பி.எட்., எம்.பில்., பிஎச்.டி.,

**திருக்குறள் பதிப்பகம்**
66/1, பெரியார் தெரு,
**எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.**
✆ : 471 43 25

முதற்பதிப்பு : மார்ச், 2001



விலை ரூ. 48.

ஒளி அச்சு
கிறிஸ்ட் டி. டி. பி. சென்டர்,
19, பாரதீஸ்வரர் காலனி,
4ஆவது தெரு, சென்னை - 24.

அச்சிட்டோர்
பியரல் லைனோ ஆப்செட் பிரின்டர்ஸ்
சென்னை - 24

# குறுக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம். | ..... | அகநானூறு |
| கலி. | ..... | கலித்தொகை |
| குறுந். | ..... | குறுந்தொகை |
| சிலம்பு. | ..... | சிலப்பதிகாரம் |
| தொல். | ..... | தொல்காப்பியம் |
| நற். | ..... | நற்றிணை |
| ப. | ..... | பக்கம் |
| பப. | ..... | பக்கங்கள் |
| புறம். | ..... | புறநானூறு |
| மது. | ..... | மதுரைக்காஞ்சி |

# பொருளடக்கம்


| | |
|---|---|
| வாழ்த்துரை | 7 |
| மகிழ்வுரை | 10 |
| அணிந்துரை | 11 |
| மதிப்புரை | 13 |
| என்னுரை | 15 |
| முன்னுரை | 21 |
| படகர் வாழ்வில் நீலமலை வளமும் மனித உறவுகளும் | 26 |
| படகர் வரலாறு | 49 |
| படகரின் உறவுமுறைகள் | 75 |
| படகர் விழாக்கள் | 89 |
| நம்பிக்கைகளும் சடங்குகளும் | 117 |
| மாறிவரும் படகர் வாழ்வு | 156 |
| ஆய்வு முடிவுகள் | 170 |

**பின்னிணைப்புகள்**

| | |
|---|---|
| 1. படகச் சிறப்புச் சொற்பொருள் அகராதி | 173 |
| 2. படகர் மொழியிலுள்ள பாவ மன்னிப்புப் பாடல் | 177 |
| துணைநூல் பட்டியல் | 181 |



# வாழ்த்துரை

**திருமிகு ந. இராஜசேகர்,** இ.ஆ.ப.
**ஆணையர், தேர்தல் ஆணையம்,**
புதுவை மாநிலம்,
புதுச்சேரி.

காலிக் குடங்களின் மேளதாளம் இங்கே அளவிட இயலாது. கல்லறையானாலும் சில்லறைகளின் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் சொல்லி மாளாது. கவரிங் நகைகளின் ஊர்வலம் எட்டுத் திசையிலும்! அங்கிங் கெனாதபடி எங்குமே 'பிக்மி பல்ப்' தோரணங்கள்!! வானவெடிக்கும் யானை வெடிக்கும் எப்போதுமே தனி மதிப்பு!!! தொண்டை கிழியக் கத்துபவர்களுக்கே இங்குக் கூட்டம் அதிகம்; கைதட்டல்கள் அதிகம்.

வாடைக் காற்றின் தாண்டவத்தில் தென்றல் முகவரி யற்றுப் போய்விடுகிறது. 'பாப்' இசையில் மெல்லிசை மூலை முடுக்கைத் தேடி ஓடிவிடுகிறது.

பழங்குடி மக்களின் வாழ்வு தெளிந்த நீரோடை வாழ்வு. கண்ணைக் கவரும் மத்தாப்புப் பொரியும் படபடக்கும் பட்டாம் பூச்சியும் இல்லை என்றாலும், அந்த வாழ்விலே எத்தனை வளங்கள்! நலங்கள்!! வியப்புகள்!!!... இப்படியுமா? இப்படிக்கூடவா?... என்று புருவங்களை வில்லாக்கும் நிகழ்வுகள் கிட்டப் பார்வைகளுக்கே தெரியும்.

**படகர் வாழ்வியல்** ஆய்வு நூல் மூலம் **முனைவர் பார்வதி** படகர் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுகிறார். படகர் வரலாறு, அவர்தம் உறவுமுறைகள், விழாக்கள், நம்பிக்கைகள், சடங்குகள் எனப் பல்வேறு பகுதிகளாக வகுத்து, தொகுத்து ஆய்ந்துள்ளார்.

மனித இனத்தையே சதிராடும் சாதிப்பிரிவுகள் எங்கும் நிறைந்துள்ள இன்றைய சூழலில், பழங்குடி மக்களிடமும் வேரூன்றி விழுதுவிட்டிருப்பதை அறிகிறோம். படகர், குறும்பர், தொதுவர், இருளர்; கோத்தர், தொரையர் என்று பற்பல பிரிவுகளாம்! படகருக்குள்ளேயே உடையர், ஆருவர், அதிகாரி, கணக்கர் என்று உட்பிரிவுகளாம்! ஏற்றத் தாழ்வின் அடிமட்டத்தைக் காண முடிகிறது.

நீலமலை மக்களைப் பற்றி முனைவர் பார்வதி ஆய்ந்து அலசியிருக்கும் இவ்வேளையில், 'நீலமலை' மக்கள் என் நினைவில் நிழலாடுகின்றனர். நீண்ட நெடிய இமயத்தின் மடியில் தவழும் அருணாச்சலப் பிரதேசப் பழங்குடி மக்கள்தாம் என் நினைவில் நிழலாடுபவர்கள். இரண்டரை யாண்டுகளாக அங்கே அரசுப்பணி புரிந்து பெற்ற அனுபவச் சுவடுகளைத் திரும்பிப் பார்க்கிறேன்.

அங்குள்ள எட்டு இலட்சப் பழங்குடி மக்களில் 112 சாதிப்பிரிவுகள்! அங்கேயும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற சண்டை. ஒவ்வொரு பிரிவினரும் பேசுகின்ற மொழியோ அடுத்த பிரிவினருக்குப் புரியாத புதிர்மொழி. என்றாலும் இந்தச் சண்டைக்கு ஓய்வில்லை, ஒழிவில்லை.

மேலோட்டமாக இத்தகைய குறைபாடுகள் வெளிப்பட்டாலும், இரும்புத் திரைக்குப் பின்னால் நிழலாடும் நிஜங்கள் பல வியப்பூட்டுபவை; பல நம்ப முடியாதவை.

அவர்களின் உலகமே தனி; அவர்களின் தாகங்களும் இராகங்களும் தனி.

இவர்களின் குலதெய்வம் தோணிபோலோ (Doyni Polo). அதாவது சூரியனும் சந்திரனும். அங்குப் பல வாரங்களாகச் சூரியன் காணாமல் போய்விடுகிறது. நிலாவும் அப்படியே. திரும்பவும் தோன்றும்போது, தொலைந்துபோன பெட்டகம் திரும்பக் கிடைத்தாற்போல எல்லை இல்லா மகிழ்ச்சியில் அம்மக்கள் திளைக்கிறார்கள்.

ஆனால், இந்த மகிழ்ச்சிக்குக் குறுகிய நாட்களே ஆயுள்! மேகத்திரை நீங்கி, சூரியனின் ஒளிக்கதிர்கள் நேராக வீசும் தருணத்தில், வெப்பத்தின் கொடுமை தாங்க வொண்ணாது மாண்டு போகிறவர்களும் உண்டு.

சூரியன் தெரிந்தாலும் தொல்லை; மறைந்தாலும் தொல்லை என்ற நிலையே, அதற்குக் கோவில் கட்ட வேண்டி வந்தது என்று சொன்னாலும் பொருந்தும்.

அருணாச்சலப் பிரதேச மக்களின் பழக்க வழக்கங்களில் பற்பல நிறமுண்டு; திறமுண்டு. முனைவர் பார்வதியைப் போன்ற அறிஞர்களின் ஆய்வுக்குத் தகுதி பெற்றவை அவை. நம் நாட்டின் கவின்மிகு கலாச்சாரப் பரிமாணங்களை வெளியுலகுக்கு வெளிச்சமிட்டுக் காட்டுவது மிகவும் இன்றியமையாதது.

இத்திசையில் படகர் வாழ்க்கையை நிழற்படமாய்ச் சித்திரித்துள்ள முனைவர் பார்வதி நம் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர். அவருடைய முயற்சிக்கு 'ஹோசன்னா' பாடி தலை வணங்குகிறேன்.

**ந. இராஜசேகர்**
புதுச்சேரி



# மகிழ்வுரை

திருமிகு சி. சந்திரசேகரன்
இயக்குநர்
கலை, பண்பாட்டுத்துறை
புதுச்சேரி.

முனைவர் திருமதி க. பார்வதி அவர்களின் 'படகர் வாழ்வியல்' எனும் நூலைப்படித்தேன். வியந்தேன், மகிழ்ந்தேன். நீலகிரியில் வாழும் படகர் இன மக்களின் வாழ்க்கையை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் அருமையான நூலினை வழங்கியுள்ளார்.

மலைவாழ் மக்கள் வாழ்க்கை எப்படியெல்லாம் இருக்குமோ எனக்கற்பனையில் மிதந்து கொண்டிருப்பவர்களின் கற்பனையைக் களைந்து, மலைவாழ் மக்களின் வாழ்க்கை மலைக்க வைக்கும் வாழ்க்கை என்பதை உலகறிய வெளிப்படுத்திய விதம் நூலாசிரியரின் தனிச்சிறப்பை வெளிப்படுத்துகிறது.

படக இன மக்களின் வாழ்வியலை ஆராய்ந்தவர் புதுவை மக்களின் மனங்களை எல்லாம் தம் நூலால் கவரும் படைப்பாளராகச் சிறப்புற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**சி. சந்திரசேகரன்**
புதுச்சேரி.



# அணிந்துரை

கவிமாமணி கல்லாடன்
திருமிகு தி. ஜானகிராமன்
சார்புச் செயலர்,
தலைமைச் செயலகம்,
புதுச்சேரி.

படகர் வாழ்வியல் பார்வதி படைத்துள்ளார்
படகர் வழியில் வந்த பாவையர்
முனைவர் கனக ராசுவின் துணைவியார்
தம்மின மக்களின் தனித்த வாழ்வினை
நம்முளம் கொள்ள நயமுடன் உரைத்துளார்!

நீல மலையின் இயற்கை நிலைகள்
காலச் சூழலில் கனிந்த வளங்கள்
படகர் வாழ்வில் படர்ந்துள தொடர்புகள்
படிக்க இனிக்கும் படியளித் துள்ளார்!

கோத்தர், இருளர் குறும்பர் தொதுவர்
வடகர் கன்னடியர் வாழும் பகுதியில்
படகர் வாழினும் வாழ்முறை வேறாம்
ஆய்வியல் நோக்கில் அழகுறப் படைத்துள்ளார்
தோய்ந்து தோய்ந்து துலக்கம் செய்துள்ளார்!

மலைவாழ் இனத்தருள் படகர் என்பரே
நிலையினில் உயர்ந்தோர் எனும்நிலை உண்டாம்
மலையின் உச்சியில் மலையின் சரிவிலும்
வாழுநர் அவரே வளவயல் உழுது
வாழுநர் தாமே வருவிருந் தோம்பும்
பண்பினில் மிக்கார்; பழைய மரபினைக்
கண்ணெனக் காக்கும் கருத்திலும் மிக்கார்!

பண்டைத் தமிழர் பகரும் ஆட்சியைக்
கொண்டுளார் படகர், கூறுவர் பார்வதி!

கல்வி வளர்ச்சியால் கடின உழைப்பால்
செல்வம் கொழிக்கும் சீரிய உழவால்
படகர் வாழ்வில் பல்வகை வளர்ச்சிகள்

ஒடுங்கிய இனத்தவர் உயர்ந்துளார் என்பதை
எடுத்துக் காட்டாய் இயம்பும் நூலிது!

மலைவாழ் மக்களின் மாறிவரும் வாழ்க்கை
மனதைத் தொட்டிடும் மாண்புறு வாழ்க்கை!

பார்வதி ஆய்வில் பயனுற அமைந்த
சீர்மிகு நூலின் திறத்தினை உணர்ந்து
பார்மிசை சிறக்கப் பாராட் டுவமே!

**தி. ஞானகிராமன்**

புதுச்சேரி.

## மதிப்புரை

**முனைவர் அ. கனகராசு**
பாரதிதாசன் ஆய்வு மையம்,
புதுச்சேரி.

பிறந்த மண்ணைப் பற்றியும், வாழ வைத்த மக்களைப் பற்றியும் வாழும் வையகத்தைப்பற்றியும் பாடுவது இனிமையானது, இன்பமானது.

பிறந்த மண்ணையும் மக்களையும் வாழ்த்திப்பாடுவது மரபாகும். அம்மண்ணையும் அம்மக்களின் வாழ்வியலையும் ஆய்வு செய்வது அவசியமானதாகும்.

தாம்பிறந்த மண்ணையும் மக்களின் வாழ்வியலையும் ஆய்வு செய்திருக்கும் முனைவர் க. பார்வதி அவர்கள் மண் வாசனையுடன் இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலம் ஐவகைப்பட்டாலும் உலகியல் வாழ்க்கை என்பது அனைவருக்கும் ஒன்றுதான். அதன் அர்த்தமும் ஒன்றுதான்.

நீலமலையின் இயற்கை அமைப்பு, அதன் வரலாறு, படகரின் வாழ்வியல் ஆகியவற்றை இலக்கியம், மானிடவியல், நிலவியல், வரலாற்று இயல், மொழியியல்,

கள ஆய்வு, நாட்டுப் புறப்பாடல்கள் ஆகியவற்றின் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு இந்த ஆய்வினைச் செய்துள்ளார்.

பொன்னையும் பொருளையும் நேசிக்கத்தான் பொண்ணு எனும் நிலையை மாற்றி, மண்ணையும் மனுஷனையும் நேசிக்கிறவளும் பொண்ணுதான் எனும் நிலைக்குப் பெண்ணினத்தை இவ் ஆய்வின் மூலம் உயர்த்தியவர் முனைவர் க. பார்வதி அவர்கள்.

நீலமலையில் வாழும் படக இனத்தில் பிறந்து, வளர்ந்து ஆளாகி அவ்வினத்தையே ஆய்வு செய்து ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டத்தினைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பெற்றவர்தாம் முனைவர் க. பார்வதி அவர்கள்.

தாம் பிறந்த மண்ணுக்கும், மலைவாழ் மக்களுக்கும் தம்பணியால் வாழும் வாழ்க்கையால் பெருமையைச் சேர்த்துக்கொண்டிருப்பவர். அவரின் இந்த ஆய்வு நூல் ஆய்வுலகத்திற்கு மட்டும் உரியது அன்று. இந்த நூல் அனைத்து மக்களுக்கும் உரியது என்பதை நூலின் சிறப்பால் அறியலாம். ஆய்வு நூலையும் அன்றாடம் படிக்கும் நூலாக மாற்றிய பெருமை நூலுக்கும், நூலாசிரியருக்கும் உரிய தனிச்சிறப்பாகும்.

**அ. கனகராசு**

நூலாசிரியை
முனைவர் க. பார்வதி
புதுச்சேரி



# என்னுரை

மலைகளின் உச்சி நீலமலை. அதுதான் நீலகிரி. இந்நீலகிரியில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, வலம் வந்த நான் என் மண்ணைப்பற்றியும் என் படக இன மக்களைப் பற்றியும் சென்னைப் பல்கலைக் கழகத்தமிழ் இலக்கியத்துறையில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக ஓர் ஆய்வினை மேற்கொண்டேன். அந்த ஆய்வினை, தற்பொழுது நூலாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவ் ஆய்விற்கு மேற்பார்வையாளராக இருந்த தமிழ் இலக்கியத்துறையின் பேராசிரியரும் தலைவருமான அமரர் ந. சஞ்சீவி அவர்களை நினைத்துப் பார்க்கிறேன்; கண்கள் பனிக்கின்றன.

இவ் ஆய்வினை மேற்கொள்வதற்கு உறுதுணையாக இருந்த முன்னாள் தமிழ் இலக்கியத்துறையின் பேராசிரியரும் இந்நாள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமான முனைவர் பொன். கோதண்டராமன் அவர்களுக்கும் முனைவர் கு. மோகனராசு அவர்களுக்கும் நன்றியினைச் செலுத்த கடமைப்பட்டுள்ளேன்.

எனையீன்ற பெற்றோர்களான திரு. நந்திகௌடர், திருமதி கங்கியம்மாள் அவர்களுக்கும், என் அண்ணன்மார்

திரு. நஞ்சுண்டன், திரு. தருமலிங்கம் ஆகியோருக்கும், எங்களை வாழவைக்கும் திரு. வி. ஆறுமுகம், திருமதி அம்பிகா அவர்களுக்கும், என் அத்தை திருமதி ஜானகி அவர்களுக்கும், இந்நூல் வெளிவரும் வேளையில் நன்றியுடன் எண்ணிப் பார்க்கிறேன். அவர் தம் பாத மலர்களுக்கு வணக்கம் செலுத்துகிறேன்.

இந்நூலுக்கு அழகியதொரு வாழ்த்துரை வழங்கிய புதுவை மாவட்ட ஆட்சியர் திருமிகு ந. இராஜசேகர், இ.ஆ.ப., அவர்கள் இலக்கிய ஆர்வலர். இளைஞர்களிடம் பொறுப்பை ஒப்படைப்பதில் நம்பிக்கை உடையவர். வருங்கால பாரதத்தை உருவாக்குவதில் மகாகவி பாரதியைப் போல் ஆற்றல் பெற்றவர். புதுவையில் அவரது இலக்கியப்பணி மகாகவி பாரதியைப்போல் ஆல்போல் வளர்ந்து வருவதைக்கண்டு மகிழ்ச்சியடையாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. அத்தகு ஆற்றல் பெற்ற ஓர் இலக்கியவாதியின் வாழ்த்துரையைப் பெற்றமைக்காகப் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

கவிஞரேறு வாணிதாசனாரின் இளவலும் தலைமைச் செயலகத்தில் சார்புச் செயலருமான திருமிகு (தி. ஜானகிராமன்) கவிதைச் செல்வர் கல்லாடன் அவர்கள் இந்நூலுக்கு அழகிய அணிந்துரையை வழங்கியுள்ளார்கள். கவிதைச் செல்வர் கல்லாடன் அவர்களைத் தமிழ்ச்செல்வர் என்றே அழைக்கலாம். தலைமைச் செயலகத்தில் தாய்மொழியாம் தமிழ்மொழியை அலுவல் மொழியாக்குவதில் அயராது உழைத்து வருபவர். அன்னாரின் அணிந்துரையைப் பெற்றமைக்காக உளமார மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ் இலக்கியம் வளம்பெற அவர் ஆற்றும் பணிகள் அளப்பரியன என்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

கலை பண்பாட்டுத் துறையின் இயக்குநர் திருமிகு. சி. சந்திரசேகர் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை இந்நூலுக்கு அணிசேர்க்கும் வகையில் அமைந்துள்ளது. அரசுத்துறையில் பணியாற்றினாலும் கலை, இலக்கியத்தின்பால் ஈடுபாடு உடையவராக அவர் விளங்குவது புதுவைக்குக் கிடைத்த நற்பேறு ஆகும்.

இந்நூலினை வெளியிட்ட சேகர் பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்கள் எங்கள் குடும்ப நண்பர். 'படகர் வாழ்வியல்' எனும் எனது ஆய்வேட்டினை நூலாக வெளியிடவேண்டும் எனும் விருப்பத்தை முதலில் வெளியிட்டார். பின்னர் அவரே நூலாகவும் வெளியிட முன்வந்தார்.

நல்ல நூல்கள் கண்டறிந்து வெளியிடும் ஒரே பதிப்பகம் சேகர் பதிப்பகம்தான். அப்பதிப்பகத்தின் வாயிலாக இந்த நூல் வெளிவருவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இலக்கிய வாழ்விலும், இல்லற வாழ்விலும் இணைந்து செயல்படும் என் கணவர் முனைவர் அ. கனகராசு அவர்கள் இவ் ஆய்வு நூலுக்கு அவருக்கே உரிய முறையில் மதிப்புரை வழங்கியுள்ளார். அச்சுப்படிகளை திருத்தம் செய்தவள் என் அருமை மகள் ஜெயஸ்ரீ. இவ்விருவரின் முயற்சியால், தூண்டுதலால்தான் இந்நூல் வெளிவந்துள்ளது.

புதுவையின் தமிழ் இலக்கிய உலகில் ஓர் இனிய வரவாக இந்நூல் அமைவதற்கு வாழ்த்திய நல்ல நெஞ்சங்களையும், வாழவைக்கும் தமிழையும் வணங்கி மகிழ்கிறேன்.

**க. பார்வதி**

# காணிக்கை



திரு. நந்தி கௌடர்
திருமதி. கங்கி அம்மாள்



சென்னை பல்கலைக் கழகத் தமிழ்த்துறை விழாவிற்கு வருகைதரும்
முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியுடன் பேராசிரியர் முனைவர் பொற்கோ
வரவேற்கும் மாணவிகளில் முகப்பில் நூலாசிரியை பார்வதி



நூலாசிரியை பார்வதி
கணவர் முனைவர் அ. கனகராசு, மகள் ஜெய்ஸ்ரீ



# முன்னுரை

இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான மலைத் தொடர்களில், எழுத்து வடிவம் இல்லாத மொழிபேசி, மேம்பாட்டு நிலைக்கு வராத மக்கள் வாழ்வதை நாகரிக முன்னேற்றம் அடைந்த இக்காலத்திலும் காணலாம். இவர்கள் மண்ணின் மணத்தோடு தமக்குத்தாமே தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் இயற்கையோடு இயைந்த வாழ்கையினர்.

சுனைகளும், பயன்மரங்களும், செடி கொடிகளும், மூலிகைகளும் கொண்ட பூக்கள் நிறைந்த நீலமலையில் வாழும் மலைவாழ் மக்களுள் 'படக இனமக்கள்' குறிப்பிடத் தகுந்தவராவர்.

தனித்த பண்பாட்டுச் சடங்குகளோடு வாழ்க்கை நடத்தும் இவர்கள் உழைக்கும் உழைப்பாளிகளாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

வெளி உலகிற்குத் தெரியாமல் வாழும் படக இன மக்களிடம் இனப்பற்று, நிலவுடைமை, சொத்தின் அடிப்படையிலான இரத்த உறவுகள், திருமண குடும்ப உறவுச் சடங்குகள், உள்ளூர் சிறப்புப் பேசுதல் எனக்

கட்டுக்கோப்பான நிலைகள் காணப்படுகின்றன. இத்தகைய சமூக அமைப்பின் கட்டுக்கோப்புகளிலிருந்து விடுபட்டு வேறொரு சமூக அமைப்பிற்குப் படக இனம் சென்றுகொண்டிருப்பதை இன்று காண முடிகிறது.

முந்தைய சமூக அமைப்பின் நிலைகொண்டு அதையே வாழ்வுக்கு நிலையாகக் கருதும் படக இன மக்கள் சிலர் இன்றும் உள்ளனர்.

மாறி வரும் மக்கள் பண்பாட்டு நாகரிகம். இவர்களையும் வீழ்த்தி, சமமான ஆண், பெண், குடும்ப உறவு, நாட்டுப்பற்று, முற்போக்குக் கருத்துக்கள் போன்ற புதுமைக் கூறுகளுக்கு உயிரூட்டும் நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

இத்தகைய புதிய மாற்றங்களைப் புரிந்துகொண்டு, இக்கால சமுதாயத்திற்கு ஏற்ப இவர்களின், செயல்பாடுகள், உறவுகள், தனிமனித வாழ்க்கைச் சிக்கல்கள், பண்பாட்டுக் கூறுகள் போன்றவற்றை வரலாற்று அடிப்படையில் தெளிவு படுத்துதல் இன்றிமையாதது.

இவ்வாய்வாளர் இவ்வினத்தைச் சேர்ந்தவர் என்பதாலும்; அவ்வினத்தின் வாழ்க்கைக் கூறுகளை அறிந்திருப்பவர் என்பதாலும், படக இன மக்களின வாழ்க்கை முறைகளை வேறு யாரும் இதுவரை ஆய்வுக்கு உட்படுத்தவில்லை. என்பதாலும், **'படகர்**

**வாழ்வியல்**' என்னும் தலைப்பில் இவர் ஆய்வினை மேற்கொண்டார். தாம் அறிந்திருந்த கருத்துக் கோவைகளுடன், தம்மின அறிஞர்கள், பாமரர்களின் கருத்துக்களைத் திரட்டி, வகுத்தும் தொகுத்தும் படகரின் வாழ்வியலை ஆய்வு நோக்கில் வழங்கியிருக்கிறார்.

இவ்வாய்வாளர் இத்தலைப்பினை ஆறு இயல்களாகப் பிரித்து அவற்றை ஆய்ந்துள்ளார். அவை,

*படகர் வாழ்வில் நீலமலையின் வளமும், மனித உறவுகளும்*

*படகர் வரலாறு*

*படகரின் உறவுமுறைகள்*

*படகர் விழாக்கள்*

*நம்பிக்கைகளும் சடங்குகளும்*

*மாறிவரும் படகர் வாழ்வு*

என்பனவாகும்.

முதல் இயலான 'படகர் வாழ்வில் நீலமலையின் வளமும் மனித உறவுகளும்'' என்னும் தலைப்பில் நீலமலையின் இயற்கை அமைப்பு, படக இனமக்களின் வாழ்க்கை நிலை, படகரோடு தொடர்புடைய பிர இன மக்களின் உறவுகள் முதலியவை தெளிவாக ஆராயப்படுகின்றன.

இரண்டாம் இயலான ''படகர் வரலாறு'' எனும் தலைப்பில் படக இனமக்களின் மொழி, தோற்றம்,

குடியேற்றம், இனப்பிரிவுகள், சமூக அமைப்புகள், உணவு, உடை, அணிகலன்கள், தொழில், பழக்க வழக்கங்கள் முதலானவை வரலாற்று அடிப்படையில் ஆராயப்படுகின்றன.

மூன்றாம் இயலான 'படகரின் உறவுமுறைகள்' எனும் தலைப்பில் படக இனமக்களின் குடும்பம், உறவு நிலைகள், உறவு முறைப் பெயர்கள், படகர் தமிழர் உறவு நிலை ஒப்புமைகள் ஆகியவற்றை விளக்கும் வகையில் ஆராயப்படுகின்றன.

நான்காம் இயலான 'படகர் விழாக்கள்' எனும் தலைப்பில் படக இன மக்களின் விழாக்கள், சமய மரபுகள், விழா கொண்டாடும் முறை, விழா வரலாறு ஆகியவை செறிவாக ஆராயப்படுகின்றன.

ஐந்தாம் இயலான 'நம்பிக்கைகளும் சடங்குகளும்' எனும் தலைப்பில் பண்டுதொட்டு படக இன மக்கள் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றி வரும் நம்பிக்கைகளிலும், சமயச் சடங்குகளிலும் விலக்க முடியாத ஈடுபாடு கொண்டு வாழ்ந்து வருகின்றவர் என்பதை கண்ணேறு கழித்தல், பேயோட்டுதல், திருமணச் சடங்குகள், முடியெடுத்தல், பெயர் வைத்தல், சாவுச் சடங்குகள் போன்றவை வாழ்வியல் நோக்கில் ஆராயப்படுகின்றன.

ஆறாம் இயலான ‘மாறிவரும் படகர் வாழ்வு’ எனும் தலைப்பில் படகர் வாழ்வில் மேலை நாட்டினரின் வருகை, அரசியல் சமுதாய மாற்றம், பிற இனமக்களின் தொடர்பால் ஏற்பட்ட பாதிப்புகள் போன்றன ஆராயப்படுகின்றன.

“படகர் வாழ்வியல்” என்னும் ஆய்வின்மூலம் அறிந்த முடிவான கருத்துக்கள் இறுதியில் ஆய்வு முடிவுகளாகக் கூறப் பெற்றுள்ளன.



### இயல் : ஒன்று

# படகர் வாழ்வில் நீலமலையின் வளமும் மனித உறவுகளும்

நீலமலை மாவட்டம் மலைகள் சூழ்ந்த மாவட்டமாகும். எங்கு நோக்கினும் மேகம் துயிலும் மலைகள் காட்சியளிக்கும்.

இம்மாவட்டத்தின் தென் எல்லையாகக் கோவை மாவட்டமும், மலையாள நாடும் அமைந்துள்ளன. கோவை மாவட்டம் கீழ் எல்லையாகவும் மலையாள நாடு மேல் எல்லையாகவும் விளங்குகின்றன. வட எல்லையாக மைசூர் நாடு அமைந்து அணி செய்கின்றது.[1]

நீலமலை மாவட்டத்தில் உள்ள வட்டங்கள் மூன்று. அவை கூடலூர், உதகமண்டலம், குன்னூர் என்பனவாகும்.

இவ்வட்டங்கள் ஒவ்வொன்றும் இயற்கை எழிலுடன் விளங்குவதோடு மக்கள் வாழ்வுக்கு ஏற்ற இயற்கையமைப்புகளையும் பெற்றிருக்கின்றன. இத்தகைய இயல்புகளையுடைய நீலமலை மாவட்டத்தில் படகர், தொதுவர், கோத்தர், இருளர், குறும்பர் முதலான பழங்குடி இனமக்கள் வாழ்கின்றனர்.

படகர்களுக்கும் மற்ற பழங்குடி இன மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இப்பழங்குடி இன மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையினர். அதனால் படகர் வாழ்வியலை அறியுமிடத்து நீலமலை மாவட்டத்தின் இயற்கையமைப்புகளையும் படகருடன் மற்ற பழங்குடி மக்களின் தொடர்பு நிலைகளையும் அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதனவாகும்.

## *நீலமலை மாவட்டத்தின் இயற்கையமைப்பு*

பயன்தரும் காடுகளையும், விவசாயத்திற்கு ஏற்ற மண்வளங்களையும், இதமான பருவ நிலைகளையும் நீலமலை பெற்றிருக்கின்றது. இவ்வியற்கைச் சூழல்கள் படகர் வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளன.

### *மலைக்காடுகள்*

காடுகள் நிறைந்த இடம் நீலமலையாகும். 2542.50ச.கி.மீ. பரப்பளவுள்ள நீலமலை மாவட்டத்தில் காடுகளே 577.885 சதுரமைல் பரப்பில் உள்ளன. இது ஏறத்தாழ மொத்தப் பரப்பில் பாதியாகும்.[2]

இக்காடுகளில் ''யூகலிப்டஸ்'' என்கிற கற்பூர மரம், சீகை மரம், சாம்பிராணி மரம், தேக்கு மரம், சந்தன மரம் போன்ற பலவகையான மரங்கள் அடர்ந்து காணப்படுகின்றன. இம்மரங்கள் பசுமையான இலைகளுடன் மிக அழகாகத் தோற்றமளிக்கின்றன.

தமிழ்நாட்டிற்கே உரிய மரஞ்செடி கொடிகளுடன் வெள்ளையர்கள் கொண்டுவந்த மரஞ்செடி கொடிகளும் நிறைந்தது நீலமலை. சான்றாக சைபர் மரம், குரோட்டன்ஸ் செடி முதலானவற்றைக் கூறலாம். இவை அழகாகவும் பயன் தருவனவாகவும் உள்ளன. பல செடிகள் மூலிகைகளாகப் பயன்படுத்தப் பெறுகின்றன.

காடுகளில் புல், பூண்டுகள் நிறைந்துள்ளன. இவை கால் நடைகளுக்கு உணவாகப் பயன்படுகின்றன.

காடுகளில் மான், முயல் காட்டுப்பன்றி, முள்ளம் பன்றி, காட்டு ஆடு, காட்டு எருமை முதலான விலங்குகள் வாழ்கின்றன. இவை மலை இன மக்களுக்கு உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றன.

காடுகளில் ஆங்காங்கே சுனைகள் நிறைந்துள்ளன. இவை கால்நடைகளின் தாகத்தைத் தணிக்க உதவுகின்றன.

குறிஞ்சிப்பூ, செம்பருத்திப்பூ, 'டேலியா' என்கிற ஒருவகைப் பூ, காட்டு மல்லிகை, காட்டு ரோசா முதலான பூக்கள் காடுகளில் ஆங்காங்கே பூத்து மிக அழகாகக் காட்சியளிக்கின்றன.

இவை அழகாகக் காட்சியளிப்பதோடு மூலிகைகளாகவும் பயன்படுகின்றன. காட்டு மல்லிகை போன்ற சிலவகை பூக்கள் மலருவதைக் கொண்டு பழங்குடியினர் நேரத்தைக் கணக்கிடுகிறார்கள்.

இவ்வாறு நீலமலைக் காடுகள் படகர் வாழ்விற்கு மிகுந்த பயனை அளிக்கின்றன. இம்மலைக் காடுகளில் உள்ள தாவரங்கள் ஒவ்வொன்றும் படகர்களுக்கும் மற்ற மலைவாழ் இனத்தவருக்கும் நன்மை தரும் தாவரங்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### *விவசாயத்திற்கு ஏற்ற மண்வளம்*

நீலமலை கரிசல்மண், செம்மண், களிமண், மஞ்சள்மண் என பலவகையான மண்வகைகளைப் பெற்றுள்ளது.

இவை கரடுமுரடான நிலங்களாக உள்ளன. இப்படிப்பட்ட நிலத்தை உழுது வளமாக்கிப் பயிரிடுகின்றனர். கரடு முரடான சிறுசிறு கற்கள் கலந்த மண்ணமைப்பு இங்கு இருப்பதால் மழையினால் அரிப்பு நிகழாமல் தடுக்க ஏதுவாக இருக்கின்றது.

இந்நிலங்களில் காப்பி, தேயிலை, உருளைக்கிழங்கு, ஆரஞ்சு, மாதுளை, மலைவாழை, காரட், பிட்ரூட், மரத்தக்காளி முதலானவை பயிரிடப்படுகின்றன. மேலும் சாமை, கோதுமை, கஞ்சே என்கிற ஒருவகைக் கோதுமை போன்ற தானிய வகைகளும் வெள்ளைப்பூண்டும் பயிரிடப்படுகின்றன.

விவசாயத்திற்கு பயனளிக்கும் வகையில் பைக்காரா, சேகாறு, குண்டாறு, காட்டேரி ஆறு முதலான ஆறுகள்

நீலமலையில் ஓடுகின்றன. இவற்றுள் நீளமான ஆறு பைக்காரா. இதிலிருந்து மின்சக்தி எடுக்கப்படுகின்றது.

நீலமலையின் நிலங்களை மக்கள் மண்வெட்டி, கொத்து முதலான கருவிகள் மூலம் உழுகின்றனர். நிலங்கள் சரிவாக உள்ளதால் அவர்கள் நிலத்தைப் பண்படுத்துவதற்கு மாடுகளைப் பயன்படுத்துவதில்லை.

## இதமான பருவநிலை

நீலமலையின் பருவநிலை உடலுக்கும் உள்ளத்துக்கும் உகந்ததாக உள்ளது. இளைத்த உடலைத் தேற்றும் வன்மையும், களைத்த உள்ளத்துக்குச் சுறுசுறுப்பூட்டி மகிழ்ச்சி தரும் தன்மையும் நீலமலைக்கு உண்டு. அதனால் சுற்றுலாப்பயணிகள் பலர் நீலமலையை நாடி வருகிறார்கள், துன்பநீக்கமும் இன்ப ஆக்கமும் பெற்றுத் தெளிவு அடைந்து செல்கிறார்கள்.

நீலமலை மாவட்டம் கடல்மட்டத்திற்கு மேல் 2500 மீட்டர் உயரம் உள்ளது.[3]

இம்மாவட்டம் அவ்வளவு உயரத்தில் இருந்தபோதிலும் அங்கும் மழை பெய்யாத காலமும் உண்டு. சனவரி முதல் மே வரை மழையே பெய்யாது: சூன் முதல் டிசம்பர் வரை மழை பெய்யும். அதிலும் சூலை முதல் அக்டோபர் வரை அடைமழை பெய்யும். இதற்குக் காரணம் வடகிழக்குப் பருவக்காற்றே ஆகும்.

இக்காலத்தில் கூடலூர் வட்டத்தில் மட்டும் அதிகமாக மழைபெய்யும்.

இத்தகைய பருவநிலை உருளைக்கிழங்குப் போன்ற பயிர் உற்பத்திக்குப் பெரிதும் தேவையாகிறது. தேயிலை, காப்பி முதலான பயிர்வகைகளுக்கும் இப்பருவநிலை உகந்ததாக உள்ளது.

நீலமலை மாவட்டத்தில் உள்ள மலைநகரங்களில் குறிப்பிடத்தகுந்த நகரம் 'உதகை'. இது ஒரு சிறந்த சுற்றுலா இடமாக உள்ளது. இதன் உயர்ந்த வெப்பம் 75°F. குறைந்த வெப்பம் 30°F ஆகும்.[4]

வேனிற் காலத்தில் அங்கே மக்கள் கூட்டம் நிரம்பி வழியும். இம்மாவட்டத்தில் உதகை மட்டுமல்லாமல் குன்னூர், கோத்தகிரி, கூடலூர் எனும் நகரங்களும் சுற்றுலா இடமாக உள்ளன.

நீலமலையின் பருவநிலை, மக்கள் வாழ்வுக்குக், குறிப்பாக மலையின மக்களின் வாழ்வுக்கு ஏற்ப அமைந்துள்ளமை சிறப்பிற்குரியது. குளிர் பருவ நிலையில் படகர் உட்பட மலையின மக்கள் தங்கள் வீடுகளில் கணப்புகளைப் பயன்படுத்துகின்றனர்.





படகர்களின் ஊராட்சி மன்றங்கள் நடைபெறும் இடத்தின் தோற்றம்



படக ஆண்கள் துப்பட்டிப் போர்த்து இருக்கும் காட்சி



படகர் பெண்கள் உடை அணிந்திருக்கும் அழகு



உள்ளகத்தில் ஒதுக்குப்புறமான 'அகோட்டின்' காட்சி



படகர்களின் உள்ளகத்தையும் வெளியகத்தையும் பிரிக்கும்
'எடபாயில்' (இடைவாயில்) தோற்றம்



திருமணச்சடங்கின்போது மணப்பெண்ணுக்கு
மாலைமணி அணிவிக்கும் காட்சி



படகர்களின் சாவுச் சடங்கின்போது பிணத்தைச் சுற்றித் தேர் கட்டப்பட்டிருக்கும் காட்சி



இன்றைய படகப் பெண்கள் சேலை உடுத்துள்ள காட்சி

## படகருடன் மற்ற மலைவாழ் இனங்களின் தொடர்பு நிலைகள்

நீலமலை மாவட்டத்தில் படக இன மக்களோடு தொதுவர், கோத்தர், இருளர், குறும்பர் போன்ற மக்கள் மட்டுமல்லாமல், தற்காலத்தில் மலையாளிகள், முகம்மதியர்கள், தமிழர்கள், கன்னடியர்கள் போன்றோரும் வாழ்கின்றனர்.

## படகரும் குறும்பரும்

நீலமலையில் வாழும் பழங்குடிகளில் குறும்பர்களும் ஒரு பிரிவினர்.

படகர்கள் நீலமலைக்கு வருவதற்கு முன்பே குறும்பர்கள் நீலமலையில் இருந்தார்கள்.

குறும்பருக்குப் படகர்கள் அஞ்சுவார்கள். அவர்கள் பில்லி, சூனியம் செய்து கொன்றுவிடுவார்கள் என்னும் பயம் இன்றும் படகரிடம் காணப்படுகிறது.

படகர், தம் குடும்பத்தில் யாருக்காவது உடல்நிலை சரியில்லை என்றால் குறும்பரின் உதவியை நாடுவர். பேய், பிசாசுகள் என்ற நம்பிக்கை அடிப்படையிலான உடற்சோகைகளுக்கும் குறும்பர்களின் உதவியைப் படகர்கள் நாடுவர். சில சமயங்களில் அவர்கள் படகர்களின் கோபத்திற்கு ஆளாகிக்

கொல்லப்பட்டிருக்கின்றனர். குறும்பர், படகர் ஊருக்குப் புறம்பேதான் இருப்பர்.

பண்டைக்காலத்தில் ஒவ்வொரு படகக் குடும்பத்தாரும், ஒரு சிறிய தொகையைக் குறும்பர்களுக்குக் கொடுப்பதுண்டு. வீடு கட்டினாலும், திருமணம் போன்ற விழாக்கள் நடந்தாலும், சாவு முதலிய நிகழ்ச்சிகள் நடந்தாலும் குறும்பருக்குப் பணம் கொடுப்பது கடமை. அவ்வாறு பணம் கொடுக்காவிட்டால் குறும்பர்கள் பில்லி, சூனியம் செய்துவிடுவர் என்று படகர் அஞ்சுவர்.

படகர்களுக்கும் குறும்பருக்கும் நடை, உடை, பாவனை, மொழி ஆகியவற்றில் வேறுபாடுகள் உண்டு.

படகர், குறும்பருக்குத் தானியங்கள் கொடுப்பார்கள். படகர் குறும்பரை வேலையாட்களாக வைத்திருக்க மாட்டார்கள். மார்ச்சு மாதம் நடைபெறும் விதைப்புப் பண்டிகையிலும் சூன்மாதம் நடைபெறும் தெவ்வப் பண்டிகையிலும் குறும்பர்கள் கலந்து கொள்வார்கள்.[5]

### படகரும் தொதுவரும்

நீலமலையில் வாழும் மற்றொரு பழங்குடியினர் தொதுவர்கள். படகரும் தொதுவரும் வெவ்வேறு இனத்தவர். என்றாலும் படகருக்கும் தொதுவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

படகர் போர்த்துக்கொள்ளும் போர்வைக்குப் பூ வேலைப்பாடுகளைத் தொதுவர்கள் செய்து தருவார்கள். இதன் பொருட்டுப் படகர் தொதுவர்களுக்குத் தானியங்கள் முதலியன கொடுப்பர். படகரும் தொதுவரும் ஒரே மாதிரியான உடைகளை அணிந்திருப்பர்.

படகரைத் தொதுவர் சந்திக்கும்போது தொதுவர்தான் முதலில் படகருக்கு வணக்கம் செய்ய வேண்டும்.

படகருக்கும் தொதுவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தாலும் தங்களுக்குள் திருமண உறவு வைத்துக்கொள்ளமாட்டார்கள்.

படகரின் விழாக்களுக்குத் தொதுவர்கள் வருவார்கள். படகர்கள் பலகாரங்கள், தானியங்கள், முதலியன தொதுவருக்குக் கொடுப்பார்கள்.

படகர்கள் தொதுவர்களுக்குத் தானியங்களைப் பண்டமாற்று முறையில் அளிக்கின்றனர். அதற்குப் பதிலாக பால், நெய் போன்றவற்றைப் பெறுகின்றனர். தொதுவர்கள் அளிப்பது மிகச் சொற்பமானதே. இதனால் அதிகப் பயன் அடைபவர்கள் தொதுவர்களே. இவர்களுக்கிடையில் நிலவிவரும் பண்டமாற்று முறை நிலையானது.[6]

தொதுவர்களுடைய உணவு பால், மோர், நெய் முதலியனவாகும். அந்த உணவுப்பழக்கம் தென்னிந்தியாவிலுள்ள மற்ற மக்களிடமிருந்து மாறுபட்டது. தொதுவர்கள் தானியங்களை விரும்பியபோது படகர்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர். இந்தப் பழக்கம் இன்றும் சில இடங்களில் இருப்பதைக் காணலாம். பண்டைக் காலந்தொட்டே இந்தப் பண்டமாற்று இவர்கள் வாழ்வில் இரண்டறக் கலந்து இருப்பதைக் காணமுடிகிறது.[7]

### *படகரும் கோத்தரும்*

நீல மலையில் வாழும், மலைவாழ் மக்களுள் கோத்தரும் ஒரு பிரிவினர். படகரும் கோத்தரும் வேறு வேறு, இனத்தவர். இவர்களுக்குள் நட்பு உண்டு.

படகர் வீடுகளில் நடக்கும் திருமணம், சாவு முதலியவற்றில் இசைக்கருவிகள் இசைக்கக் கோத்தர்கள் வருவார்கள்.

படகர், கோத்தரைத் தாழ்ந்த இனத்தவராகக் கருதுவர். படகரில் ஒருவன் பால்கறக்கச் செல்லும் போது அவனைக் கோத்தரில் ஒருவன் தொட்டுவிட்டால் அவன் பால் கறக்கச் செல்லாது, குளித்து முழுகிய பின்னரே பால் கறக்கச் செல்வான்.[8]

கோத்தரிடமிருந்து படகர்கள் உழவுக்கு வேண்டிய இரும்பிலே செய்யப்பட்ட மண்வெட்டி,

கோடாரி, சுத்தி, கொத்து, முள் முதலான கருவிகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

படகரைப் போலவே கோத்தரும் தம் ஊரைச் சுற்றிலும் உள்ள நிலங்களில் உருளைக்கிழங்கு, கோதுமை, கீரை, சாமை, வெள்ளைப்பூண்டு முதலியவற்றை விளைவிக்கின்றனர்.

## படகரும் கன்னடியரும்

படகரும் கன்னடியரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். மைசூரில் ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக நீலமலைக்கு வந்தவர்கள் படகர்.

படக மொழியினைக் கன்னட மொழியின் வட்டார வழக்காகவே பல ஒப்பியலறிஞர்கள் கருதுகின்றனர்.[9] கன்னடியரையும் 'கவுடர்' என்றழைப்பர்.

கன்னடியர், படகர் இவர்களின் பழக்க வழக்கங்கள் ஒத்துக் காணப்படுகின்றன. படகரும் கன்னடியரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இவர்கள் தங்களுக்குள் திருமணம் செய்துகொள்ள மாட்டார்கள்.

கன்னடியரும் படகரைப் போல வேளாண்மைத் தொழில் செய்து தேவையான பொருள்களை விளைவித்துக் கொள்கின்றனர். இவர்கள் உதகைப் பகுதியில் அதிகமாக இருக்கின்றனர்.

## படகரும் கிறித்துவப் படகரும்

கிறித்துவப் படகரும் நீலமலையில் வாழ்கின்றனர். படகர்கள் இவர்களை திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள். அதுபோலக் கிறித்துவப் படகரும் படகரை மணம் செய்துகொள்ள மாட்டார்கள். படகர் கிறித்துவச் சமயத்தில் சேர்ந்தால் மணந்துகொள்வார்கள்.

கிறித்துவப் படகர்கள் பெரும்பாலோர் நகரங்களில் வாழ்பவர்கள். படகரைவிட இவர்களில் பெரும்பாலோர் படித்தவர்கள் ஆவர்.

கிறித்துவப் படகர்களும் படகமொழிதான் பேசுவார்கள். இதில் தமிழ் சற்று அதிகமாக கலந்து காணப்படும். கிறித்துவப் படகர் நடை, உடை பாவனை முதலியவற்றில் படகரினின்று சற்று வேறுபட்டிருப்பார்கள்.

கிறித்துவப் படகர்கள் எல்லாக் கிறித்துவரிடமும் மணவுறவை வைத்துக் கொள்வார்கள். ஆனால் படகர்கள் வேறு இனத்தவரை மணம் செய்துகொண்டால் தம் சாதியிலிருந்து விலக்கி விடுவார்கள். இதுதான் படகருக்கும் கிறித்துவப் படகருக்கும் உள்ள வேறுபடாகும்.

# குறிப்புகள்

1. அ.திருமலை முத்துசுவாமி, மலைவாழ் மக்கள் (நீலமலை).ப.5.

2. அ.திருமலை முத்துசுவாமி, மலைவாழ் மக்கள் (நீலமலை).ப.9.

3. நீலமலை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது.

4. அ.திருமலை முத்துசுவாமி, மலைவாழ் மக்கள் (நீலமலை), ப.7.

5. Edgar Thurston, **Castes and Tribes of Southern India,** Vol. I, p.94.

6. M.B. Emeneau, **Collected Papers,** p.304.

7. M.B. Emeneau, **Collected Papers,** p. 304.

8. M.B.Emeneau **Collected papers** p. 328.

9. ஜி. ஜான் சாமுவேல், திராவிட மொழிகளில் ஒப்பாய்வு - ஓர் அறிமுகம், ப. 39.


UDHAGAMANDALAM
(Ooty)
TO MYSORE MUDUMALAI
N
TO H.P.F.
TO KOTAGIRI
TO DODDABETA
TO COONOOR
TO METTUPALAYAM
LOVEDALE STATION
Marlimund Reservoir
KODAPPAMUND
Botanical Gardens
Golf Course
Tamizhagam
St. Stephens Church
Ladies Club
Assembly
Collectors Office
Anna Stadium
Arts College
Ooty Club
St. Memorial Hospital
Hotel Nataraj
Ooty Lake
Race Course
YWCA
St. Thomas Church
Baroda Palace
Hotel Palace
Hotel Dasprakash
MISSIONERY HILL
ANNA NAGAR
DAIRY FARM
KULISHOLA
SAVOY HOTEL
TUDOR HALL RD
HAVELOCK RD
KANDAL BAZAAR ROAD
SOUTH LAKE ROAD
LAKE ROAD
OLD OOTY
OLD OOTY ROAD
KOTAGIRI RD
HOBART ROAD
LOVE DALE ROAD
GODAVARI HOUSE ROAD
ELK HILL ROAD
ELK HILL
THALAVATTI MUND
FERNHILL PALACE
BISHOPS DOWN
COONOOR ROAD
STONE HOUSE
HOSPITAL ROAD
UPPER BAZAAR ROAD
NORTH WOOD COCK ROAD
ANICORAI RD
WOODHOUSE ROAD
1
2
3

## இயல் : இரண்டு

# படகர் வரலாறு

மனித சமூகம் ஒன்றின் வரலாறு அதன் தொன்மை இருப்பிடம், குடியேற்றம் பல்வேறு வகையில் மாறுபடுகின்ற பொருளியல் நிலைகள், குடும்ப உறவுகள், பழக்கவழக்கங்கள் முதலானவற்றால் அறியப்படுகின்றது.[1]

படகர் இன மக்களின் தொன்மை இருப்பிடம், குடியேற்ற நிலைகள், பொருளியல் மாற்றங்கள், பழக்க வழக்கங்கள் முதலானவற்றை ஆய்வதன் மூலம் அச்சமூகத்தின் வரலாற்றினை அறியலாம்.

### *தொன்மை இருப்பிடமும் குடியேற்றமும்*

படகர்களின் தொன்மை இருப்பிடம் நீலமலையன்று. அவர்கள் மைசூரிலிருந்து வந்தவர்கள். இதற்கு மொழி அடிப்படையிலும், நாட்டுப்புறக் கதைகள் மூலமும், பழந்தமிழ் இலக்கியம் கொண்டும் சான்றுகள் காட்டலாம்.

## ***மொழியியல் மூலமும் பழந்தமிழ் இலக்கியம் கொண்டும் பெறப்படுபவை***

படகர் கர்நாடகத்திலிருந்து வந்தவர்கள் என்பதால் அவர்களின் மொழியும் கன்னட மொழிச் சார்புடையதாக உள்ளது. படகர் மொழியில் பயின்று வரும் சொல்லும் எழுத்தும் பண்டைய கன்னட மொழி நூல்களில் மட்டும் உள்ளவை. பழங்கன்னட மொழியில் பயின்ற எழுத்துக்களில் சிலவும் சொற்களில் சிலவும் பிற்காலத்தில் வழக்கொழிந்தன. இவ்வாறு வழக்கொழிந்த காலத்தைக் கொண்டு படகர்களின் புலப்பெயர்ச்சியைக் கால எல்லைக்குக் கொண்டு வரலாம்.[2]

படகர் மொழியில் இரண்டு ‘ந’கரங்கள் வருகின்ற வழக்கு இலக்கண ஆசிரியர் கேசி. ராசாவின் காலத்தோடு வழக்கொழிந்தது. இவ்வாசிரியர் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். படகர் மொழியில் மலைச் சிகரங்களுக்கு வழங்கும் ‘பெட்டா’ என்ற சொல் கி.பி.13ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ‘சப்தமணி-தர்ப்பணம்’ என்ற நூலில் வழங்கப்படுகிறது. அதற்குப் பின் அச்சொல் ‘பெட்டு’ என்றும் மருவி வழங்கப்படுவதிலிருந்து படகரின் புலப்பெயர்ச்சியை ஊகிக்கலாம்.[3]

பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் வடுகர்தான் படகர் என்பதற்கு மொழியியல் அடிப்படையில்

சான்றுகள் உள்ளன. தமிழில் வகரம் கன்னடத்தில் பகரமாகத் திரியும் என்பதனை:

வீடு - பீடு (bidu)

வேலூர் - பேலூர் (belur)

எனும் எடுத்துக்காட்டுகள் மூலம் அறிய்லாம்.

பழந்தமிழ் இலக்கியத்தில் 'வடுகர்' என்னும் மரபினர் பற்றிய குறிப்புக்கள் மிகுதியும் பயின்றுவரக் காணலாம். அவர்கள் தமிழகத்தின் வட எல்லையில் வாழ்ந்தவர்கள். வடுகர் வடதிசையிலிருந்து வந்தவர்கள் என்பதை 'வடவடுகர் வாளோட்டிய'[4] என்னும் இலக்கியச் சொற்றொடரால் அறியலாம்.

கல்லா நீள்மொழிக் கதநாய் வடுகர்[5] என்றும்,
கடுங்குரல் பம்பைக் கதநாய் வடுகர்[6]

என்றும் வடுகர்கள் கூறப்படுகிறார்கள். இதனால் இவர்கள் கல்வியில் நாட்டமின்றி வாழ்ந்தவர் என்றும், திருந்தாமொழியைப் பேசினர் என்றும் கொள்ளலாம்.

கதநாய் வடுகர் என்பது இவர்கள் வேட்டுவத் தொழில் மேற்கொண்டிருந்தனர் என்பதை விளக்கும். இன்றும் படகர் சடங்குகள் சிலவற்றில் வேட்டைத் தொழிலுக்கான கருவிகள் இடம் பெறுவதைக் காணலாம்

பெரும்பாலான தமிழ் இலக்கியப் பாடல்கள் வடுகரை மொழி பெயர் தேயத்தோடு தொடர்படுத்திப் பேசுகின்றன.

> **கொடையமை பகழித் துவன் றுநிலை வடுகர்**
> **பிழியார் மகிழார் கலிசிறந் தார்க்கும்**
> **மொழிபெயர் தேஎம்....**[7] (அகம். 295)

உடல்வலு உடைய வடுகர் போர்களில் வெற்றி பெற்று வில்லையும் அம்பையும் உடையராய்க் கள்குடித்துக் களிப்புடன் ஆடுவர் என்பது இவ்வடிகளால் புலப்படும் செய்தியாகும். மேலும் வடுகர் வேற்றுமொழி பேசுபவர் என்பதும் அறியப்படுகிறது.

தமிழகத்தின் வடபகுதி மாடுபிடி சண்டைக்குப் பெயர்போனது. அதனை ஆண்ட அதியன் மலையன், பல்லவன் போன்ற அரச மரபினர் மாடுபிடி சண்டையில் ஈடுபட்டிருந்தனர் என்பது சங்கஇலக்கியத்தால் அறியப்படும் செய்தி.

தமிழகத்தின் வட மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பண்டைய நடுகற்கள் மாடுபிடி சண்டையில் மாண்டவர்களுக்கு எடுக்கப்பட்டவை என்பதும், இதுபோன்றே மாடுபிடி சண்டையில் வடுகரும் ஈடுபட்டிருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்குத் தகுந்தவாறு அகநானூற்றுப் பாடல் ஒன்று வடுகர் நிரை கவர்ந்ததை விரிவாகவே பேசுகின்றது.

**ஆர் இருள் நடுநாள் ஏர்ஆ உய்ய**
**பகை முனை அறுத்துப் பல்இனம் சாஅய்**
**கணம் சால் கோவலர் நெடுவிளிப் பயிர் அறிந்து**
**இனம் தலைத் தருஉம் துளங்கு இமில்நல் ஏற்றுத்**
**தழுஉப் பிணர் எருத்தம் தாழப் பட்டிய**
**அம் தூம்பு அகல் அமைக் கமஞ்செலப் பெய்த**
**துறுகாழ் வல்சியர் தொழு சுறை வெளவி**
**கன்றுடைப் பெருநிரை மன்று நிறை தருஉம்**
**நேரா வன்தோள் வடுகர்...**[8] (அகம். 213)

வடுகர் நிரை கவர்ந்து பலியிடும் காட்சியைச் குறிக்கின்றது.

வடுகர் தமிழகத்துக்கு வந்தது பற்றியும் குறிப்பாகத் தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் பண்டைக்காலந்தொட்டே குடியேறினர் என்பது பற்றியும் இலக்கியங்களாலும் கல்வெட்டுகளாலும் அறியலாம்.

**முரண் மிகு வடுகர் முன்னுற மோரியர்**
**தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு**
**விண்ணுற ஓங்கிய பனிஇரு குன்றத்து**
**ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த**
**சுறை இறந்து அவரோ சென்றனர்**[9] (அகம். 214)

என்னும் அகநானூற்றுப் பாடல் வம்ப மோரியர் தமிழகத்தில் படையெடுத்து வருவதற்கு வடுகர்கள் வழியமைத்தனர் என்பதைக் கூறுகின்றது. இப்பாட்டில் வரும் ‘விண்ணுற ஓங்கிய பனிஇருங் குன்றத்து’ என்னும் தொடர் கொடுமுடிகளையும், மிகுந்த பனியையும்

கொண்ட நீலமலையைத்தான் சுட்டுகின்றதாகக் கருதலாம்.

மேலும் நீலமலையிலுள்ள பண்டைய புதை குழிகளுக்கு 'மோரியமனே' என்று இப்போது பெயர் வழங்கப்படுகிறது. இதனால் நீலமலைக்கும் வடுகருக்கும் மோரியருக்கும் உள்ள பண்டைய தொடர்பு வலியுறுத்தப்படுகிறது.

சங்க இலக்கியம் கூறும் மோரியர் கங்கை நதிக்கரையிலிருந்து ஆட்சி செய்த மோரியர் என்று வரலாற்று ஆசிரியர் கருதுவர்.

தக்காணத்தில் மௌரியர் என்ற மற்றொரு பழங்குடியினர் வாழ்ந்தனர். அவர்களும் வடுகர் வாழ்ந்த பகுதிக்கு அருகிலேயே வாழ்ந்தனர். இந்த பழங்குடியே சங்கஇலக்கியம் கூறும் மோரியர்.

வடுகர்கள் பல்வேறு காலங்களில் தமிழகத்திற்குச் சிறப்பாக நீலமலைக்கும் கொங்கு நாட்டிற்கும் குடிபெயர்ந்துள்ளனர். சுந்தரர், சேர நாடு செல்லும்போது கொங்குநாடு வழியாகத்தான் சென்றார். திருமுருகன் பூண்டி இறைவன் மீது சுந்தரர் பாடிய பதிகத்தில், 'கொடுகு வஞ்சிலை வடுக வேடுவர் வாழுமிடம் முருகன் பூண்டி' என்று கூறுவர். அதனால் சுந்தரர் காலத்தில் வடுகர் கொங்கு நாட்டிலும் குடியேறினார்கள் என்று கொள்ள வாய்ப்புண்டு.[10]

நீலமலையில் உள்ள படகர்வாழ் ஊர்கள் கர்நாடக மாநிலத்திலுள்ள ஊர்கள் பலவற்றுடன் ஒப்பிடத் தக்கனவாய் உள்ளன. *ஆராய்ச்சி* என்னும் இதழில் நீலமலை படகர்வாழ் ஊர்களையும் அதே பெயர் கொண்ட கர்நாடக மாநிலத்து ஊர்களையும் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளன. இவ்விதழில் 400க்கும் அதிகமான ஊர்கள் ஒப்பிட்டுத் தரப்பட்டுள்ளன.[11] குடிபெயர்ந்து வரும் மக்கள் தாங்கள் முன்னர் வாழ்ந்த ஊர்களின் பெயர்களையே செல்லும் தேயத்திலும் இட்டு வழங்குவர் என்பது மரபு. அதனால்தான் ஒரே பெயர் கொண்ட ஊர்கள் பல இருக்கின்றன.

இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்கள் மூலம் படகரின் தொன்மை இருப்பிடத்தையும், புலம்பெயர்ச்சிக் கால நிலைகளையும், குணவியல்புகளையும் உணரலாம்.

### *நாட்டுப்புறக் கதைகள் மூலம் உணர்பவை*

படகர் நீலமலைக்குக் குடிபெயர்ந்ததற்கான காரணம் பற்றிக்கூறும் மரபுவழிக் கதைகள் பல வழங்கி வருகின்றன.

கன்னட நாட்டில் ஏற்பட்ட பஞ்சம், உள்நாட்டுக் குழப்பம், அரசியல் சீர்குலைவு ஆகியவற்றின் காரணமாக மைசூர் மக்கள் நீலமலைக்குக் குடியேற நேர்ந்தது என்னும் கருத்துக்கிணங்க இக்கதைகளின் உட்பொருள் இருப்பதைக் காணலாம்.

படகர்கள் முகம்மதிய அரசர் காலத்தில் அரசியல், பஞ்சம் காரணமாக மைசூரிலிருந்து ஓடி வந்தபோது தங்கள் குழந்தையை ஏணையில் விட்டுவிட்டு வந்துவிட்டதாக ஒருகதை கூறப்படுகிறது. இதை உறுதிப்படுத்துவதாக இன்று நீலமலையில் வாழும் படகர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஏணையோ, தொட்டிலோ போடுவதில்லை. மடியில் வைத்துதான் தூங்க வைக்கின்றனர். இக்காரணத்தைக் கொண்டு படகர்கள் மைசூரிலிருந்து வந்தவர்கள் என்று கருதலாம்.

படகர் நீலமலைக்குக் குடிபெயர்ந்ததற்கான மற்றொரு கதையும் உண்டு. கதையின்படி 'தலைமலை'ப் பகுதியில் ஏழு சகோதரர்கள் அவர்களுடைய சகோதரியுடன் வாழ்ந்து வந்தனர். முகம்மதிய அரசன் ஒருவன் இவர்களின் சகோதரியை மணம் முடிக்கக் கேட்டான். அவனுக்கு மணம் முடிக்க ஒப்பாத அவர்கள், சகோதரியை அழைத்துக்கொண்டு நீலமலையிலுள்ள 'பேட்லாட' என்ற இடத்தில் குடியேறி வாழ்ந்து வந்தனர்.

அன்று அவர்கள் வந்த நினைவுக்காக அவர்கள் வாழ்ந்த குகைப்பாறையில் ஏழு ஆண்கள் ஒரு பெண் உருவத்தை செதுக்கி வைத்தனர்.

சில நாட்களுக்குப் பின் இவர்களைப் போலவே மைசூரிலிருந்து வந்த படகர் நீலமலையில் இருப்பதைக் கண்டார்கள். இவர்களுக்குப் பின்னும் பலர் நீலமலைக்கு

வந்தனர். அன்று வந்த சகோதரர்கள் ஏழு திசையில் பிரிந்து சென்று பயிர்த்தொழில் செய்ய ஆரம்பித்தனர். அந்தப்பெண்ணை மட்டும் ஜெக்கனாரையிலிருக்கும் ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுத்தனர்.[13] இவ்வாறு கதை வழங்குகிறது.

இக்கதையிலிருந்து முகம்மதிய அரசர் காலத்தில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்கள் மூலம் படகர் நீலமலைக்கு வந்தனர் என உணரலாம்.

இவ்வாறான கதைகள் மூலம் மைசூர் நாட்டில் ஏற்பட்ட பஞ்சம், கொள்ளை, நோய், கலகம் முதலான காரணங்களால் நீலமலைக்குக் குடிபெயர்ந்திருக்கலாம் என உணரலாம்.

இந்தப் புலம்பெயர்ச்சி மைசூர் மாநிலத்தில் இலிங்காயத்த நெறி தோன்றி நிலைபெற்ற பின் நடந்திருத்தல் வேண்டும்.

காரணம் இலிங்காயத்து நெறியின் தோற்றம் கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். ஆகவே படகர் நீலமலையில் குடியேறிய காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

பாதிரியார் சிலர் மலையாளத்திலிருந்து கி.பி. 1602இல் நீலமலைக்கு வந்து அம்மலையின் தெற்குப் பகுதியில் குடியேறினர். அவர்கள் வந்த காலத்தில்

அப்பகுதியில் படகர் இலிங்காயத்து நெறியினராக வாழ்ந்தனர் எனப் பாதிரியார்கள் குறித்துள்ளனர்.[14]

இவ்வாறு படகர்களின் தொன்மை இருப்பிடம், அவர்களின் புலம்பெயர்ச்சி ஆகியவற்றை மொழியியல் அடிப்படையிலும், பழந்தமிழ் இலக்கியங்களின் மூலமும், நாட்டுப்புறக் கதைகள் கொண்டும் காணமுடிகிறது. தவிர, படகர் பற்றி வரலாற்றுச் செய்திகள் கல்வெட்டுகள் மூலமும் தெரியவருகின்றன.

கர்நாடக மாநிலத்தில் கிடைக்கின்ற கல்வெட்டுகளில் கி.பி. 12ஆம் நூற்றாண்டிலிருந்து 13ஆம் நூற்றாண்டு வரை படகர் பற்றிய குறிப்புகள் வருவதாக ஆய்வளர் கூறுகின்றனர். கர்நாடகத்தில் உள்ள பெயர்ளும் படகர் ஊர்ப் பெயர்களும் ஒப்புமை உடையவனாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.[15]

## ***படகரின் குடிப்பெயர்களும் சிறப்புப் பெயர்களும்***

படகரிடையே பல பிரிவுகள் உள்ளன. படகரைப் பற்றி ஆராய்ச்சி நடத்திய பேரறிஞர்கள் அப்பிரிவுகளை வகைப்படுத்திக் குறித்துச் சென்றுள்ளனர். படகரினத்தில், உடையர், ஆருவர், அதிகாரிகள், கணக்கர், படகர், தொரையர் என ஆறு பிரிவுகள் உள்ளன. இவற்றில் 'தொரையர்' என்னும் பிரிவினர் தாழ்ந்தவராகக் கருதப்படுவர்.[16]

படக ஆண்களைக் 'கவுடர்' என்று பட்டம் சொல்லி அழைக்கின்றனர். தமிழில் கவுண்டர் என்பதே கன்னட மொழியில் கவுடர் என்று அழைக்கப்படுகிறது. கி.பி. 8, 9 ஆம் நூற்றாண்டுகளிலிருந்து தமிழகத்திலும் கர்நாடகத்திலும் கிடைக்கின்ற கல்வெட்டுகளில் 'காமிண்டன்' என்ற சொல் பயின்றுவரக் காணலாம்.

'கா' என்ற சொல் பிராகிருத மொழியில் கிராமத்தைக் குறிக்கும்; மிண்டன் என்ற தமிழ்ச்சொல் வீரன், தலைவன் என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது. இரண்டு சொற்களும் சேர்ந்துதான் காமிண்டன் என்று வழங்கப்பட்டது. அதனால் காமிண்டன் என்ற சொல் ஊரைப் பாதுகாப்பவன் என்ற பொருளில் வழங்கியது என்று கொள்ளலாம்.

காமிண்டன் என்ற சொல்லே பின்னாளில் கவுண்டர் என்றாகி, பின்னர் 'கவுடர்' என்றும் வழங்கப்படுகிறது.[17]

***படகரின் ஊராட்சி முறைகள்***

படகர்கள் மைசூரிலிருந்து குடி பெயர்ந்து நீலமலையிலுள்ள பேட்லாடா, தொதநாடு, பூசைக்குன்னூர், கேத்தி, குந்தா முதலிய இடங்களில் முதன் முதலில் தங்கி வந்தனர். பின்னாளில் இவ்வூர்களிலிருந்து பல ஊர்களையும் ஹட்டிகளையும் ஏற்படுத்தி நீலமலை முழுவதும் படகர் பரவினர்.

இவ்வூர்களில் சில, படகர் சமுதாய அமைப்பில் நாட்டுப் பிரிவுகளாகவும் விளங்குகின்றன.

அந்நாட்டுப் பிரிவுகள் பரங்கி நாடு, குந்தா நாடு, மேற்கு நாடு, தொத நாடு என்பனவாகும். இந்த நாட்டுப்பிரிவே மணவினை உறவுகளுக்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

சான்றாக, பரங்கி நாட்டைச் சார்ந்த ஆண் மேற்கு நாட்டைச் சார்ந்த பெண்ணை மணந்து கொள்ளலாம். குந்தா நாட்டைச் சார்ந்த ஆண் தொத நாட்டைச் சார்ந்த பெண்ணை மணந்து கொள்ளலாம். ஆனால் குந்தா நாட்டைச் சார்ந்த ஆண் குந்தா நாட்டைச் சார்ந்த பெண்ணை மணத்தல் கூடாது.[18]

படகர் ஊர்கள் ஒவ்வொன்றிலும் ஓர் ஊர்ச்சபை இருக்கும். ஊரில் ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் ஊராட்சியினரே தீர்த்து வைப்பார்கள். காவல் நிலையத்திற்குச் செல்ல மாட்டார்கள். ஊராட்சியர் கூறுவதுபோல்தான் ஊரார் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சாதாரணச் சண்டையோ, சிக்கலோ, அண்ணன் தம்பி சொத்துத் தகராறோ எது என்றாலும், மணியகாரர் அல்லது கிராமத்துப் பெரிய மனிதர்கள் ஒன்றாக ஊர்க் கோவிலிலுள்ள ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து இவ்வழக்கை விசாரித்து, சிக்கலைத் தீர்த்து வைப்பார்கள். இது ஊருக்குள்ளேயே நடைபெறும் முறை.

பெரிய சிக்கலான தகராறுகளை 'நாக்கு பெட்டா' என்று சொல்லப்படும் பரங்கி நாடு, தொதநாடு, மேற்கு நாடு, குந்தா நாடு ஆகிய நாடுகளில் உள்ள ஊர்களில் வாழும் பெரியவர்கள் எல்லோரும் ஒரு பொதுவிடத்தில் ஒன்றாக அமர்ந்து அந்த வழக்கை விசாரித்துத் தீர்த்து வைப்பார்கள். அப்பொழுது குற்றவாளியிடம் தண்டனைத் தொகையாகப் பணம் வசூலிப்பார்கள்.

பஞ்சாயத்தாரின் தீரிப்பைக் குற்றவாளி ஏற்காமல் முரண்டு பிடித்தால் அவரைச் சாதியிலிருந்து ஒதுக்கி வைத்துவிடுவார்கள்.

மேலும் படகரில் ஒருவர், ஏதாவது தவறு செய்துவிட்டு, தான் அத்தவறைச் செய்யவில்லை என்று சொன்னால் அவரைச் 'சிக்கூர்' என்னும் ஊரில் உள்ள படகருக்கான கோயிலுக்குச் சென்று சத்தியம் செய்யும்படிக் கூறுவார்கள்.

உண்மையானவர் என்பதை உணர்த்த சிக்கூர் போய் அருவியில் நீராடி மாரியம்மன் கோயிலுக்குச் சென்று விளக்கை அணைக்கவேண்டும். இதிலிருந்து படகர்களின் ஆட்சிமுறையில் மனச்சாட்சிக்கு முக்கியம் கொடுத்திருப்பதை உணரலாம்.

மணியகாரர் என்னும் பட்டத்தை உடையவர், மரபுவழி வந்த ஊராட்சி முறையின் தலைவராய் விளங்குகிறார். இப்பதவி வகிப்பதற்கான உரிமை

தேர்தல் மூலம் வருவதில்லை. வழிவழியாக ஒரே குடும்பத்திலிருப்பவரே மணியகாரர் பொறுப்பில் இருப்பர்.

ஊரில் நடைபெறும் குடும்பப்பிணக்கு, மணவிலக்கு- இவை மணியகாரரின் தலைமையில் உள்ள ஊர்ச்சபையில் வழக்காடப்படும். கொலை தவிர மற்ற குற்றங்கள் அனைத்தும் இச்சபையே விசாரிக்கும். குற்றவாளியைச் சாதியிலிருந்து தள்ளி வைக்கவோ, தண்டனைத் தொகையாகப் பணம் தண்டவோ மணியகாரருக்கு உரிமையுண்டு.[20]

தமிழ் இலக்கியம் கூறும் ஊராட்சி முறையோடு படகரிடம் காணப்படும் ஊராட்சி முறை ஒப்பிடத் தக்கதாய் உள்ளது. இலக்கியங்களில் காணப்படும் மன்றம், பொதியில் போன்றவை பண்டைய மக்களாட்சி முறையினைத் தெரிந்துகொள்ள உதவுபவை.

சான்றோர் செய்யுட்கள் சிலவற்றில் அம்மன்றம் நடைபெற்ற தன்மை பேசப்படுகின்றது. நரைமூதாளர் அமர்ந்து நிகழ்த்திய வழக்குகள் பலப்பல. கோசர் அவையகம் பற்றியும், அது நடைபெற்ற தன்மையைப் பற்றியும் அகப்பாடல்கள் கூறும். இவ்வாட்சிமுறை விஜயநகர அரசர் காலம் வரை இருந்தது.[21]

பின்னர் மத்திய அரசு வலி குன்றிவிடவே நாட்டில் அமைதி குலைந்தது. அதன் பயனாகப் பலரும் தங்கள்

செல்வாக்கைப் பெருக்கிகொள்ள முயன்றபோது கிராமச் சபைகள் சீரழிவைப் பெற்றன. அவர்களுக்குப் பின்வந்த முகம்மதியர் ஆட்சியிலும் நிலைமை சீரடையவில்லை.[22]

பண்டைக்காலந் தொட்டு நிலவிவந்த ஊராட்சிமுறை, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் தொடக்கம் வரை சிறப்புற்று விளங்கியது. இந்த ஊராட்சி முறையைப்பற்றிப் பிரித்தானிய ஆய்வாளர் வெகுவாய்ப் பாராட்டிக் கூறியுள்ளனர்.

சிக்கலற்ற எளிய ஊராட்சி முறையின் கீழ் அந்நாட்டு மக்கள் ஆதிகாலந்தொட்டு வாழ்ந்து வருகிறார்கள். கிராமங்களது எல்லைகள் மாறுவதில்லை.

போர், பஞ்சம் அல்லது நோய் அவ்வூர்களையே சில நேரங்களில் அழிவுக்கு உள்ளாக்கியபோதிலும் அல்லது பாழாக்கியபோதிலும் கூட அதே பெயர், அதே எல்லைகள், அதே நலன்கள், அதே குடிகள் தொன்றுதொட்டுத் தொடர்ந்து வாழ்கின்றனர்.

அரசுகள் சில வந்தது சின்னா பின்னமானதைப் பற்றி அக்குடிகள் கவலைப்பட்டதேயில்லை. கிராமம் முழுதாக இருக்கும்போது அது எந்த அரசுக்கு மாறுகிறது அல்லது எந்த மன்னனது பொறுப்பில் இருக்கிறது என்பதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. ஊர்களில் பொருளாதார அமைப்பு மாறவேயில்லை.[23]

சமவெளிப் பகுதியிலாவது அந்நியர் தாக்குதலும் பிறமக்களுடைய தொடர்பும் அடிக்கடி நிகழ்ந்தன என்பது உண்மையே. ஆனால் உயர்த்தோங்கிய மலைப்பகுதிகளில் இந்த நிலைமை மிகக் குறைவு. அதனால் பண்டைக்காலந்தொட்டு நிலைபெற்ற ஊராட்சிமுறை இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இந்தப் போக்கு நீலமலை முழுவதும் உள்ள பழங்குடிகள் அனைவரிடமும் உள்ளதாகும்.

## படகரின், உணவு, உடை, உறையுள்

படகரின் உணவு, அவர்கள் தங்கள் காடுகளில் கடுமையாக உழைத்து அதன் மூலம் கிடைத்தவற்றையே உணவாகக் கொண்டிருந்தனர். சாமை, ராகி, கோதுமை, கஞ்சே இவற்றைக் களியாகச் செய்து உண்பர். இவர்கள் ஒரேவகை உணவை இருவேளைகளிலும் உண்பர்.

உழைக்கும் நேரங்களில் தேநீர் அல்லது காப்பி, கோதுமை மாவினால் செய்யப்பட்ட உணவு முதலானவற்றைக் கூடவே எடுத்துச் சென்றுவிடுவர். இதனால் படகரின் பொருளாதார நிலை, உழைப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது எனத் தெளியலாம்.

படகப் பெண்களின் உடைகள் எல்லாம் வெண்மையாகவே இருக்கும்.

தலைக்குப் ‘பட்டு’ என்னும் ஒன்றைக் கட்டிக்கொள்வார்கள். உடலைச் சுற்றி வெள்ளையில்

'துண்டு' ஒன்றை அணிவர். இதனை 'நடுகட்டுவேட்டி' என்று கூறுவர். இவை உடலுடன் பொருந்தியிருக்குமாறு இடையில் ஒரு சட்டை (பெல்ட் போன்றது). மேல் பகுதியில் மணி கோக்கப்பட்ட திரித்த கயிறு இவற்றைக் கட்டிக் கொள்வார்கள். 'முண்டு' என்னும் ஒன்றால் உடலைப் போர்த்துக் கொள்வார்கள்.

படகப் பெண்கள் கழுத்தில் வெள்ளியால் செய்யப்பட்ட சரப்பணிகை, குண்டுமணியினாலான கக்கரே என்னும் அணிகலன்களைக் கழுத்தில் அணிந்து கொள்வர். கையில் வெள்ளியால் செய்யப்பட்ட காப்பு (கடகம்) அணிந்திருப்பர். காதில் வேலைப்பாடு கொண்ட காதணியை அணிந்திருப்பர். கைவிரல்களில் வெள்ளியாலான மோதிரம் அணிந்திருப்பர். மூக்கில் மூக்குத்தி அணிந்திருப்பர்.

படக ஆண்கள் வேட்டி கட்டியிருப்பதோடு உடலைத் துப்பட்டி கொண்டு போர்த்துமிருப்பர். இந்த துப்பட்டி வேலைப்பாடு அமைந்ததாக இருக்கும். இவ்வேலைப்பாடுகளைத் தொதுவர் செய்து கொடுப்பர். தலையில் தலைப்பாகை அணிந்திருப்பர்.

இ. ..கள் காதில் காதணிகள் அணிந்திருப்பர். இது பொன்னா.. செய்யப்பட்டிருக்கும். கையில் வெள்ளியால் செய்யப்ப.. மோதிரங்களை விரல்களில் அணிந்திருப்.. வெள்ளியிலான அரைஞாண் கயிறு ஆகியனவும் ... ..வர் அணிகலன்களாகும்.

பெண்கள் நெற்றியிலும் கைகளிலும் தோள்களிலும் 'பச்சை' குத்தியிருப்பர். நெற்றியில் இரு வட்டங்கள் நடுவில் ஒரு கோடும் அதற்கு மேல் ஒரு புள்ளியும் பச்சை குத்தியிருப்பர். இடது மணிக்கட்டின் முன்னும் பின்னும் மூன்று வரிசைகளாகத் தொடர்ந்த புள்ளிகளும் ஒரு விண்மீனும் குத்தியிருப்பர். குறத்திதான் 'பச்சை' குத்துவாள். வயது எட்டு அல்லது ஒன்பதாக இருக்கும்போதே படகப் பெண்கள் பச்சை குத்திக் கொள்வர்.

படகர்கள் பொதுவாக மலை உச்சியில் அல்லது சரிவில் உள்ள சிற்றூர்களில் வாழ்கின்றனர். அவர்களின் வீடுகள் எல்லாம் ஒரேவகையான அமைப்பைக் கொண்டதாக உள்ளன.

படகர்கள் தாங்கள் வாழும் ஊரினை 'ஹட்டி' என்று அழைக்கின்றனர். ஹட்டி என்றால் 'ஊர்' என்பது பொருள்.

ஹட்டியில் வீடுகள், தாழ்ந்த குறுகிய வாயில்களைக் கொண்டனவாயும் இரு முக்கியமான பகுதிகளை உடையவையாவும் அமைந்துள்ளன. படகர் வீடுகள் கீற்றுக்களாலோ அல்லது ஓடுகளாலோ வேயப்பட்டிருக்கும். வீடுகள் நேர்ப்பட ஒழுங்காக அமைந்திருக்கின்றன.

இப்படிப் பல வரிசைகள் இருப்பதால் அவை பல தெருக்கள் போல் காட்சியளிக்கின்றன.

ஒவ்வொரு வீட்டிலும் 'ஓகமனை' (உள்ளகம்) 'இதமனை' (வெளியகம்) என்னும் இரு பகுதிகள் உண்டு. இவை இரண்டையும் பிரிக்கும் இடத்தில் எல்லா இடங்களுக்கும் வெளிச்சம் தெரியும்படி தீபமாடம் ஒன்று அமைந்திருக்கும். இந்த மாடம் வெளியகத்திலிருந்து உள்ளகத்திற்குச் செல்லும் வளைவு வாயிலுடன் இணைந்து அமைந்திருக்கும். இதற்கு 'எடபாயிலு' என்பது பெயர்.

உள்ளகத்தில் ஓர் ஒதுக்குப்புறம் 'ஆகோட்டு' என்று அழைக்கப்படும். அங்குப் பால்படு பொருள்கள் வைக்கப்படும். மேலும் உள்ளகத்திலேயே சமையலும் செய்வதால் அந்த அறைக்கு மாதவிலக்கான பெண்கள் செல்வதில்லை.

இதற்கு அடுத்து வெளிவாசல் ஒன்று இருக்கும். இதற்குக் 'கேரி' எனப்பெயர். இங்குதான் அறுவடைக் காலத்தில் சாமையைக் கீறி (ஒக்கி) எடுப்பதற்கும், காய வைப்பதற்கும் மற்ற தானியங்களை உலர்த்தி வைப்பதற்கும் பயன்படுத்துகின்றனர்.

உள்ளகத்தில் மூங்கிலால் ஆன சேமிப்புப் பரண்கள் உண்டு. இரண்டு வீடுகளுக்கு நடுவில் ஒரு சுவர்தான் இருக்கும்.

ஊரில் திருமணச் சடங்கு, ஈமச் சடங்கு முதலியன செய்யப் பொதுவிடம் இருக்கும்.

அந்தப் பொதுவிடத்தைத் 'தொட்டக்கேரி' என்று அழைப்பர். இதற்கு மற்றொரு பெயர் 'சாவுக்கேரி' என்பதாகும். இதன் பொருள் பெரியவாசல் என்பதாகும்.

படகரிடம் காணப்படும் தனிச்சிறப்பு யாருக்கும் வீடோ, நிலமோ இல்லை என்னும் நிலையே இல்லை. ஏழையானாலும் பணக்காரரானாலும் ஆளுக்கொரு வீடும், சிறிது நிலமும் வைத்திருப்பர். தமக்கென்று சொந்தமாக வீடோ நிலமோ இல்லாதவர்களே இல்லை என்று கூறலாம். பிச்சை எடுப்பவர்களே கிடையாது. இவை படக இன மக்களிடம் காணப்படும் தனிச்சிறப்பு.

## படகரின் தொழில் நிலைகள்

படகர்களுக்கு உழவுத்தொழில்தான் முதன்மையான தொழிலாகும். இவர்கள் நிலத்தைத் தெய்வமாகப் போற்றிப் பாடுபட்டு வருகின்றனர்.

சாமை, கேழ்வரகு, கோதுமை, கஞ்சே, அவரை, வெள்ளைப்பூண்டு, உருளைக்கிழங்கு, கீரை, காய்கறிகள் முதலியவற்றைப் பயரிடுகின்றனர். மேலும் காப்பி, தேயிலை போன்றனவும் பயிரிடப்படுகின்றன.

படகர் வேளாண்மை மட்டுமல்லாது ஆடுமாடுகள் மேய்த்து அவற்றின் மூலம் கிடைக்கும் பால்

பொருட்களை விற்றுப் பயன் பெறுகின்றனர். மாடுகளை இரவில் அடைத்து வைப்பதற்கு, கல்லால் கட்டப்பட்ட ‘தோ’ என்று அழைக்கப்படும் மாட்டுத் தொழுவத்தைப் பயன்படுத்துகின்றனர்.

மாட்டுச் சாணத்தை எருவாகப் பயன்படுத்திப் பயிர் விளைச்சலை அதிகப்படுத்துகின்றனர்.

படகர் வீடுகளின் முன்பு இருக்கும் வாசலில்தான் தானியங்களை உலர வைப்பார்கள். உழைப்பதற்குப் படகர்கள் தயங்கவே மாட்டார்கள். தோட்டவேலை செய்வதில் புதுமுறைகளையும் அவ்வப்போது கையாண்டு விளைச்சலைப் பெருக்குகின்றனர்.

படகரில் உழவர், தச்சர், ஆசிரியர், கணக்கர், மரமறுப்போர், இன்னும் பலவகையான தொழில் புரிவோர் உண்டு என்றாலும் படகரின் முக்கியத் தொழில் உழவுத் தொழில் ஆகும்.

### படகரின் பழக்கவழக்கங்கள்

இரண்டு படகர்கள் சந்திக்கும்பொழுது முதியவருக்கு இளையவர் மரியாதை கொடுப்பர். அவ்வாறு மரியாதை கொடுக்கும்போது முதியவருக்கு முன் இளையவர் தலையைக் குனிந்து ‘கும்பிடுசு’ என்று சொல்லி நிற்பர். முதியவர் ‘பதக்’ என்று சொல்லி ஆசீர்வதிப்பார். இப்பழக்கம் இன்றும் படக மக்கள் கடைப்பிடித்துவரும் ஒரு பழக்கமாகும்.

வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு நல்லமுறையில் விருந்தோம்பல் நடக்கும். வந்தவர் யாராக இருந்தாலும் குடிக்கக் காப்பியாவது கொடுக்காமல் அனுப்ப மாட்டார்கள். விருந்து கொடுக்கும் உறவினர் வீட்டில் தானியம் விளைந்திருப்பின் வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும்போது அவர்களால் முடிந்த அளவு தானியங்களை அவர்களுக்குக் கொடுத்து அனுப்புவர். இப்பழக்கம் இன்றும் படகரிடம் காணப்படுகிறது.

படகர் தங்கள் குடும்பத்தில் வயது முதிர்ந்த யாருக்காவது உடல்நலம் சரியில்லையென்றால் ஊரிலுள்ள உறவினர்களுக்கும் மற்ற ஊரிலுள்ளவர்களுக்கும் தெரிவிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். இதற்கு 'நோஹேகுவது' என்று பெயர்.

அவர்கள் நோயுற்றவர்களை வந்து பார்த்து உயிர் போகக்கூடிய நிலையில் நோயாளி இருப்பாராயின் தினமும் இரவில் அக்குடும்பத்திற்குத் துணையாக வந்து தங்கி இருப்பர். இப்பழக்கம் இன்றும் படகரிடம் நிலைபெற்று வருகிறது.

'ஓலக்குடி' என்பது ஓலைக்குடிசை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். இத் திரிபிற்குக் காரணம் படகர் மொழியும் தமிழும் இனமொழிகளாகும் என்பர் திருமலை முத்துசுவாமி அவர்கள்.

விலக்கான படகப்பெண்கள், தீட்டைக் கழிப்பது இந்த ஓலைக் குடியில்தான். விலக்கான பெண் இங்கு ஐந்து நாட்கள்வரை யிருப்பார். அதன்பிறகுதான் வீட்டிற்குள் வருவாள். அதுவரை வீட்டிலுள்ள எந்தப் பொருளையும் தொடக்கூடாது. ஐந்தாம்நாள் நீராடிய பின்னரே சமையலறைக்குச் சென்று சமைக்கலாம்.

படகரிடையே இது கடுமையாக இன்றும் கடைப்பிடிக்கப்படுகிறது. தீட்டான பெண்களைத் தொட்ட குழந்தைகளும் உடனே குளிக்கவேண்டும். குளித்த பின்னரே குழந்தைகளை மற்றவர்கள் தொடுவார்கள்.

படக இன மக்களிடையே காணப்படும் ஒரு தனித்தன்மை, அவர்கள் ஒரு நல்ல காரியம் செய்வதாய் இருந்தாலும், ஈமச்சடங்கு போன்றன செய்வதாய் இருந்தாலும், எல்லா ஊர்களிலும் உள்ள உறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்தப் பின்னரே செய்வார்கள். இதில் எல்லோரும் கலந்து கொள்வார்கள்.

பூப்பு விழா, திருமணம், 'ஹப்பா' என்று சொல்லப்படும் திருவிழா, சாவு இவற்றில் எல்லோரும் கலந்து கொள்வார்கள்.

இவ்வாறு படகர்களின் தொன்மை இருப்பிடம், மைசூர் என்பதற்கு மொழி, இலக்கியம், நாட்டுப்புறக்

கதைகள் மூலம் அறிய முடிகின்றது. புதுமையான ஊராட்சி முறைகள், ஒழுங்கான வீட்டமைப்புகள், படகரின் பழக்க வழக்கங்கள், பொருளியல் நிலைகள் ஆகியனவற்றையும் படகர் வரலாற்றை ஆய்வதன் மூலம் தெரிய வருகின்றன.



# குறிப்புக்கள்

1. பொடோசெட்டுரிக், வி. ஸ்பிர்கின், ஏ., சரித்திர இயல் பொருள் முதல் வாதம்பற்றி ஒரு பார்வை ப.6.
2. அ. திருமலை முத்துசுவாமி, மலைவாழ் மக்கள் (நீலமலை) ப. 29.
3. அ. திருமலை முத்துசுவாமி, மலைவாழ் மக்கள் ப. 30.
4. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, ப. 381.
5. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, ப. 381.
6. அ. நாராயணசுவாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, ப. 242.
7. ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உரையாசிரியர்) அகநானூறு, ப. 366.
8. ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உரையாசிரியர்) அகநானூறு, ப. 191.
9. ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உரையாசிரியர்) அகநானூறு, ப. 337.
10. அருணை வடிவேல் முதலியார், சி. சுந்தரர் தேவாரம், திருமுருகன் பூண்டி பதிகம், ப. 384.

11. க.ப. இராசு, ஆராய்ச்சி
மலர் 1, இதழ் 4, ப. 3.
12. ஜே. நந்தி கவுடர் என்பாரிடம் கேட்டு எழுதியது.
13. பிலோ இருதயநாத், நீலகிரி படகர்கள், ப. 30-31.
14. அ. திருமலை முத்துசுவாமி, மலைவாழ் மக்கள் (நீலமலை), ப. 29.
15. க.ப. இராசு, ஆராய்ச்சி மலர் 1, இதழ் 4, ப. 9.
16. Edger Thurston, Castes and Tribes of Southern India, Vol.I,p. 72.
17. சண்முகப் பிரகதம், கொடுமுடி, ஆய்வுத்தேன், ப. 60-61.
18. ஜே. நந்தி கவுடர் என்பாரிடம் கேட்டு எழுதியது.
19. Edger Thurston, Castes and Tribes of Southern India, Vol.I. p. 66.
20. Edger Thurston, Castes and Tribes of Southern India, Vol.I. p. 80.
21. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்) குறுந்தொகை, ப. 61.
22. சா. கணேசன், கையேடு, ப. 178.
23. க. கைலாசபதி, அடியும் முடியும், ப. 298.

இயல் : மூன்று

# படகரின் உறவு முறைகள்

உறவு என்ற சொல்லுக்கு உற்றசமயம், எறும்பு, ஐக்கம், ஒற்றுமை, சம்பந்தம், சிநேகம், சுற்றம், சேர்கள், பொருத்தம் போன்ற பொருட்களைத் தமிழ் மொழியகராதி தருகிறது.

உறவுமுறை இரத்தக் கலப்பாலும், பெற்றோர் கால்வழியாலும், மணஉறவினாலும் ஒரே குழுவினர் ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் அமைகிறது. இவ்வுறவுமுறை குடும்பம், சாதி என்னும் அடிப்படையில் அமையும். படகர்களுடைய உறவு நிலைகளும் இத்தகைய அடிப்படையிலேயே அமைந்துள்ளன. இவற்றை ஆய்வது இன்றியமையாதாகும்.

### *குடும்பமும் உறவுகளும்*

குடும்பத்தில் தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம் அல்லது பொதுக் குடும்பம் என்னும் இருவகை உண்டு.

தனிக் குடும்பம் என்பது தாய் தந்தையரும் அவர்களுடைய குழந்தைகளும் தனித்து வாழ்வதைக் குறிக்கும்.

கூட்டுக்குடும்பம் அல்லது பொதுக்குடும்பம் என்பது பாட்டன், பாட்டி, அவர்களுடைய மகள்கள், மருமகள்கள், இவர்களுடைய குழந்தைகள் முதலானோர் சேர்ந்து வாழ்வதைக் குறிக்கும். இதில் இரண்டு மூன்று தலைமுறைகள் அடங்கும்.

இவர்கள் அனைவருக்கும் பொதுவான வீடும் சொத்தும் இருக்கும். ஒரே வீட்டில் ஒரே சமையல் நடந்து அதிலேயே எல்லோரும் உண்பார்கள். இவ்வாறு நடக்கும் குடும்பத்தைக் கூட்டுக்குடும்பம் அல்லது பொதுக்குடும்பம் என்று அழைப்பது பொருத்தமானதாகும்.

இவ்வாறான குடும்ப அமைப்புகள் படகர் சமூகத்திலும் உண்டு. கூட்டுக்குடும்பம் தற்போது அதிக அளவில் இல்லை.

படகர் சமூகத்தில் திருமணத்தின்மூலம் உண்டாகும் மனைவிவழி உறவுமுறை மிக ஆழமானதும் நெருக்கமானதும் ஆகும். மாமனாருக்கும் மனைவிவழி உறவினர் ஏனையோருக்கும் இருக்கும் செல்வாக்கு மிகமிக வலுவானது. அவர்களைக் கலந்து கொள்ளாமல்

எதுவும் நடப்பதில்லை. அந்த அளவுக்கு நெருக்கம் நிறைந்த உறவு மனைவி வழி குடும்பத்து உறவாகும்.

பழக்க வழக்கங்களும் கட்டுப்பாடுகளும் உறவினரை இணைக்கின்றன. பிறப்பு, பூப்பெய்தல், திருமணம், சாவு, ஆண்டுக்கு ஒருமுறை நிகழும் திதி ஆகிய நிகழ்ச்சிகளில் உறவினர் கூடுவர். அப்பொழுது தங்கள் உறவுகளிலேயும் பெண்ணுக்கு மாப்பிள்ளையும், மாப்பிள்ளைக்குப் பெண்ணும் தேர்ந்தெடுத்துத் திருமணம் முடிப்பதும் படகரிடம் உண்டு.

## உறவுமுறைப் பெயர்கள்

'சமுதாய நடைமுறை அடிப்படையில் இருந்து எழுவதுதான் உறவுமுறைப் பெயர்கள்' என்று ரிவர்ஸ் என்பவர் கூறுகிறார்.

இந்த உறவுமுறைப் பெயர்களைக் கொண்டு உறவு அமைப்பை அறியமுடிகிறது.

'அண்ணா' என்னும் உறவுமுறைப் பெயர் மூத்த சகோதரன், தந்தையின் சகோதரரின் மகன், தாயின் சகோதரியின் மகன் போன்ற இந்த உறவு அமைப்பைக் குறிப்பனவாக அப்பெயர் அமைகின்றது என்பதைச் சான்றாகக் கூறலாம்.

சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட உறவு நெறிகளுக்கு உட்பட்டனவாக உறவுமுறை அமைப்பு

இருக்கும். அண்ணனும் தங்கையும் மணம் செய்து கொள்ளக்கூடாது. இவை போன்ற சமுதாய முறை வைப்புகளை உறவுநெறி எனலாம். உறவுநெறிகள் பரம்பரை பரம்பரையாகக் காக்கப்பட்டு வருவன.

உறவுமுறையின் எல்லாப் பாகுபாடுகளும் தாய்தந்தையர் மூலம் உள்ள உறவுகள், மணவினை வழி வரும் உறவுகள் ஆகியவற்றுள் அடங்கும்.



## படகர் மொழியில் வழங்கும் உறவுமுறைப் பெயர்ப் பட்டியல்

| எண். | உறவுமுறைப் பெயர் | விளிக்கும் முறை | உறவு அமைப்பு | பேசுபவர் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | அய்யா | அய்யா | தந்தையின் தந்தைக்குத்தந்தை<br>தாயின் தந்தைக்குத்தந்தை | ஆண், பெண் | |
| 2 | அய்யா | அய்யா | தந்தையின் தந்தை<br>தாயின் தந்தை | ஆண், பெண் | |
| 3. | எத்தே | எத்தெ | தந்தையின் தாய்<br>தாயின் தாய் | ஆண், பெண் | |
| 4. | தொட்டப்பா | தொட்டப்பா | தந்தையின் மூத்த சகோதரன்<br>தாயின் மூத்த சகோதரியின் கணவன் | ஆண், பெண் | |
| 5. | தொட்டவ்வே | | தொட்டவ்வே தந்தையின் மூத்த சகோதரரின் மனைவி | ஆண், பெண் | |
| | | | தாயின் மூத்த சகோதரி | ஆண், பெண் | |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| 6. | அப்பா | அப்பா | தந்தை | ஆண், பெண் | |
| 7. | அவ்வெ | அவ்வெ | தாய் | ஆண், பெண் | |
| 8. | குன்னப்பா | குன்னப்பா | தந்தையின் இளைய சகோதரன் தாயின் இளைய சகோதரியின் கணவன் | ஆண், பெண் | |
| 9. | சிக்கவ்வே | சிக்கவே | தந்தையின் இளைய சகோதரனின் மனைவி, தாயின் இளைய சகோதரி | ஆண், பெண் | |
| 10. | அண்ண | அண்ண | மூத்த சகோதரன், தந்தையின் சகோதரரின் மகன், தாயின் சகோதரியின் மகன், | ஆண், பெண் | தன்னைவிட வயதில் மூத்தவராயின் |
| 11. | தம்மா | தம்மா | இளைய சகோதரன், தந்தையின் சகோதரரின் மகன், தாயின் சகோதரியின் மகன் | ஆண், பெண் | தன்னைவிட வயதில் இளையவராயின் |
| 12. | அக்கா | அக்கா | மூத்த சகோதரி, தந்தையின் சகோதரரின் மகள், தாயின் சகோதரியின் மகள் | ஆண்,பெண் | தன்னைவிட வயதில் மூத்தவராயின் |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| 13. | அம்மெ | அம்மெ | இளைய சகோதரி தந்தையின்,<br>சகோதரரின் மகள், தாயின்<br>சகோதரியின் மகள் | ஆண், பெண் | தன்னைவிட<br>வயதில்<br>இளையவராயின் |
| 14. | மம்மா | மம்மா | தாயுடன் பிறந்த சகோதரன்,<br>தந்தையின் சகோதரியின் கணவன்,<br>தன் மனைவியின் தந்தை,<br>தன் கணவனின் தந்தை,<br>மூத்த சகோதரியின் கணவன்<br>தாயின் சகோதரியின்<br>மகளின் கணவன் | ஆண்,பெண்<br><br>ஆண்<br>பெண்<br>ஆண்,பெண் | <br><br><br><br><br>தன்னைவிட<br>வயதில்<br>மூத்தவராயின் |
| 15. | மம்மி | மம்மி | தந்தையின் சகோதரி<br>தாயின் சகோதரரின் மனைவி<br>தன் மனைவியின் தாய்<br>தன் கணவனின் தாய் | ஆண், பெண்<br><br>ஆண்<br>பெண் | |
| 16. | அத்திகெ | அத்திகெ | தன்மூத்த சகோதரரின் மனைவி<br>தாயின் சகோதரியின்<br>மகனின் மனைவி | ஆண், பெண் | |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| 17. | மைதா மைதா | | தன் கணவனின் இளைய சகோதரன் | பெண் | |
| 18 | அத்திகெணானி | | தன் கணவனின் சகோதரிகள் | பெண் | |
| 19. | பாமைதா பாமைதா | | தன் மனைவியின் சகோதரர்கள் | ஆண் | |
| 20. | ஓரகத்தி | | தன் கணவனின் மூத்த சகோதரரின் மனைவி | பெண் | |
| | | | தன் கணவனின் இளைய சகோதரரின் மனைவி | | |
| 21. | என்னகூசு | | தன்மகன் | ஆண், பெண் | |
| 22. | என்னியெண்ணு | | தன் மகள் | ஆண், பெண் | |
| 23. | சொசே சொசெண்ணு | | தன் மகனின் மனைவி | ஆண்,பெண் | |
| | | | தன்சகோதரனின் மகனின் மனைவி | ஆண் | |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| | சொசே | சொசெண்ணு | தன் கணவனுடைய சகோதரரின் மகனின் மனைவி | பெண் | |
| 24. | ஹென்டுரு | | மனைவி | ஆண் | |
| 25. | கண்ட | | கணவன் | பெண் | |
| 26. | அளியபெட்ட (அய்யபெட்ட) | | தன் மகளின் கணவன் | ஆண், பெண் | |
| | | | தன் சகோதரியின் மகன் | ஆண் | |
| | | | தன் மனைவியின் சகோதரரின் மகன் | ஆண் | |
| | | | தன் மகளின் கணவன் | பெண் | |
| | | | தன் சகோதரியின் மகளின் கணவன் | பெண் | |
| | | | தன் சகோதரரின் மகன் | பெண் | |

## பட்டியலில் இடம் பெற்றுள்ள உறவுமுறைப் பெயர்களின் விளக்கம்

*அய்யா*

தந்தையின் தந்தைக்குத் தந்தையும், தாயின் தந்தைக்குத் தந்தையும், தந்தையின் தந்தையும், தாயின் தந்தையும் **அய்யா** என்னும் சொல்லால் விளிக்கப்படுகின்றனர். இவ்வாறு அழைக்கும்முறை இருளர் மொழியிலும் உண்டு. இது படகமொழிச் சொல்லுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

*எத்தெ*

தந்தையின் தாய்க்குத் தாயும், தாயின் தாய்க்குத் தாயும், தந்தையின் தாயும் எத்தெ என்னும் சொல்லால் படகமொழியில் அழைக்கப்படுகின்றனர்.

*தொட்டப்பா*

'தொட்ட' என்றால் படகர் மொழியில் 'பெரிய' என்பது பொருள். தொட்டப்பா என்றால் பெரிய அப்பா; தந்தையின் அண்ணன். தாயின் அக்காள் கணவரைத் **தொட்டப்பா** என்று படகர் மொழியில் அழைக்கின்றனர்.

கன்னடமொழியிலும் இருளர் மொழியிலும் தொட்டா என்னும் சொல் **பெரிய** என்னும் பொருளைத் தருகின்றன.

*அவ்வெ*

'அவ்வெ' என்னும் படகமொழிச்சொல் தாயைக் குறிக்கின்றது. தமிழில் உள்ள அம்மா என்னும் சொல் படக மொழியில் 'அவ்வெ' என்று திரிந்து வந்துள்ளது.

*சிக்கவ்வே*

தமிழில் சின்னம்மா, சித்தி என்று விளிக்கும் சொற்கள் படக மொழியில் சிக்கவ்வே என்று வந்துள்ளதைக் காணலாம். படகமொழி, தமிழ் மொழியிலிருந்து பிரிந்த கிளைமொழி என்பதற்கு மேற்கண்ட சொற்கள் சான்றாய் அமைகின்றன.

*தம்மா*

தம்பி என்பது தம்மா என்று வந்துள்ளது.

*மம்மா*

'மம்மா' என்பது 'மாமா' எனும் தமிழ்ச் சொல்லிலிருந்து மருவிப் பிறந்தது எனலாம். 'மம்மா' எனும் சொல் தாயுடன் பிறந்த ஆண், தந்தையின் சகோதரியின் கணவன், மனைவியின் தந்தை, கணவனின்

தந்தை, அக்காள் கணவன், தாயின் உடன்பிறந்தாள் மகளின் கணவன் இவர்களைக் குறிக்கப் படகமொழியில் பயன்படுத்துகின்றனர்.

*மம்மி*

'மாமி' என்னும் தமிழ்ச் சொல்லே 'மம்மி' என்று படகமொழிச் சொல்லாக மாறியுள்ளது.

*அத்திகெ*

தன்னுடன் பிறந்த மூத்தவனின் மனைவியையும், தாயின் உடன்பிறந்தாள் மகனின் மனைவியையும், தந்தையின் சகோதரனின் மகனின் மனைவியையும், தன்னைவிட வயதில் மூத்தவனின் மனைவியையும் இவ்வுறவு முறைச் சொல்லால் அழைக்கின்றனர். கன்னடமொழியிலும், இருளர் மொழியிலும் இச்சொல் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***படகர், தமிழர் உறவுநிலை ஒப்புமை***

தமிழுக்கும் படகமொழிச் சொற்களுக்கும் இடையில் உறவுமுறை அமைப்பில் வேறுபாடுகள் இல்லை. சான்றாக, தமிழில் 'மாமா' என்பது படகமொழியில் 'மம்மா' என்றும், 'மாமி' என்பது 'மம்மி' என்றும் வந்துள்ளமையைக் காணலாம். இதில் உறவு அமைப்பில் மாற்றம் இல்லை.

தாயுடன் பிறந்தவரைத் தமிழில் மாமா என்று அழைக்கின்றனர். படக மொழியில் மம்மா என்று அழைக்கின்றனர்.

தன் கணவனின் தம்பியை 'மைதா' என்று படக மொழியில் அழைக்கின்றனர். தமிழில் (மைத்துனர்) கொழுந்தன் என்று அழைக்கின்றனர். இதில் உறவுமுறை சொற்கள்தாம் வேறுபடுகின்றனவே தவிர உறவுமுறை அமைப்பால் வேறுபாடுகள் இல்லை.

தமிழில் உள்ள கொழுந்தி என்பது படகமொழியில் 'அத்திகெனானி' என்று வருகிறது. தமிழர்க்கும் படகர்க்கும் உறவுமுறை சொற்களில் மட்டுமே வேறுபாடுகள் உள்ளன. உறவுமுறை அமைப்புகளில் வேறுபாடுகள் இல்லை.

இவ்வாறாகப் படகர் சமூகத்தில் தமிழிலிருக்கும் உறவுமுறை சொற்கள்தாம் மாறுபட்டிருக்கின்றன. உறவு அமைப்பில் தமிழரிடம் காணப்படாதது படகரிடமும் இல்லை. இதன்மூலம் தமிழர், படகர் உறவுமுறை அமைப்புகள் ஒன்று எனத் தெளியலாம்.

# குறிப்புக்கள்

1. சோமலெ, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் ப.95.



இயல் : நான்கு

# படகர் விழாக்கள்

மக்களின் வாழ்வில் சோர்வினைப் போக்கி இன்பமும் மலர்ச்சியும் புத்துணர்ச்சியும் ஊட்டுவன விழாக்கள். மனித இனத்தை ஒன்றுபடுத்தி மகிழ்ச்சியில் திளைக்க வைப்பது விழாக்களின் செயற்பாடாகும். விழாக்கள் மக்களினங்களிடையே தொன்றுதொட்டு நிலவி வருகின்றன.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி, மறுமலர்ச்சி, வீழ்ச்சி ஆகியவற்றை அச்சமூகம் காலங்காலமாகப் போற்றிக் கொண்டாடி வருகின்ற விழாக்களின் வழியே அறிய இயலும்.

விழாக்களின் வழி ஒரு சமுதாயத்தின் பண்பாட்டினையும் இனங்காணலாம்.[1]

இதற்கு ஏற்பப் படக இன மக்களின் விழாக்கள் அச்சமூகத்தின் நலனையும், ஒற்றுமையையும், கூட்டுறவு முறையையும் வெளிப்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன. இதன் மூலம் அவர்களின் கூட்டுறவு நிலையையும், ஒற்றுமை மனப்பான்மையையும், நம்பிக்கையையும் காணலாம்.

படகர்கள் இன்று திரளாகக் கூடிப் பழகவும் உயர்ந்தோரைப் போற்றவும் விழாக்களை உருவாக்கிக் கொண்டாடி வருகின்றனர்.

படகர் விழாக்களில் சில, காரண அடிப்படையிலும், சில, சமயத்தை அடிப்படையாகக் கொண்டும் அமைந்துள்ளன.

பண்டைத் தமிழர், விழாவினை 'விழவு', 'விழா', 'சாறு' என்று பல சொற்கள் மூலம் சுட்டியுள்ளனர். இதனை,

**அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்**[2]

என்னும் அகநானூற்றுப் பாடல் அடியையும்,

**ஆலமர் செல்வன் அணிசால் மகன்விழாக்**
**கால்கோள் என் றுக்கிக கதுமென நோக்கி**[3]

என்னும் கலித்தொகைப் பாடல் அடிகளையும்,

***காதல குழைய ராகப் பெரிது உவந்து***
***சாறுகொ ளூரின் புகல்வேன் மன்ற***[4]

என்னும் குறுந்தொகைப் பாடல்அடிகளையும் சான்றுகளாகக் காட்டலாம்.

இன்றைய நிலையிலும் விழாவினைக் குறிக்கும் சொல் இடத்திற்கு இடம் மாறுபடுவதைக் காணலாம்.

குறிப்பாக, திருநெல்வேலி மக்கள் விழாவினைக் 'கொடை' என்று அழைப்பதைக் கூறலாம். இதற்குத் தக விழாவினைப் படக இன மக்கள் 'ஹப்பா'என்று அழைக்கின்றனர். ஹப்பா என்றால் பண்டிகை அல்லது விழா என்று பொருள்.

## *விழா மரபுகள்*

விழா மரபுகள் என்பது தொன்றுதொட்டு வரும் விழாக்களின் சில வழக்கங்களைக் குறிப்பதாகும். அவை ஒரு தலைமுறையினரிடமிருந்து மறு தலைமுறையினருக்கு மரபு வழியில் புகட்டப்பட்டதாகவே காட்சி தருகின்றன.

விழா மரபுகள் பண்பாட்டின் அடிப்படையில் தோன்றுவனவாகும்.

அவை நாடு, இனம், மொழி, குழு ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றன. எனவேதான் சமூகங்களின் பண்பாடுகளுக்கு ஏற்ப விழா மரபுகள் வேறுபடுவதைக் காணலாம்.

விழா மரபுகளைக் கொண்டு ஒருபண்பாட்டின் தன்மைகளை உறுதி செய்யலாம். பிற பண்பாட்டின் கலப்பால் விழா மரபுகள் மாற்றம் பெறுதலும் உண்டு.

ஊர்களிலும் கோயில்களிலும் விழாத் தொடங்குவதற்கு அறிகுறியாகக் கொடியேற்றுதல் படகச் சமூகத்தின் மரபாக உள்ளது.

இவ்வாறு ஏற்றும் கொடியை விழா முடியும்வரை இறக்க மாட்டார்கள். மேலும் விழா நடப்பதை அவ்வூராரே யன்றிப் பிறரும் அறிந்துகொள்ளும் வகையில் அமைவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றும் படகஇன மக்களிடையே இம்மரபு விட்டுப் போகாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

தமிழிலக்கியத்தில் இக்கருத்தமைந்த பாடல்கள் காணப்படுகின்றன. சிலம்பிலும் பிற்காலம் நூல் என இப்பொழுது கருதப்பெறுகிறது. விழாநாள் தொடக்கத்தை அறிவிக்கும் முகத்தான் கொடியேற்றுதல் மரபாகப் பேணப்பட்ட நிலை குறிக்கப்பட்டிருத்தலைக் காண்கிறோம்.

**சாறயர்ந் தெடுத்த உருவப் பல்கொடி**[5]

என்று மதுரைக்காஞ்சி நூலிலும்,

**தாங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து**
**மங்கல நெடுங்கொடி வானுற வெடுத்து**[6]

என்று சிலம்பிலும் வரக் காணலாம்.

விழாநாளில் மக்கள் எந்தவகையான தொழிலையும் செய்ய மாட்டார்கள்.

**பெரிதுஞ் சான்றோர் மன்ற விசி பிணி**
**முடிவுமுகம் புலராவிழவுடை யாங்கண்**[7]

என்னும் நற்றிணைப் பாடலுக்கு ஏற்ப எல்லோரும் புத்தாடை உடுத்தி, வரும் விருந்தினரை வரவேற்று, விருந்துண்ணச் செய்து மிகவும் மகிழ்ச்சியாய் இருப்பார்கள். விழாநாட்களில் பலவகையான இசைக் கருவிகள் முழங்கப்படுகின்றன. அவ்வோசை விழாக்களத்தில் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

**இரும்பிழி மாரி அழுங்கல் மூதூர்**
**விழவின் றாயினுந் துஞ்சாதாகும்[8]**

என்னும் அகப் பாடலுக்கேற்ப, விழாநாட்களில் படகஇன மக்கள் இரவில் தூங்காமல் கோவிலில் விளக்கேற்றி வைத்து இரவு முழுவதும் இசைக் கருவியின் இசைக்கேற்பக் கூத்தாடுவார்கள்.

இவ்விழாக்கள் படகர்களின் பண்டைநாளையக் கூட்டு வாழ்க்கையை நினைவுறுத்துவனவாக அமைந்துள்ளன. விழாக்களில் இவர்கள் பலவகையான பாடல்களை, இறைவனை நோக்கிப் பாடுவர். சமூக வாழ்வில் தோன்றிய பல மாற்றங்களின் காரணமாய் இப்பாடல்களில் சில தமிழ்ப்பாடல்களும் கலந்துள்ளன. அத்துடன் அவரவர்கள் தனித்தனியே செய்யும் வழிபாடும் மேலோங்கி இருப்பதனைக் காணமுடிகிறது. இருப்பினும் பழைய முறைகள் இன்றும் நிலை பெற்று நிற்கின்றன.

படகர்கள் ஹெத்தே அம்மன், மகாலிங்க சுவாமி, இருடையர், மாதேஸ்வரர், மாங்காளி, ஜடேயசுவாமி, நீலகிரி ரங்கசுவாமி முதலான தெய்வங்களுக்கு விழா எடுத்து, மக்கள் வாழவும் கால்நடைகள் நோயின்றிப் பெருகவும், விளைச்சல் நன்கு விளையவும் நம்பிக்கையின் அடிப்படையில் வணங்குகின்றனர்.[9]

### படகர்களின் விழா வகைகள்

படகஇனத்தில் பல நாட்கள் தொடர்ந்து நடைபெறும் விழாக்களும் உண்டு. ஒரே நாளில் முடியும் விழாக்களும் உண்டு.

ஹெத்தேஹப்பா, மாங்காளி ஹப்பா, கார்த்திகை தீபம் போன்றவை பல நாட்கள் தொடர்ந்து நடைபெறும் விழாக்களாகும்.

தொட்டஹப்பா, சக்கலாத்தி ஹப்பா, தீபாவளி, தெவ்வஹப்பா போன்றவை ஒரே நாளில் நடக்கும் விழாக்களாகும்.

தற்காலத்தில் கிருஷ்ணஜெயந்தி முடிந்ததும் ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு வாரம் உரியடி பண்டிகை நடத்துகின்றனர். இதன் நோக்கம், எல்லா ஊர் மக்களும் எல்லா விழாக்களிலும் கலந்துகொள்ள வேண்டும் என்பதாகும்.

### பெருவிழாக்கள்

ஹெத்தேஹப்பா, தெய்வஹப்பா, ஜடேய சுவாமி ஹப்பா, மாங்காளியம்மன் ஹப்பா போன்றவை படகரின் பெருவிழாக்கள் ஆகும். இவ்விழாக்கள் ஊர்கள்தோறும் கொண்டாடப் படுகின்றன.

இவ்விழாக்களில் படகர்கள் தெய்வங்களுக்குச் சிறப்பாகப் பூசைகள் செய்து வழிபடுவர்.

### ஹெத்தே ஹப்பா

இவ்விழா எல்லா ஊர்களிலும் ஒரேநாளில் நடைபெறுவதில்லை. சில ஊர்களில் ஒரே நாளில் இவ்விழா முடிந்துவிடும். சான்றாக, பெத்தளா, கூக்கல், நொந்தளா போன்ற ஊர்களில் நடைபெறுவதைக் கூறலாம்.

பரங்கி நாட்டில் மொத்தம் எட்டு நாட்கள் நடைபெறும். இவ்விழா முழுநிலவு வரும் நாளைப் பொறுத்து நவம்பர் கடைசி அல்லது டிசம்பரில் நடைபெறும்.

### ஹெத்தேஹப்பா பற்றிய கதை

நீலமலையிலுள்ள மேற்கு நாடாகிய 'நொந்தளா' என்னும் ஊரில் மாசத்தியாகி மறைந்த ஹெத்தே வீட்டில் மொத்தம் ஏழு பெண்கள். பரங்கி

நாட்டைச் சேர்ந்த வாலிபன் ஒருவன் செட்டியுடன் துணி வியாபாரம் செய்ய நொந்தளாவுக்குச் சென்றான்.

அவ்வூரில் ஒரு பெரியவர், தன் முதல் பெண்ணைத் திருமணம் செய்து தருவதாகக் கூறி, தம் வீட்டிலேயே அவ்வாலிபனை வைத்துக் கொண்டார். ஆனால் ஏழு பெண்களில் யாரையும் அந்த வாலிபனுக்கு மணம் செய்து கொடுக்கவில்லை. ஆறு பெண்களுக்கு வேறு இடத்தில் திருமணம் முடிந்துவிட்டது. கடைசிப் பெண் வீட்டில் இருந்தாள்.

அப்பொழுது பரங்கி நாட்டைச் சேர்ந்த அந்த வாலிபனுக்கு வயதாகிவிட்டது. அவன் இறந்ததும் அந்த ஊரிலேயே புதிய சுடுகாட்டை உருவாக்கி அதற்குத் 'தாந்துக் கொரை' என்ற பெயரை வைத்து அந்தச் சுடுகாட்டிலேயே அடக்கம் செய்தனர்.

அடக்கம் செய்த அடுத்த நாள் கடைசிப் பெண் எருமைகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்றாள். எருமை ஒரு குளத்தில் இறங்கி நீர் குடித்தது. அப்போது அந்தப் பெண் அக் குளத்தை எட்டிப் பார்த்தாள். அதில் இறந்துவிட்ட பரங்கி நாட்டைச் சேர்ந்தவர் தண்ணீருக்குள் சுருட்டு புகைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

உடனே அந்தப் பெண், தான் உடுத்தியிருந்த ஆடைகளில் ஒன்றாகிய 'மண்டைப்பட்டு' போர்த்தியிருந்த போர்வை, செருப்பணிகை, வெள்ளி

மோதிரம் இவற்றுடன் எருமை மேய்க்கும் தடியையும் வைத்துவிட்டுக் குளத்தில் இறங்கி மறைந்துவிட்டாள்.

மாலை நேரம் நெருங்கும்போது எருமைகள் தாமாகவே வீட்டிற்கு வந்ததைப் பார்த்த பெற்றோர்கள், மகளைக் காணாததை அறிந்து தேடிக் கொண்டு செல்லும்போது குளத்துப் பக்கத்தில் எருமை மேய்க்கும் தடியைப் பார்த்துவிடுகிறார்கள்.

ஆனால் 'அரைகெரை முண்டும்' மண்டைப்பட்டும் அக் குளத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் இருக்கும் 'சுத்தக்கல்' என்று சொல்லப்படும் மரத்துடன் கூடிய மேடையில் இருப்பதைக் கண்டு சிலர் அதைக் கொண்டு வந்தனர். (அங்கு அத்துணிகள் காற்றால் அடித்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது).

அந்த இடத்தில் ஒருவருக்கு மருள் வந்து, 'நான்தான் குளத்தில் மறைந்துவிட்ட பெண். நான் பரங்கி நாட்டிற்கு மாசத்தியாகி மறைந்துவிட்டேன். நான்தான் ஹெத்தே அம்மன்' என்று சொன்னார். எருமை மேய்க்கும் 'தடி' அந்தப் பெண்ணின் வீட்டிலேயே இருந்தது.

பரங்கி நாட்டிற்கு மாசத்தியாகச் சென்ற அப்பெண்ணைக் காண நொந்தளா என்ற ஊரைச் சேர்ந்தவர்கள் சென்றனர். அங்கே ஒருவருக்கு மருள் வந்து, 'மாசத்தி இங்கு வந்துவிட்டாள். அவள்

தங்குவதற்கு ஏற்றபடி 'சுத்தக்கல்' (அதாவது மேடை) அமைத்துவிடுங்கள்' என்று கூறினார்.

உடனே அவ்வூர் மக்கள் **சுத்தகல்** கட்டி அதில் ஒரு செடியை நட்டு வைத்தனர். தேடி வந்தவர்கள் இதனை அறிந்து அன்றுமுதல் ஹெத்தே அம்மனை வணங்கி வந்தனர்.

வருடத்ததில் ஒருநாள் மேற்குநாட்டைச் சேர்ந்தவர்கள் 'ஹெத்தே தடி'என்று சொல்லப்படும் எருமை மேய்க்கும் தடியையும், எருமைக் கன்றையும் கொண்டுவந்து பரங்கிநாட்டில் சேர்த்துவிடுவர். பூசை முடிந்ததும் மீண்டும் மேற்கு நாட்டிற்கு அதைக் கொண்டுசெல்வார்கள்.

சிலகாலம் அவ்வூரில் இருந்தபின் அங்குத் தூய்மை போதாத காரணத்தால் 'ஹெத்தே நான் பேரகன்னிக்குப் போயவிட்டேன்'என்று சொல்வதாக ஒருவர் சாமிஆடி சொன்ன செய்தி 'நாக்குபெட்டக' அதாவது நீலகிரியிலுள்ள எல்லா ஊர்களுக்கும் பரவிவிட்டது.

அன்று முதல் பேரகன்னியில் ஹெத்தே அம்மனுக்கு வழிபாடு நடந்து வருகின்றது. ஒவ்வொரு வருடமும் தடிகளுடன் பலர் பேரகன்னிக்குச் சென்று பூசை செய்து வழிபட்டு, ஒரு வாரம் விழாவைக் **கொண்டாடிவிட்டு வருவார்கள்**. பூசையின்போது

காணிக்கையாக 'ஒரு அணா' என்று சொல்லப்படும் 25 பைசா செலுத்தப்படுகிறது. ஒருவார காலம் இவ்விழா நடைபெறும். நாக்கு பெட்டத்திலுள்ள எல்லா மக்களும் வந்து விழாவில் கலந்துகொள்வார்கள்.

மேற்கு நாட்டைச் சேர்ந்த நொந்தளா என்ற ஊரில் அக்குளம் இன்றும் உள்ளது. இங்கும் ஹெத்தையம்மனுக்குப் பூசை செய்யப்படுகிறது. எருமை மேய்க்கப் பயன்படுத்திய அத்தடியை இன்றும் ஊர்வலமாக எடுத்துச் செல்வர்.

ஹெத்தே அம்மனுக்கு ஒரு குடை செய்து அதையும் ஊர்வலமாக எடுத்துச் செல்வர். அந்தக் குடை, ஹெத்தே மறைவதற்கு முன் அணிந்திருந்த செருப்பணிகை, வெள்ளி மோதிரம் ஆகியவற்றால் செய்யப்பட்டது.

ஹெத்தேஹப்பா திருவிழாவைப்பற்றி அறிஞர் எட்கார் தர்ஸ்டன் எழுதியுள்ளார். இவர் எழுதியுள்ளது பேரகன்னி என்னும் ஊரில் நடத்தப்பட்ட விழாவைப் பற்றியதாகும். திருவிழா திங்கட்கிழமையில் தொடங்கி எட்டு நாட்கள் நடைபெறும்.

அம்மனுக்குத் துணி நெய்து தர, ஒரு சேடன் (தேவாங்கர்) அவனுடைய கைத்தறிப் பொருட்களுடனும் தேவையான நூல்கட்டுடனும் பேரகன்னி என்னும் ஊருக்கு வருவான். அங்கு

அவன் பொருட்களை வைத்துக்கொள்ள ஒரு தனி வீடு இருக்கும்.

விழாநாட்களில் ஒவ்வொரு நாளிலும் கோயில் முன் மக்கள் குழுமிப் பாட்டும் ஆட்டமும் நிகழ்த்திக் களிப்புறுவர். விழாவின் இறுதிநாள் வரை ஹெத்தே அம்மனைப் பார்க்க யாரையும் கோயிலுக்குள் அனுமதிக்க மாட்டார்கள்.

இறுதிநாள் காலையில் சேடனால் புதிதாக நெய்தளிக்கப்பட்ட துணியை ஓடையில் துவைத்துச் சுத்தம் செய்வர். துணியை உலர்த்திக் கோயிலுக்குக் கொண்டு வரும்போது மட்டுமே ஹெத்தே அம்மன் சிலையைப் பார்க்க அனுமதிக்கப்படும். அப்போது கொண்டு வந்த துணியை அம்மன் சிலைக்கு அணிவிப்பர். அம்மனுக்குக் காணிக்கை அளிப்பர்

பிற்பகலில் எல்லோரும் அவரவர் ஊர்களுக்குத் திரும்பிச் செல்வர். செல்லும் வழியில் இவர்களுக்கு தேநீர், பழங்கள் அளிக்கத் தர்மசாலைகள் இருக்கும்.

பேரகன்னி ஹெத்தே அம்மன் விழாவில் அம்மனுக்குப் பணம், அரிசி, பழங்கள், துணிகள், எருமைகள் ஆகியவற்றையும், பொன் வெள்ளியால் செய்யப்பட்ட குடைகளையும், காணிக்கையாக அளிப்பார்கள். எருமைகளைக் கொல்வதில்லை ஹெத்தே அம்மனுக்குப் பலியிடும் வழக்கம் இல்லை.

எருமைகள் கோயில் சொத்தாக வைத்துக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு நாளும் ஆட்டமும் பாட்டும் இருந்தாலும் இறுதிநாளில் அவை அதிகமாக இருக்கும்.

ஆண்கள் எல்லோரும் வட்டமாக நின்றுகொண்டு 'ஹா - ஹோ - ஹெ' என்ற சொற்களைப் பயன்படுத்தி நடனம் ஆடுவர். இச்சொற்கள் தொதவர்களால் படகர்களுக்குக் கற்றுத் தரப்பட்டவை என்று கூறுவர்.[10] 'ஹா - ஹோ - ஹெ' என்ற இந்தச் சொற்கள் அல்லா - சக்தி - ஏசு என்னும் பொருள் தருவதாகக் கருதப்படுகிறது. இங்குச் சக்தி என்பது ஹெத்தேயம்மனைக் குறிப்பதாகும்.[11]

### *தெவ்வா ஹப்பா*

படகர்களின் தெய்வங்களில் ஒன்றாகிய 'இருடையா' என்னும் சிவபெருமானுக்குச் சூலைத்திங்களில் கொண்டாடப்படும் விழாவிற்குத் தெவ்வா ஹப்பா என்று பெயர்.

படகர்கள் தம் நிலத்தில் விளைந்த பயிர்களை அறுவடை செய்தபின் அவற்றைக் கொண்டே இவ்விழாவினைச் சிறப்பாகச் செய்கின்றனர். கேழ்வரகு, சாமை, கஞ்சே முதலான தானியங்களைக் கொண்டு செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் இவ்விழாவில்

படைக்கப் பெறுகின்றன. இவ்விழா பண்டைக் காலந்தொட்டுப் படகர்களிடையே நிலைபெற்ற கூட்டு வாழ்க்கையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

தாம் வணங்கும் தெய்வத்துக்கு நன்றி செலுத்தும் முகத்தான் எடுக்கப்படும் விழாவாகும். இது குறையாத விளைச்சலை அளித்த தெய்வத்திற்கு உணவு படைக்கும் நன்றிக்கடன் ஆகும்.

தெவ்வா ஹப்பா தொடங்குவதற்கு அறிகுறியாக ஒரு வாரத்திற்கு முன்னரே கொடியேற்றப்படுகிறது.

திருவிழா நாளுக்கு முதல் நாள் இரவில், விளக்கு வெளிச்சம் இல்லாத நேரத்தில் ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள சோலையிலிருந்து 'இருடையா' என்னும் ஐயன் கற்சிலையை எடுத்து வந்து ஊரிலுள்ள கோவிலில் வைப்பர். சிலையை எடுத்து வருபவர் குறும்பர் ஆவர். அதன் பிறகுதான் விளக்கு ஏற்றி வைப்பார்கள். அடுத்த நாள் விழா நடைபெறும். அதில் அம்பலத்தில் அறிகட்டுவர்.

அம்பலம் என்பது வெறும் கல்தூண் கொண்ட மேடை. அதில் புதிதாக அறுவடை செய்த கஞ்சையை மாலையாகச் செய்து கட்டுவார்கள். இதற்குப் பெயர் 'அறிகட்டுதல்' என்பதாகும்.

பரங்கிநாட்டைச் சார்ந்த 'தாந்தநாடு' என்று சொல்லப்படும் ஊரில்தான் தெவ்வா ஹப்பா சிறப்பாக

நடைபெறும். அங்கு ஒவ்வொரு வீட்டிலும் முதலில் பிறந்த ஆண் குழந்தையை அதன் தாய், படகர் உடையை அணிந்து கோயிலலுக்குக் கொண்டு வந்து தெய்வத்தை வணங்குவார்.

பிறகு கோயிலில் புது தானியங்களைப் பொங்கலிட்டுக் கடவுளுக்குப் படைப்பர். பின் அப்பொங்கலைக் குழந்தையின் தாய் தந்தையர்களுக்கு அளிப்பர். பெண் அவ்வுணவை வுண்டபின் பூசாரி தரும் நீரிலேயே கைகழுவிச் செல்வர். அவர்கள் கோயிலைவிட்டு ஒருவர் பின் ஒருவராக வெளியே செல்வது அழகாக இருக்கும். இந்நிகழ்ச்சிக்கு ‘மண்டி தந்த’ என்று பெயர்.

ஆண்கள் எல்லோரும் வட்டமாக நின்று பாட்டுப் பாடிக் கூத்தாடுவர். இத்துடன் விழா முடிந்துவிடும். மறுநாள் இரவு வெளிச்சம் இல்லாத நேரத்தில் அந்த ஐயன் கற்சிலையைக் குறும்பரில் ஒருவர் கொண்டுபோய்ச் சோலையில் வைத்துவிடுவார். அந்தச் சோலையில் மக்கள் நடமாட்டம் இருக்காது. விழா முடிந்த அடுத்த நாளிலிருந்து அறுவடை தொடங்கும்.

### ஜடேய சுவாமி ஹப்பா

இவ்விழா மேலூர், தங்காடு, மைனலை, ஜெக்கனாரை, தேனாடு, நெடுகுளா, மஞ்சகொம்பை ஆகிய ஊர்களில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவில் 'தீக்குண்டம்' மிதித்தலே சிறப்புடைய நிகழ்ச்சியாகும்.

தீ மிதிப்போர் எட்டு நாட்கள் விரதமிருப்பர். ஒன்பதாம் நாள் 'தீ மிதி விழா' நடைபெறும். இவ்விழாவின்போது மக்கள், நாட்டின் எதிர்காலம், விளைச்சல், நாட்டின் வளம் முதலானவற்றை அறிய நிமித்தம் பார்ப்பார்கள். இந்நிமித்தத்தைப் பால் காய்ச்சும்போது பொங்கி வழிவதைக் கொண்டு அறிவர்.

அதாவது ஒரு குடத்தில் பால் காய்ச்சுவார்கள். அவ்வாறு காய்ச்சும்போது பால் எல்லா திசைகளிலும் ஒரே சமயத்தில் பொங்கினால் எல்லாத்திசையும் அந்த ஆண்டு வளமாக இருக்கும். ஒரு பக்கமாக முதலில் பொங்கி வழிந்தால் அத்திசை மட்டும் வளமாக இருக்குமென நம்புகின்றனர்.[12]

தீ மிதிப்பதற்கான குண்டம் பதினைந்தடி நீளமும் ஒன்பதடி அகலமும் கொண்டதாய் இருக்கும். குண்டம் நிறைய மரக்கட்டைகளைப் போட்டு அதைத் தீக்குண்டக்கோலைக் கொண்டு நெருப்புப் பற்ற வைப்பார்கள். தீக்குச்சியையும் முன்பே இருக்கும் நெருப்பையும் பயன்படுத்த மாட்டார்கள்.

பூசாரி புதிதாய்க் கறந்த பால், பூக்கள், தேங்காய் இவற்றுடன் முதல் பூசையை முடிப்பார். அதன்பின் குண்டத்தின் மீது கறந்த பாலைத் தெளிப்பார். பிறகு

பூக்களைப் போடுவார். இவை எத்தகைய மாற்றமும் இல்லாமல் இருக்கவேண்டும்.

பூக்கள் நெருப்பில் கருகாமல் இருக்கவேண்டும். பால் கமறல் நாற்றம் வராமல் இருக்கவேண்டும். இவை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இவ்வாறு இருப்பது நாட்டின் வளத்திற்கு முன் அறிகுறியென நினைப்பர். அதன் பிறகு முதலில் பூசாரியும், அடுத்து தெய்வத்திற்கு நேர்ந்து விரும்பி விரதம் இருந்தவர்களும், தீக்குண்டத்தில் இறங்கித் தீ மிதிச் சடங்கில் கலந்துகொள்வர்.

இந்த தீ மிதி விழா, ஜடேய சுவாமியைச் சாந்தப்படுத்துவதற்காகச் செய்யப்படுகிறது. இத்தெய்வத்திற்கு படக மக்கள் நேர்த்திக்கடன் செய்து கொள்கின்றனர். சிலர் ஆண்டு முழுவதும் தலைமுடியை வளர்த்து முடியை காணிக்கையாகச் செலுத்தி வருகின்றனர்.

இவ்விழாவின்போது பாட்டும் கூத்தும் இருக்கும். விழா முடிந்த அடுத்த நாளில் மக்கள் நிலத்தில் விதை விதைப்பர்.

மேற்கு நாட்டுப் பகுதியில் நடைபெறும் தீ மிதி விழா சற்று வேறுபாடானது. விழா நடைபெறும் ஒவ்வொரு ஆண்டிலும் அந்த ஆண்டில் கன்று ஈன்ற

பசுவின்பாலைக் கறந்து, அப்பாலுடன் பூவையும் கையில் ஏந்திக்கொண்டு, பூசாரி தீ மிதித்தவுடன் மற்றவர்கள் மிதிப்பர். பூவும் பாலும் தீக்குண்டத்தில் இறைக்கப்படும். விழா முடிந்த அடுத்த நாள் முதல்உழவு தொடங்கப்பெறும்.[13]

தீ மிதி விழா இங்கிலாந்து, ஐரோப்பாவில் போலந்து, ஜெர்மன், செக்கோஸ்லோவோகியா போன்ற நாடுகள், மொராக்கோ அல்ஜீரியா போன்ற முஸ்லீம் நாடுகள், இரான் ஆகிய இடங்களிலும் கொண்டாடப்படுகிறது. அங்கெல்லாம் கொண்டாடப்படும் தீ மிதி விழாவிற்கும், படகர் கொண்டாடும் தீ மிதி விழாவிற்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன.

ஸ்காட்லாந்தில் நடக்கும் தீ மிதி விழா கூர்ந்து நோக்குதற்குரியது.

இவ்விழாவின்போது மலைமுகட்டின் மேல் எல்லோருக்கும் தெரியும்படி வட்டமான புல்தரை உருவாக்கப்படும். அதன் நடுவில் தீ மூட்டப்படும்.

தீ மூட்டுவதற்குத் தீக்குச்சியையோ சிக்கிமுக்கிக் கற்களையோ பயன்படுத்த மாட்டார்கள். ஒரு பலகையில் ஓக் மரத் திருகு கோலால் தீ ஏற்படுத்தி அதைக்கொண்டு தீ மூட்டுவர்.

இவ்வாறு தீக்கடை கோலால் நெருப்பு உண்டாக்குவது ஐரோப்பா முழுவதும் காணப்படும் மரபாகும்.

மனிதர்களின் நோய்க்கும், கால்நடைகளின் நோய்க்கும் தீ சிறந்த மருந்தாகக் கருதப்படுகிறது.

தீயைச் சுற்றிலும் பாட்டும் கூத்தும் நடைபெறும். இறுதியில் பணியாரம் வழங்கப்படும். இந்தத் தீ, கால்நடைகளை அழிக்கும்; சூனியக்காரிகளை விரட்டும் என்னும் நம்பிக்கையும் ஆட்டிடையர்களிடம் உள்ளது.[14]

ஸ்காட்லாந்து நாட்டு மக்களின் தீ மிதி விழாவிற்கு ஏற்ப, படகர்கள் தீ மிதி விழாவின்போதும் தீக்குண்டத்தின் மீது மாடுகளை ஓட்டுவர். அதனால் கோமாரி போன்ற கால்நடை நோய்கள் நீங்கும் என்னும் நம்பிக்கை படகர்களுக்கு உண்டு.

ஐரோப்பிய தீ மிதி விழாவும், படகர் தீ மிதி விழாவும் பல வகையில் ஒப்பிடத்தக்கவை என்பது வியப்பிற்குரிய செய்தியாகும்.

எனவே, படகர்கள் செய்யும் தீ மிதி விழா மனிதர்களின் நோய்களையும், கால்நடைகளின் நோய்களையும் போக்கவே கொண்டாடப்படுகிறது என்று அறிய முடிகிறது.

***மாங்காளி ஹப்பா***

'மாங்காளி ஹப்பா' என்னும் விழா மார்ச் மாதத்தில் நடைபெறும். செவ்வாய் நாளில் தொடங்கி மறு செவ்வாய் நாளில் முடிவுறும்.

இவ்விழா தொடங்குவதற்கு அறிகுறியாக ஒரு வாரத்திற்கு முன்பே எல்லா ஊர்களிலும் கொடியேற்றப்படும். ஒரே அம்மன் சிலை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊருக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். அவ்வாறு செல்லும்போது மக்கள் திரளாக எல்லா ஊர்களிலிருந்தும் ஓர் ஊருக்குச் செல்வர்.

அந்த ஊரில் எல்லோருக்கும் விருந்து அளிக்கப்படும். இரவு நாடகம், பாட்டு, கூத்து நடைபெறும். மக்கள் தேங்காயுடன் அம்மனுக்குப் பூசை செய்து வழிபடுவர்.

இவ்விழாவின் இறுதிநாளில் அம்மனுக்குப் பலி கொடுக்கப்படும். தெய்வத்திடம் நேர்ந்து கொண்டவர்கள் விழாவின் இறுதிநாளில் நேர்த்திக் கடனைச் செலுத்துவர். அம்மன் சிலை இறுதி நாளன்று கோயிலில் சேர்க்கப்படும்.

நேர்த்திக் கடனாக அம்மனுக்குக் கோழி, ஆடு போன்று உயிர்ப்பலி கொடுப்பார்கள். மற்றும் முடி, நவதானியங்கள், குடை, கோயிலுக்குத் தேவையான

தட்டு, கோயில் மணி போன்றவற்றையும் அளிப்பார்கள். விழாவின் இறுதிநாள் இரவு எல்லா வீடுகளிலும் ஊன் உணவு சமைத்து உறவினர்களுக்கு அளிப்பார்கள். இத்துடன் விழா முடிவடையும்.

மறுநாள் அதிகாலையில் மக்கள் அவரவர் நிலத்தை உழுது பயிரிடுவர்.

இவ்விழா, உழவு மேற்கொள்வதற்கு முன் அம்மனை வணங்கி, விளைச்சல் பெருக்க வேண்டிக்கொள்ளும் முறையில் அமைவதாகும். இவ்விழா படக மக்களின் கூட்டு வாழ்க்கையையும், ஒற்றுமையையும் தெளிவுறுத்துவதாக அமைகின்றது.

### *சிறு விழாக்கள்*

படகரின் சிறு விழாக்களாக, தொட்ட ஹப்பா (பொங்கல்), தீபாவளி, சக்கலாத்தி ஹப்பா, கார்த்திகை தீபம் போன்றவற்றைக் குறிக்கலாம். இவ்விழாக்களில் பல, தமிழ்நாட்டு விழாக்கள் ஆகும். தீபாவளி இந்தியா முழுதும் கொண்டாடப்படும் பெருவிழாவாகும். இப்பெரு விழா படகர் வாழ்வில் சிறு விழாவாகக் கொண்டாடப்படுகின்றது இது ஆராய்தற்குரியது.

### *தொட்ட ஹப்பா*

தொட்ட ஹப்பா என்பது மாட்டுப் பொங்கலைக் குறிப்பதாகும். பொங்கல் விழா மிகுந்த ஈடுபாடுடன்

கொண்டாடப்படுவதில்லை. மாட்டுப் பொங்கல் கொண்டாடுவர். அன்றைய தினம் மாடுகளுக்குச் சிறப்புச் செய்து மேய்ச்சல் நிலங்களுக்கும் வீட்டிற்கும் ஓட்டிச் செல்வர்.

பெரும்பாலும் இந்தக் கால்நடைப் பெயர்ச்சி விழாவைத் தொதுவர்களிடமிருந்து படகர்கள் பெற்றிருக்க வேண்டும்.

இவ்விழாவின்போது எல்லா வீடுகளிலும் சிறப்பான, பல வகையான பலகாரங்கள் செய்வர்.

தொட்ட மனைக்கேரியில் ஒவ்வொரு வீட்டிலும் சமைத்த சமையலையும், காய்களையும், பலகாரங்களையும் ஒரு தட்டில் வைத்து எடுத்து வருவர். அங்கு ஒரு பெரிய தட்டில் மற்ற வீடுகளிலிருந்து கொண்டு வந்த சோற்றைக் கொஞ்சம் எடுத்து வைத்து, அதைக் கன்றுகுட்டியைச் சாப்பிடச் செய்வர்.

அக்கன்று குட்டியை நன்றாக நீராட்டிக் கொம்பில் வண்ணம் தீட்டி, கழுத்தில் மாலை போட்டு, நெற்றியில் திருநீற்றைப் பூசி அழகுபடுத்தி இருப்பர். அக்கன்றுக்குட்டி சாப்பிட்ட தட்டிலிருந்து மீதியை எல்லோருக்கும் பிரசாதமாய் அளிப்பர். பின் அவரவர் வீடுகளில் செய்த பலகாரங்களையும் உண்டு மகிழ்ச்சியாய் விழாவினைக் கொண்டாடுவர்.

இவ்விழாவின்போது புதிதாக அறுவடை செய்த தானியங்களைக் கொண்டு தெய்வத்திற்குப் படையல் செய்வர்.

### *தீபாவளி*

படகரும் தீபாவளி கொண்டாடுவர். நாட்டின் மற்ற பகுதியில் கொண்டாடப்படுவது போல் அவ்வளவு சிறப்பாகக் கொண்டாடுவதில்லை. வசதிக்கு ஏற்றவாறு தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். இது மற்ற விழாவைப் போல் அவ்வளவு முக்கியமானதாய்க் கருதுவதில்லை. தற்காலத்தில் இவ்விழா பரவலாகப் பெரும்பான்மை மக்களால் சிறப்பாகவே கொண்டாடப்படுகிறது.

### *சக்கலாத்தி ஹப்பா*

இவ்விழா நவம்பர் மாதத்தில் நடைபெறும். இது ஒரேநாளில் நடைபெறும் விழா.

இவ்விழாவின் முதல் நாள் படகர்களின் வீட்டுக் கூரையின் மேல் 'காப்பு ஹாக்குதல்' என்னும் சடங்கு நடைபெறும். மறுநாள் மாலையில் வீட்டு வாயிலில் சாம்பலைக்கொண்டு பசு, எருது, கிளி, சூரியன், சந்திரன், ஏர், கலப்பை, பாம்பு போன்றவற்றை வரைந்து வைப்பர்.

கோதுமை மாவினால் செய்த மாவிளக்கில் எண்ணெய் விட்டு மூன்று திரிகளைக் கொளுத்தி வழிபாடு செய்வர். இவ்வழிபாடு வயல்வெளியில் நடைபெறும்.

பிறகு வீட்டிற்கு அவ்விளக்கினைக் கொண்டு வந்து மந்திரங்களைச் சொல்லி நீண்டநேரம் வழிபடுவர். 'திருட்டி' கழிப்பர்.

பின் வீட்டில் செய்த தோசையைக் எடுத்துக் கொண்டு வயலுக்குப் போகும்போது 'பேட், பேட்' என்று கூவிக்கொண்டு பேய்களுக்கு உணவு இடுவர்.

இவ்விழா தீய சக்திகளுக்குச் சாந்தி செய்ய நடத்தப்படும் விழாவாகும். பயிரும், குடியும் நலமாக இருக்க வேண்டி இவ்விழா செய்யப்படுகிறது.

இறுதியில் படைத்த தோசையை விளைநிலத்தில் வீசிவிட்டு வந்துவிடுவர். பிறகு இறைவனை வழிபட்டு உண்டு மகிழ்வர்.

### *கார்த்திகை தீபம்*

இவ்விழாவின்போது கோவிலிலும் வீட்டிலும் 101, 301, 1001 என்று மண்விளக்கில் எண்ணெய் ஊற்றி ஒளி ஏற்றி வைப்பார்கள். ஆமணக்கு எண்ணெய்தான் பயன்படுத்துவர்.

வீட்டில் 'பணியாரம்' என்னும் இனிப்பைச் செய்து இறைவனுக்குப் படைத்து வழிபடுவர். இவ்விழா எளிமையாகவே கொண்டாடப்படுகிறது.

இவ்விழா தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும். மூன்று நாட்களும் மண்விளக்கை ஏற்றி வைப்பர். முதல் நாளைவிட இரண்டாம் நாளிலும், இரண்டாம் நாளைவிட மூன்றாம் நாளிலும் விளக்குகளின் எண்ணிக்கை குறைவாய் இருக்கும்.

படகரது விழாக்கள் பண்டைநாளைய தமிழ் விழாக்களை நினைவுறுத்துகின்றன.

எல்லா விழாக்களிலும் கூத்தும் பாட்டும் நிகழ்வதை இன்றும் நாம் காண்கிறோம்.

சங்கப் பாடல்களில் கூறப்படும் விழாக்களில் பாடலும் கூத்தும் நிகழ்வதை யாவரும் அறிவர். அந்த விழா, படகர் விழாக்ககளில் சில மாற்றங்களோடு நிகழ்வதைக் காணலாம்.

தேசிய விழாக்களின் சிறப்பு நிலையைப் படகர்கள் உணராதது வியப்பில்லை என்றே கூறவேண்டும். இதற்குக் காரணமுண்டு.

இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்து நீலமலை வாழ் மக்கள் பிரிந்து இருந்தமையால், பழங்காலத்தில் தோன்றிய வழிபாடுகள், சடங்குகள், நம்பிக்கைகள்

போன்றவை சென்ற நூற்றாண்டு வரை நிலை பெற்றிருந்தன ஆனால் இன்று மாறி வருகின்றன.

படகர் வாழ்வில் கல்வியால் நவீன அறிவியல் கோட்பாடுகள் செல்வாக்குப் பெறத் தொடங்கிவிட்டன. அதனால் பழங்காலத்திய கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடி வருகின்றன.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த சடங்குகள், வழிபாடுகள் போன்றவை இக்காலத்தில் மாறிவருகின்றன்.

மாறிவரும் காலத்திற்கேற்பத் தங்களை மாற்றிக்கொள்ளும் பக்குவத்தைப் படக மக்கள் பெற்று வருகின்றனர்.

மக்களின் மகிழ்ச்சியான உணர்வுகளை வெளிப்படுத்துவனவாக விழாக்கள் அமைகின்றன. விழாக்களின் மூலம் படகஇன மக்களின் பண்பாட்டை அறிந்துகொள்ள முடிகிறது. படக இன மக்களின் பழக்க வழக்கங்கள், கூட்டு வாழ்க்கை முறை, ஒற்றுமை மனப்பான்மை ஆகியவற்றை இவ்விழாக்கள் தெளிவுறுத்துவனவாக அமைந்திருக்கின்றன.

# குறிப்புக்கள்

1. க. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 51.
2. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்) அகநானூறு, ப. 410.
3. இளவழகனார் (உரையாசிரியர்), கலித்தொகை, ப. 241.
4. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, ப. 41.
5. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்) பத்துப்பாட்டு, ப. 12.
6. ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உரையாசிரியர்), சிலப்பதிகாரம், ப. 106.
7. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, ப. 250.
8. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, ப.4.
9. Edger Thurston, Castes and Tribes of Southern India, Vol.I,p.96.

10. Edger Thurston, Castes and Tribes or Southern India, Vol.I pp. 96-97.

11. அ.மு. பரமசிவானந்தம், மலைவாழ் மக்கள் மாண்பு, ப. 144.

12. ஜே. நந்திகவுண்டர் என்பாரிடம் கேட்டு எழுதியது.

13. F.R. Alchin, Neolithic Cattle Kepers o Southern India, p. 126.

14. F.R. Alchin, Neolithic Cattle Kepers o Southern India, p. 136-137.



## இயல் : ஐந்து

# நம்பிக்கைகளும் சடங்குகளும்

### *நம்பிக்கைகளும் சடங்குகளும்*

'ஒரு சமூகம் தனக்குச் சொந்தமான குணத்தை இழக்கும்போது அதற்கு ஏற்ப முன்பே அமைந்திருந்த நடைமுறைகள், நம்பிக்கைகளாய் எஞ்சுகின்றன' என்று நம்பிக்கைபற்றி விளக்கம் அளிக்கப்படுகிறது.

வழிபாடு, பழக்க வழக்கங்கள், சடங்குகள் முதலியன யாவும் நம்பிக்கை அடிப்படையிலேயே அமைகின்றன.

பழக்கம் என்பது பயற்சியின் முதிர்ச்சி. உயர்ந்தோர் பழக்கங்கள் காலப்போக்கில் வழக்கங்கள் என்று பெயர் பெறுகின்றன.

ஒரு செயல் நன்மை தருக்கின்றது என்று மக்கள் உணரும் நிலையில் அது பழக்கமாகத் தொடர்கிறது. காலப் போக்கில் அறிவியல், கல்வி ஆகியவை

காரணமாகச் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும்போது அது சடங்காக நிற்கிறது.[2]

சில நேரங்களில் தவிர்க்க இயலாத வகையில் மூட நம்பிக்கைகள் வளர்ந்து பகுத்தறியும் நிலையைத் தவிர்க்கவும் செய்கின்றது.

மேற்கூறிய நம்பிக்கைகளும் சடங்குகளும், நம்பிக்கை அடிப்படையிலான கடவுள் வழிபாடுகளும், மூடநம்பிக்கைகளும் படகர் சமூகத்தில் அமைந்திருக்குமாற்றை ஆராயின் அவர்கள் வாழ்வியல் நிலைகள் சிலவற்றை அறிய ஏதுவாக இருக்கும்.

### தெய்வ நம்பிக்கை

இயற்கையின் அச்சம் தரும் செயல்களே மனிதனை இறை நம்பிக்கைக்கு இட்டுச் சென்றன என்று கூறலாம். மனிதன், தன் அறிவுக்கும் திறனுக்கும் புலப்படாத, அடங்காதவற்றின் மீது அச்சம் கொண்டான். அந்த அச்சத்தின் காரணமாக இறை நம்பிக்கை தோன்றியது எனலாம்.

இயற்கையின் புதிரான செயலை மனிதன் உணர முடியாத நிலையில், அதனை வழிபட்டு அமைதிப்படுத்த முயன்றபோது வழிபாடு உருவாகியது என்றும் கூறலாம்.[3]

இயற்கையின் கூறுகளான நிலம், நீர், காற்று, ஆகாயம், மலை, ஞாயிறு, திங்கள் போன்ற இயற்கை

நிலைகளை வழிபடும் தன்மையினையே இயற்கை வழிபாடாகக் கருதுவர். இதற்கு ஏற்ப,

> **கொடிநிலை கந்தழிவள்ளி என்ற**
> **வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
> **கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே**[4]

என்னும் தொல்காப்பிய நூற்பா அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலில் திங்கள், ஞாயிறு, மாமழை போற்றப் பட்டமையையும் இங்கு உணரத் தக்கது.

இறைநம்பிக்கை படக இன மக்களிடத்தும் தொன்றுதொட்டு இன்றுவரை இருந்து வருகின்றது.

அவர்கள், கடவுளுக்குக் காணிக்கையாக முடியெடுத்தல், காவடியெடுத்தல், மற்றும் நோயுற்ற உறுப்புகளைத் தங்கம் அல்லது வெள்ளியால் செய்து அளித்தல் முதலியவற்றில் ஏதாவதொன்றைச் செலுத்துவதாகத் தெய்வத்திடம் நேர்ந்துகொள்ளும் பழக்கம் இன்றும் காணமுடிகிறது.

நேர்த்திக் கடன் செய்வதில் பலியிடுதலும் முக்கியப் பங்கு பெறுகிறது. காளிக்குப் பலியிடுதல் படகரிடம் காணப்படும் முக்கிய நேர்த்திக்கடன்.

ஹெத்தே அம்மனுக்குத் தானியங்கள், எருமைகள், காளை மாடுகள் போன்ற கால்நடைகள், வெள்ளியால் செய்த சிறிய குடை போன்றவற்றை அளிப்பர்.

ஐடேயா சுவாமிக்கு முடி, நூற்றுக்கணக்கில் தேங்காய், தானியங்கள் போன்றவற்றைக் காணிக்கையாகச் செலுத்துவர்.

**கண்ணேறு கழித்தல்**

கண் திருட்டி என்னும் நம்பிக்கையும் படகரிடம் உண்டு. சிலருடைய பார்வையே தீங்காகிவிடும் என்பதைத்தான் 'கண் திருட்டி' என்று சொல்வார்கள்.

அதற்கு கழுவாயாகக் கண்ணேறு கழித்தல் செய்தல் உண்டு. அவ்வாறு செய்யும்போது தமக்கு ஏற்பட்ட தீங்கு நீங்கும் என்று நம்பினர். அதற்காக முச்சந்தியிலே மண்ணெடுத்து வந்து தலையை மூன்றுமுறை சுற்றி வீதியிலே போடுவார்கள். இந்த நம்பிக்கை இன்றும் உண்டு. இது ஒரு முறை.

மற்றொரு முறை : மூன்று முதல் நூற்றொன்று வரை ஒற்றைப்படையில், மிளகாய்வற்றலையும், உப்பு, நவதானியங்கள், துடைப்பக்குச்சி, சுண்ணாம்பு போன்றவற்றையும் எடுத்துக்கொண்டு தலையை மூன்று முறை வலமாகவும் இடமாகவும் சுற்றி அடுப்பில் எரியும் நெருப்பில் போடுவார்கள். பின் அதிலிருந்து சாம்பலை எடுத்து நெற்றியில் பூசுவார்கள்.

இதைக் கண் திருட்டி பட்டவர்களுக்கு மற்றவர்கள்தான் செய்வார்கள். இதன்மூலம் நோய் நீங்கும் என்பது படக மக்களிடையே காணப்படும் நம்பிக்கையாகும்.

இதில் சிறப்பு என்னவென்றால், வழக்கமாக எரியும் நெருப்பில் மிளகாய்வற்றலைப் போடும்பொழுது ஏற்படும் தொண்டைக் கமறலானது இம்மக்களின் நம்பிக்கைப்படி கண்திருட்டி பட்டிருப்பின் ஏற்படுவதில்லையாம்.

புராணங்களிலும் கண்ணேறு கழித்தல் போன்ற சடங்குகள் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது புராண காலத்தில் நம்பிக்கைகள் அதிகமாக நிலவியது எனலாம். இந்த காலக் கட்டத்தில்தான் இது தோன்றியது என்று வரையறுக்க முடியாததாய் உள்ளது.

**நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்**
**மறைமொழி தானே மந்திரம் என்ப**[5]

என்னும் நூற்பாவின் மூலம் மந்திரம் பற்றிய நம்பிக்கைகள் பண்டைக்காலம் தொட்டு இருந்து வந்தமையை அறியலாம்.

மந்திரம், மாய மருந்து பற்றிய எண்ணங்கள் பெருங்கதை போன்ற இலக்கியங்களிலும் அமையக்

காணலாம். 'பொதுவாக, பழங்குடிகளின் அன்றாட வாழ்வில் ஆதிக்கம் செலுத்துவனவாக இவ்வெண்ணங்கள் அமைந்திருக்கின்றன' என்கிறார் வெரியர் எல்வின் என்பவர்.

படகரிடம் மந்திரம் பற்றிய நம்பிக்கையும் உண்டு. வீட்டில் ஏதாவது திருட்டுப்போயிருந்தால் ஊரிலுள்ள 'மாசத்திகல்' என்ற கல்லுக்கு மிளகாய் வற்றலை அரைத்து அந்தக் கல்லுக்குப் பூசித், 'திருடியவர்களின் உடம்பு மிளகாய் வற்றலைத் தொட்டால் எரிவது போல் எரியவேண்டும்' என்று சொல்லி மந்திரிப்பார்கள்.

தேள் கடிக்கு மந்திரிக்கும் வழக்கமும் படகரிடம் உண்டு.

குழந்தைகள் விடாமல் அழுதால் திருநீற்றை மந்திரித்து குழந்தையின் நெற்றியில் பூசுவர்.

மாடு பால் கறக்கவில்லையென்றால் தொழுவம் துய்மையில்லை என்று நினைத்துச் சாம்பிராணி புகைத்து மந்திரிப்பர். இவை படக மக்களிடம் காணப்படும் மந்திரம் பற்றிய நம்பிக்கைகளாகும்.

பில்லி, சூனியத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை இருந்து வந்தது. படக இன மக்களுக்குக் குறும்பரைக் கண்டால் பேரச்சம். படகருடைய நாடோடிக் கதைகளில் குறும்பர்கள் அடிக்கடி வருவர். குறும்பர் விரும்பினால்

படகப் பெண்டிரின் இதயத்தை வலி தெரியாமல் கொன்றுவிடுவர் என்னும் நம்பிக்கையும் படகரிடம் உண்டு.

மந்திரத்தின் உதவியால் இரவில் ஒருவரும் அறியாமல் வீட்டுக்குள் புகுந்து வேண்டியவற்றை எடுத்துச் சென்று விடுவர் என்ற பயவுணர்வும் படகரிடம் உண்டு.[7] இந்நம்பிக்கை இன்றும் படக மக்களிடம் உண்டு.

இடைவிடாது துன்பம் நேரும்போது, அதற்கான மூல காரணத்தை அறியாத மக்கள், இது சூனியத்தால் வந்த விளைவு என்று நம்பி சூனியம் நீங்குவதற்கான வழிமுறைகளை நாடுவர். இந்நம்பிக்கை இன்றும் மக்களிடம் உண்டு.

### *வினைகள் பற்றிய நம்பிக்கைகள்*

வினைகள் பற்றிய நம்பிக்கைகளும் மக்களிடம் இருந்து வருகின்றன. ஒருவர் செய்யும் நல்வினைத் தீவினைகளுக்கேற்ப அவருக்கு நன்மையோ, தீமையோ உண்டாகும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. நல்வினை செய்தோருக்கு நன்மை கிட்டும் என்று நம்பினர்.

செய்யும் நல்வினை ஏழு தலைமுறைக்கும் வரும் என்றும் படகர் நம்பினர். இவர்களுக்கு மங்கலச் சிறப்போடு சாவு கிட்டும் என்றும் நம்பினர்.

குழந்தை நிலைப்பதற்கு நல்வினை செய்திருக்க வேண்டும் என்பதும் படக மக்களின் நம்பிக்கை. தீவினை செய்தோருக்குப் பிள்ளைச் செல்வம் கிட்டாது என்றும், சந்ததி சிறப்பற்றுக் குடும்பமே அழிந்து போகும் என்றும் கருதுகின்றனர்.

தீராத நோயினால் ஒருவர் அல்லலுறும் போதும் அவருடைய தீவினைதான் இதற்குக் காரணம் என்று நம்பினர். இத்தகைய நம்பிகைகள் இன்றும் மக்களிடம் இருந்து வருகின்றன.

## *தலையெழுத்து பற்றி நம்பிக்கை*

தலையெழுத்து என்னும் நம்பிக்கை படக மக்களிடம் இருந்து வருகின்றது. பெருந்துயர் வரும்போது அதைத் தாங்கிக்கொண்டு, வேறு யாரையும் பழிக்காமல் தன் தலையெழுத்தே காரணம் என்று பொறுத்துக் கொள்ளும் நிலையையும் காண முடிகிறது.

வாழும் வயதில் தன் கணவனைப் பறிகொடுத்த இளமனைவியும், தன் ஒரே புதல்வனை இழந்த தாயும், வளமையோடு இருந்து வந்த குடும்பத்தில் திடீர் சரிவும் போன்ற துன்பநிலைகளில் படக மக்கள் தங்கள் தலையெழுத்து, விதி இவையே காரணமென்று நம்பி ஆறுதல் அடைவதையும் காணலாம்.

### குறி கேட்டல்

படகரில் ஒருவருக்கு உடல்நலம் இல்லாமல் இருக்கும்போது கோயில் பூசாரியிடம் சென்று குறி கேட்டல் இன்றும் உள்ளது. அவர் கூறுவனவற்றை நம்பி ஏற்றுக்கொண்டு அதற்கான கழுவாயையும் மேற்கொள்வர். இந் நம்பிக்கைகள் கல்வி வளர்ச்சியின் அடிப்படையில் குறைந்துள்ளன எனலாம்.

### கனவுகள்

கனவுகள் மீதும் படகர்களுக்கு நம்பிக்கை உண்டு. கனவில் தோன்றும் காட்சிக்கு நேர் எதிர்மறையான செயல்கள்தாம் நடக்குமென நம்பினர்.

கனவில் சாவுக் காட்சி தோன்றினால் வீட்டில் மங்கலகரமான காரியம் நடக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை.

பாம்பு மனிதனைத் தீண்டினால் சனி விட்டு விடும் என்றும் நம்பினர். பாம்பு கனவில் வீட்டிற்குள் வருவதுபோல் தோன்றினால் வீட்டில் தூய்மையில்லை என்று நம்பினர். அதற்கான கழுவாயையும் மேற்கொள்வர்.

வைகறை விடியலின்போது தோன்றும் கனவுக்கு உறுதியாகப் பலன் உண்டு என்று நம்பி வந்தனர். இந்நம்பிக்கை இன்றும் இருந்து வருகின்றது.

## பேய் ஓட்டுதல்

பேய்கள் கண்ணுக்குப் புலப்படாமல் உலவுவதாக மக்கள் நம்பினர். பேய் ஓட்டுவதிலும் நம்பிக்கை கொண்டுள்ளனர். அதுவும் பெண்களைத்தான் பிடிக்குமென்று நம்பினர். அதை ஓட்டப் பாட்டுப் பாடிப் பெண்ணை ஆட வைப்பர்.

சிலர் குறிப்பிட்ட நாட்கள் வரை அதாவது ஐந்து அல்லது ஏழு நாட்கள் ஆடவைத்து, சுருட்டு, சாராயம், பீடி, துண்டு, சாப்பிட இனிப்புகள் போன்றவற்றை வாங்கிக் கொடுப்பர்; இறுதிநாளில் பேய் ஓட்டும் நிகழ்ச்சி நடைபெறும். இது இன்றும் படக இன மக்களிடம் நடைபெற்று வருகின்றது.

இரவு நேரத்தில்தான் பேய் பிடித்ததாகக் கருதும் பெண்ணை ஆட வைப்பர். நண்பகலில் ஆட வைக்காததற்குக் காரணம் பெரும்பான்மையான மக்கள் அவர்கள் தொழில் நிமித்தமாகப் பகல் நேரத்தில் வீட்டில் இருப்பதில்லை. இரவு நேரத்தில் எல்லோரும் இருப்பார்கள் என்பதனால் அப்பெண்ணை இரவில் ஆட வைப்பர்.

பேய் பிடித்ததாகக் கருதப்படும் பெண்களின் மயக்கம் தீரும் வரையில் ஆட வைப்பர். அத்தனை நேரமும் வேறு வேறு பாடல் யாடி ஆட வைக்க

வேண்டுமென்னும் கட்டாயம் இல்லை. ஏதோ ஒரு பாடலைத் தினமும் பாடி ஆட வைக்கலாம். சான்றாக, ஒரு பாடல்:

***ஆடலி போஜீ ஆடாலி போஜீ***
***ஆட்ட ஒள்ளங்கே ஆடாலி போஜீ - 2***
***சின்ன துங்கார நாமாடித் தன்னே***
***சிக்க புட்ட ஆடாலி போஜீ - 2 (ஆடலி)***

***பெள்ளிய துங்கார நாமாடித் தன்னே***
***பெக்கவ புட்டு ஆடாலி போஜீ - 2***
***கெப்பு துப்பாட்டி நீ பேக்கெந்தேக***
***நா தன்னனே ஆடாலி போஜீ - 2 (ஆடலி)[8]***

நன்றாக நடனம் ஆடு போஜி. உனக்கு வேண்டிய தங்க மோதிரம், வெள்ளி மோதிரம், சிவப்புப் போர்வை ஆகியவற்றை நாங்கள் தருகிறோம். நீ வெட்கப்படாமல் பாட்டுக்கேற்றாற்போல் ஆட்டம் ஆடு என்பதே இப்பாட்டின் பொருள்.

## பருவமடைந்த மகளிர் பற்றிய நம்பிக்கை

பெண்கள் பூப்புற்றிருக்கும் காலங்களில் வீட்டிலுள்ள பொருள்களைத் தொடாமல் ஒதுங்கியிருக்கவேண்டும் என்று கூறுவர். அவர்கள் எதைத் தொட்டாலும் அதை வீட்டினுள் கொண்டு செல்ல மாட்டார்கள். தீட்டு கண்ணைக் கெடுத்து விடும் என்று நம்பி வந்தனர்.

பூச்செடிகளைத் தொட்டால் வாடிவிடும் என்னும் நம்பிக்கையும் அவர்களிடம் இருந்தது. வளரும் செடி அருகில் சென்றால் அவை சுருங்கி வாடி வதங்கி விடும் என்றும் நம்பினர்.[9]

### தும்மல்

தும்மல் ஒரு தீய நிமித்தமாகப் படகர்கள் கருதுகின்றனர். திருமணத்தின்போது மணப் பெண்ணுக்கு அழகு செய்யுமிடத்தில் தும்மக் கூடாது என்று சொல்வர். அவ்வாறு தும்முதல் தீய நிமித்தம் என்று நம்புகின்றனர்.

இதற்குக் காரணம் மணப்பெண்ணுக்கு அழகு செய்யும்போது தும்மல் காரணமாக அழகு படுத்துபவரின் கவனம் தடைப்படும் என்னும் அடிப்படையில் இதனைத் தீய நிமித்தமாகக் கருதி வந்தனர் எனலாம்.

### குழந்தைக்கு முன்னோர் பெயரை இடுதல்

குழந்தைக்குப் பெயரிடுவதில் படக இன மக்கள் பெரியவர்களின் பெயரை வைக்கும் வழக்கத்தைப் பின்பற்றுவதாகத் தெரிகின்றது. இவ்வழக்கம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது எனலாம். அந்நம்பிக்கையாவது பெயருக்குரிய முன்னோரின் ஆவி குழந்தையின் வாழ்நாள் முழுமையும் பாதுகாக்கும் என்றும், அவர்களைப் போன்று சிறந்து விளங்குவர் என்பதேயாகும்.

குழந்தைக்குத் தந்தையின் தந்தை பெயர் அல்லது தாயின் தந்தை பெயரைச் சூட்டுவது பெருவழக்கு.[10] இக் கருத்துக் கிணங்க வரும்,

**இனியெல்லா யாம் தீதிலேமென்று**
**தெளிப்பவுங்கைந் நீவி**
**யாதொன்று மெங்கண் மறுத்தர வில்லாயின்**
**மேதக்க எந்தை பெயரனை யாங் கொள்வோம்**
**தாவா விருப்பொடுகன்று யாத்துழிச் செல்லும்**
**ஆபோற் படர்தக நாம்**[11]

என்னும் பாடலும் இங்கு நோக்கத் தக்கது.

### *சடங்குகள்*

ஒரு மங்கல நிகழ்ச்சியோ, இறப்பு நிகழ்ச்சியோ அதற்குரிய காரண காரியம் அறிய முடியாத நிலையில் ஒரு சங்கிலித் தொடர் போன்று நிகழ்ந்து வரும் செய்முறை நிகழ்ச்சியைச் சடங்கு என்று கூறலாம். இது தொன்று தொட்டுமரபு வழியாக வருவது.

சடங்கு என்பதற்கு, 'கிரியை,' செய்முறை என்று தமிழ்மொழி அகராதி பொருள் தருகிறது.

சில குறிப்பிட்ட பழக்கவழக்கங்கள், சடங்குமுறைகள், ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு மட்டும் உரிமையுடையனவாக இருக்கும்.[12] படக இன மக்களிடமும் சில சடங்கு முறைகள் அவர்களுக்கே உரியவையாய்க் காணப்படுகின்றன.

### *திருமணச் சடங்குகள்*

மணவினை நெருங்கிய உறவினருடன் பெரும்பாலும் நடைபெறுவதில்லை. பெண் தூரத்து உறவாகவே இருப்பாள். காதல் திருமணத்திற்கு பெற்றோர் ஒப்புக்கொள்வதில்லை. பெற்றோருக்குத் தெரியாமல் கலப்புத் திருமணம் செய்துவிட்டால் அவர்களைச் சாதியிலிருந்து ஒதுக்கிவிடுவர்.

திருமணம் இரவில்தான் நடைபெறும். காரணம் காட்டுவிலங்குகள், பூனை முதலியவை பெண்ணின் கண்ணில் படக்கூடாது. அவ்வாறு பட்டால் நிமித்தம் நன்றாக இருக்காது என்பதால் திருமணம் இவ்வாறு நடைபெறும்.

திருமணத்தில் கலந்து கொள்ளும் எல்லோருக்கும் இரவில் உணவு அளிக்கப்படும். மணப்பெண், மணமகன் வீட்டிலிருந்து வந்திருக்கும் ஒரு பெண்ணுடன் ஒரே வட்டிலில் சேர்ந்து சாப்பிட வேண்டும்.

அதன்பின் பெண் வீட்டைச் சேர்ந்த பெரியவர்கள் ஐந்து, ஒன்பது அல்லது பதினொரு பேர் 'ஓகமனை' என்னும் உள்ளகத்தில் அமர்ந்திருப்பர்.

பெண்ணை அடுத்த வீட்டில் அலங்கரித்து, பெண் வீட்டிற்கு அழைத்து வருவார்கள். இவ்வாறு வரும்பொழுது வாசலிலேயே பெண் குடும்பத்திலுள்ள

ஒரு சுமங்கலிப் பெண்ணால் பெண்ணின் கழுத்தில் 'மாலைமணி' என்னும் ஒரு அணியை அணிவித்தல் வேண்டும்.

அதன்பின் பெண் வீட்டுக்குள் வலது காலை எடுத்து வைத்து வரவேண்டும். பிறகு உள்ளகத்தில் அமர்ந்திருக்கும் பெரியவர்கள் முன்னால் பெண் மண்டியிட்டு வணங்கி ஆசிர்வாதம் பெறுதல் வேண்டும்.

அப்பொழுது பெரியவர்கள் எந்தவகையான நோயும் இல்லாமல் மகிழ்ச்சியாக நூறு வருடக் காலம் வாழவேண்டும் என்னும் பொருளுடைய பாடலைச் சொல்லி ஆசீர்வதிப்பர்.

***சிங்கரவக் கொட்டு***
***பலவக் கொட்டு***
***சந்தோசவாகி***
***நூறு பருச காஎ பதிக்கி பா***

என்று கூறி ஆசீர்வதிப்பார்கள். அதன்பின்,

***சித்திரை திங்குவதோகே***
***சின்னத கொடைய நாலிடித்து***
***ஹாலிய மதுவை கூட்டிஞு ஹோப்போ***
***ஓஹோ, ஓஹோ, ஓஹோ***

என்றவாறு பாடி, பெண்ணுக்குக் குடைபிடித்து மணமகன் இல்லத்திற்கு அழைத்துச் செல்வர். அதே நாளில் வேறோர் திருமணம் நடந்து, அந்த மணப்பெண்

வந்தவழியே இந்தப் பெண்ணும் போகவேண்டி இருந்தால் அந்த இடத்தைக் காலால் மிதிக்காமல் இருக்க, பெண்ணைத் தூக்கிச் செல்வார்கள்.

மணப்பெண் மணமகனின் வீட்டிற்குள் வரும்பொழுது வாசலிலேயே மணமகனின் குடும்பத்தைச் சார்ந்த ஒரு சுமங்கலிப் பெண் மணப்பெண்ணின் கால்களுக்குத் தண்ணீர் ஊற்றுவாள். அதன்பின் கழுத்துக்கு வெள்ளியால் செய்த மாலைமணியை அணிவிப்பாள். பிறகு மணப்பெண் தன் வலதுகாலை முன்வைத்து வீட்டுக்குள் செல்ல வேண்டும்.

அவ்வாறு செல்லும்போது மணப்பெண்ணுக்குப் பெண்வீட்டார் பிடித்து வந்த குடையை உடனே மணமகண் வீட்டார் வாங்கிக் கொள்ளுதல் வேண்டும். அப்படி வாங்கவில்லையெனில் ரூபாய் 1¼ அபராதம் கட்டுதல் வேண்டும். மணமகனின் 'ஓகமனை' எனப்படும் உள்ளகத்தில் ஆண்வீட்டைச் சேர்ந்த பெரியவர்களை உட்கார வைத்து 'இதமனை' எனப்படும் வெளியகத்தில் பெண்வீட்டாரை அமரச் செய்து, பெண்ணை உள் வீட்டிற்கு அழைத்துச் சென்று மண்டியிட்டு வணங்கச் செய்வார்கள்.

அப்பொழுது பெண்ணைப் பெரியோர்கள் ஆசீர்வதிப்பார்கள். பெண் வெளிவீட்டிற்கு வந்தபின்

மணமகனின் தாய், மணப்பெண் முதலியோருக்கு சாமைச் சோறு கொடுப்பாள். மணமகன் வீட்டாரில் இருவர், மணமகள் ஆகிய இவர்கள் அனைவரும் மணமகனின் தாய் கொடுத்த சாமைச் சோற்றை ஒரே வட்டிலில் வைத்து உண்ணவேண்டும். உண்டபின் அந்த வட்டிலை மணப்பெண்தான் கழுவி வைக்க வேண்டும்.

மறுநாள் காலையில் மணப்பெண்ணுடன் மணமகனின் உறவுப்பெண்கள் இருவர் சேர்ந்து அங்குள்ள குளத்திற்குச் சென்று தண்ணீர் எடுத்து வரவேண்டும். அதன்பின் மணமகன் வீட்டில் எல்லோரும் உணவு உண்பார்கள்.

அதே நாளில் பகல் மூன்று மணிக்கு மேல் மணமகள் வீட்டிற்கு மறுஅழைப்பு என்ற பெயரில் ஆண்வீட்டைச் சார்ந்த ஒரு பெண்மணி அழைத்துச் செல்வார். இதற்கு 'மறுமனை அழைப்பு' என்று பெயர். அப்பொழுது மணப்பெண்ணின் கையில் நாட்டுப் பட்டாணி கொடுப்பர். அதை மணப்பெண் பிறந்த வீட்டிற்கு வந்ததும் அங்குள்ள எல்லோருக்கும் கொடுத்தல் வேண்டும்.

உணவருந்தியபின் வேறு உடை அணிந்து கொண்டு, தாய் வீட்டில் கொடுத்த நாட்டுப் பட்டாணியுடன் அன்றே மணமகன் வீட்டிற்குச் செல்லுதல் வேண்டும். வரும்போது பெண்வீட்டில் மண்விளக்கு எரிந்துகொண்டிருக்க வேண்டும். அதே

போல் தாய் வீட்டிலிருந்து மணமகன் வீட்டிற்குச் செல்லும்போதும், மணமகன் வீட்டிலும் மண்விளக்கு எரிதல் வேண்டும்.

### *கண்ணிக்கட்டு மதுவே*

மதுவே என்றால் திருமணம் என்பது பெயர். இத்திருமணம் பெண் கருவுற்ற ஏழாம் மாதத்தில்தான் கணவன் வீட்டில் நடைபெறும்.

திருமணத்தின்போது தாலிகட்டும் வழக்கம் இவர்களிடையே இல்லை. பந்தல் போடும் வழக்கமும் இல்லை. ஆனால் தன் மனைவி கருவுற்ற ஏழாம் மாதத்தில்தான் கணவன் அவருக்குத் தாலி கட்டுவான். இவர்களுக்குத் தாலி என்றால் மஞ்சள் கயிறு மட்டும்தான். கணவனே தாலி கட்டுவான். இச்சடங்கு கணவன் வீட்டில்தான் நடைபெறும். இந்நிகழ்ச்சியின்போதுதான் பந்தல் போடப்படும். உள்ளூர் உறவினர்கள் எல்லோரையும் அழைப்பார்கள். நல்ல நாள் பார்த்து இச்சடங்கு செய்வர்.

முதல்நாள் இரவு கணவன் வீட்டிற்கு மனைவியின் தாய் வீட்டிலிருந்து நிறையபேர் வருவார்கள். அவர்கள் வரும்போது ஒரு கூடை நிறைய 'பெல்லக் கூ' என்னும் பனைவெல்லமும் சாமை அரிசியும் சேர்த்துச் செய்யப்பட்ட ஒருவகை களியைக் கொண்டு வருவர்.

பெண்ணின் தாய்மாமன் வீட்டிலிருந்தும், ஆணின் தாய்மாமன் வீட்டிலிருந்தும் 'பெல்லக் கூ' கொண்டு வருதல் வேண்டும். அத்துடன் தாய்வீட்டிலிருந்து 'சவுன அக்கி' என்று சொல்லப்படும் சாமை அரிசி, கத்தி, சாப்பிடும் வட்டில், பெண்ணுக்குப் புதுத்துணி ஆகியவற்றைக் கொண்டு வருவர். இவற்றைப் பாதிவழியில் ஆண் வீட்டைச் சேர்ந்தவர்கள் வந்து வாங்குதல் வேண்டும்.

இது பெண்வீட்டாருக்கு ஆண் வீட்டார் கொடுக்கும் மரியாதையாகவும் அவர்கள் பண்பாகவும் கொள்ளலாம்.

அழைக்கப்பட்ட அனைவரும் இரவு உணவு உண்டபின் வீட்டைச் சுத்தம் செய்து எல்லோரும் உள்ளகத்திலும், வெளியகத்திலும் அமர்ந்திருப்பர். இதமனையில் கணவன் மனைவியை அமரவைத்துத் தட்டில் பால் கலந்த சாமை சோற்றைப் போட்டு, அதை ஆண் பெண்ணுக்கு ஊட்டுதல் வேண்டும். அதுவும் பெண்ணுக்குப் பின்னால் ஆண் அமர்ந்து கையை பெண்ணுக்கு முன்னால் கொண்டு வந்து ஊட்டுதல் வேண்டும்.

பிறகு படகர்களின் தாலிக்கயிறாகிய மஞ்சள் கயிற்றைக் கணவன் எடுத்துச் சுற்றி அமர்ந்திருப்பவர்களிடம் 'ஹாக்குவனம்மா' என்று கேட்க மற்றவர்கள் 'ஹாக்கப்பா' என்று சொல்வார்கள்.

இவ்வாறு மூன்றுமுறை கேட்டபிறகு அதை மனைவியின் கொண்டையில் சிக்காமல் கழுத்தில் போடுதல் வேண்டும். பெண்ணின் கொண்டையில் சிக்கிவிட்டால் கணவன் 1¼ ரூபாய் அபராதமாகக் கட்டுதல் வேண்டும்.

அதன்பிறகு புதுப்பாயில் வலதுபுறம் ஆணையும் இடதுபுறம் பெண்ணையும் அமர வைத்து 'மொய்' போடுவார்கள். ஆண்வீட்டார் ஒரு கிராம் தங்கமும் 21¼ ரூபாய் பணத்தையும் சேர்த்து மணமகன் மடியில் போடுவார்கள். பெண்வீட்டாரும் இதே போல் பெண்ணின் மடியில் போடுவார்கள். அதன் பிறகு மற்றவர்கள் 'மொய்' போடுவார்கள். அன்றே தாய்வீட்டிற்குப் பெண்ணை மறுஅழைப்பு அழைத்துச் செல்லுவார்கள். அழைத்துச் சென்ற அன்றே மறுபடியும் பகலில் ஆண்வீட்டிற்குப் பெண்ணை அழைத்து வந்து விடுவார்கள். அதன்பின் ஒன்பதாவது மாதத்தில்தான் பெண்ணை மகப்பேற்றுக்காகத் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்வர்.[13]

### பரிசம் போடுதல்

மணமகன் வீட்டார், மணமகள் வீட்டார்க்கு 60 ரூபாய் நாணயத்தைப் பரிசம் கொடுத்த பின் தான் பெண்ணைக் கொள்வர். இதற்குப் படக மொழியில் 'ஒன்னு கட்டுதல்' என்று பெயர். இச்சடங்கு இரவு நேரத்தில்தான் நடைபெறும்.

பெண்ணுக்கு வெள்ளிச் சங்கிலி, கைவளையல், மூக்குத்தி, காதுகடுக்கன் முதலியன திருமண நாளன்று பெண்வீட்டார் போடுவார்கள். அத்துடன் சாமை, கஞ்சே முதலிய தானியங்கள், ஒரு குடம் முதலியன மணமகன் வீட்டிற்கு எடுத்து வருவர்.

திருமணமான மூன்றாம் நாள் மணமக்கள் பெண் வீட்டிற்கு மறுவீடு செல்வர். அன்றே ஆண்வீட்டிற்குத் திரும்பிச் சென்றுவிடுவர்.

### *மணவிலக்கும் மறுமணமும்*

படகர்களிடையே மணவிலக்கு உண்டு. மனைவி, கணவனை வேண்டாம் என்று சொன்னால் உடனடியாகப் பரிசப் பணம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். கணவன் மனைவியை வேண்டாம் என்றால் பரிசப்பணம் அப்பெண் வேறோருவனை மணந்த பின் திருப்பிக் கொடுக்கப்படும்.

இவர்களுக்குக் குழந்தைகள் இருந்தால் அக்குழந்தைகள் கணவன் வீட்டில்தான் இருக்க வேண்டும். இருவரும் அவரவர் விருப்பப்படி மறுமணம் செய்துகொள்ளலாம்.

### *விதவை மணம்*

படகர்களிடையே விதவை மணம் வரவேற்கப்படுகின்றன. இவர்கள் முறைப்படி யாரை

வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம். விதவை மணமும் பெற்றோரின் விருப்பப்படிதான் நடக்கும்.

### பலதார மணம்

பலதார மணமும் இவர்களிடையே இருந்து வருகிறது. ஆடவரொருவர் மகளிர் பலரை மணந்து கொள்ளலாம். இதற்கு முக்கிய காரணம் குழந்தையின்மையே. குழந்தை வேண்டும் என்னும் ஒரே நோக்கத்தில்தான் அவர்கள் பலதார மணத்தை அனுமதிக்கின்றனர்.

### குழந்தைக்குப் பெயர் வைத்தல்

குழந்தை பிறந்ததும் மூன்று நாட்கள் தனியாக வைத்திருப்பர். மூன்றாவது நாள் தாய்க்குத் தலையில் தண்ணீர் விட்டபின் வீட்டைச் சுத்தம் செய்வர். இதன் மூலம் தீட்டுக் கழியும் என்று சொல்வார்கள்.

குழந்தை பெற்ற பெண்ணுக்குப் பனைவெல்லத்தைச் சாமை சோற்றில் போட்டுப் பதின்மூன்று நாட்கள் கொடுப்பர். குழந்தைகளுக்கு சுமார் இரண்டு வருடங்கள் வரை தாய்ப்பாலும் ராகிக் கஞ்சியும்தான் முக்கிய உணவாகக் கொடுக்கப்படும்.

தாய் வீட்டில்தான் குழந்தைக்குப் பெயரிடுவர். உறவினர் அனைவரையும் அழைப்பர். கணவன்

வீட்டிலிருந்துதான் எல்லாப் பொருட்களும் எடுத்துச் சென்று விருந்து படைப்பர்.

குழந்தையை ஆண்வீட்டைச் சார்ந்த பெரியவர் மடியில் வைத்திருப்பார். அவர் தொதுவர் நெய்த துப்பட்டியைப் போர்த்து, வலது கையில் வெள்ளி மோதிரம் அணிந்து இருக்கவேண்டும்.

குழந்தையின் முகத்தைக் கழுவி, நெற்றிக்குத் திருநீறு பூசி, புதுத்துணி உடுத்து, இடுப்பில் நூலும் க்ழுத்தில் வெள்ளி மணிகளும் கட்டப்படும். பின்பு உறவினர் கொண்டு வந்திருக்கும் பாலை ஒரு வட்டிலில் கொஞ்சம் ஊற்றி அதில் சமைத்த சாமைச் சோற்றைப் போட்டுக் கலந்து வைப்பர். குழந்தையை மடியில் வைத்திருப்பவர் பால் கலந்த சாமைச் சோற்றை விரலால் எடுத்துக் குழந்தையின் வாயில் வைக்கும்போது பெயர் சொல்வார்.

பெரும்பாலும் குழந்தைக்கு மூதாதையர் பெயர்தான் வைப்பர். பிறகு வந்திருக்கும் அனைவரும் பால் சோற்றைத் தொட்டுக் குழந்தையின் வாயில் வைத்துப் பெரியவர் இட்ட பெயரை அழைப்பர்.

***முடி எடுத்தல்***

குழந்தைக்கு முடி எடுத்தல் என்பது முக்கியமான ஒரு சடங்காகும். தாய் கருவுற்றிருக்கும் போதும்,

பிரசவத்தின்போதும் தாயும் சேயும் நலமாக இருக்கவேண்டும் என்று மற்றவர்கள் வேண்டிக்கொள்வது வழக்கம்.

அதன்பின் குழந்தை பிறந்த ஏழாவது மாதத்தில் முடியெடுப்பர். அவ்வாறு முடியெடுக்கும் போது உறவினர்களை அழைப்பர். இதை ஆண்வீட்டில்தான் செய்வர். குழந்தையின் தாத்தா அல்லது தாய்மாமன் கடவுளை வணங்கி முதலில் முடியை எடுத்துப்பின் நாவிதன் முடி முழுவதையும் எடுப்பான். முடியெடுத்த நாவிதனுக்கு 1½ ரூபாய் கூலியாகத் தாய்மாமன் கொடுத்தல் வேண்டும்.

பிறகு கோயிலுக்குச் சென்று பூசை செய்து காணிக்கை செலுத்தி கடவுளை வணங்குவர். அப்பொழுது பூசாரி எந்தவகையான நோயும் இல்லாமல் மகிழ்ச்சியாக நூறு வருடகாலம் வாழ வேண்டும் எனும் பொருளுடைய,

***சிங்கரவக் கொட்டு***
***பலவக் கொட்டு***
***சந்தோசவாசி***
***நூறு பருசக்கால பதிக்கிபா***

என்ற பாடலைப் பாடி ஆசீர்வதிப்பர். அதன்பிறகு உறவினர்களுக்கு விருந்து கொடுக்கப்படும்.

### மேற்பல் முளைத்தல்

குழந்தைக்கு முதலில் மேற்பல் முளைத்துவிட்டால் தாய்மாமன் குழந்தையின் முகத்தைப் பார்க்காமல் கதவு இடுக்கு வழியாக ஒரு 25 பைசா நாணயத்தைக் கொடுத்தல் வேண்டும் என்பது ஒரு சடங்கு. காரணம் பெரும்பாலும் மேற்பல்முதலில் யாருக்கும் முளைப்பதில்லை. அவ்வாறு முளைத்தால் அதை வாய்ப்பு என்று கருதி இச்சடங்கினைச் செய்வார்கள்.

### பூப்படைதல்

முதல் விலக்கு ஏற்பட்ட பெண்ணுக்கு உடனேயே நாட்டுப்பட்டாணிக் கொஞ்சம் சாப்பிடக் கொடுப்பார்கள். அதன்பிறகு நல்லநேரம் பார்த்துத் தலைக்குத் தண்ணீர் ஊற்றி, வாசலிலிருந்து வெளியகத்திற்கு மூன்று நெருப்புத் தணலை வரிசையாக வைத்து அதன்மீது அப்பெண்ணை நடந்து வருமாறு செய்வார்கள்.

விலக்கான பெண் எந்தப் பொருளையும் தொடக்கூடாது. சாப்பிடத் தேவையான பொருட்களைத் தனியாக வைத்திருப்பர். அவள் தூங்கும் படுக்கையும் பிறர் படுக்கையோடு சேர்த்து வைக்க மாட்டார்கள். ஒரு நல்ல நாளில் உறவினர்களை அழைத்து விலக்கான பெண்ணின் தலையில் தண்ணீர் ஊற்றி, தாய்மாமன் கொண்டுவரும் புதுத்துணியை அணிந்து கொள்ளச் செய்வர்.

பெரியவர்கள் பலர் அமர்ந்து பூசை செய்யும் உள்ளகத்துக்கு அழைத்துச் சென்று அவர்கள் மத்தியில் வீழ்ந்து வணங்கி வாழ்த்தினை முதல் விலக்கான பெண் பெறுவாள். அதுவரை அப்பெண் தனியாகவே இருத்தல்வேண்டும். பிறகு எல்லோருக்கும் விருந்து அளிக்கப்படும். இத்துடன் இச்சடங்கு முடிந்துவிடும்.

அதன் பிறகு ஒவ்வொரு முறையும் விலக்கு ஏற்படும் நாட்களில் ஐந்து நாட்கள் தனியாக இருத்தல் வேண்டும். தீட்டு நீங்கிய பின்தான் உள்ளகத்திற்கு வருதல் வேண்டும். படகரிடையே இது இன்றும் கடுமையாகக் கடைபிடிக்கப்படுகிறது.

ஐந்து நாட்கள் வரை பால் சாப்பிடக்கூடாது. பசுவை திருமகளாகக் கருதி வழிபடுவதால் அருகில் கூட விலக்கான பெண்களைச் செல்ல விடமாட்டார்கள்.[14]

***சாவுச் சடங்கு***

படகர்கள் வீட்டு சாவுகளில் சடங்குகள் முக்கிய இடம்பெறும். சாவிற்கு உறவினர், உறவினர் அல்லாதவர் அனைவரையும் வரவழைப்பர். சாவுச் செய்தியை தொரையர்கள் தான் எல்லா ஊர்களுக்கும் தெரிவிப்பர். சாவில் கோத்தர்கள் இசையை முழங்க, படகர், கோத்தர், தொரையர் எல்லோரும் சேர்ந்து கூத்தாடுவர்.

### *ஓலேக்கட்டுதல்*

ஓலேக்கட்டுதல் என்பதற்குத் தாலியை நீக்குதல் என்பது பொருள்.

திருமணம் ஆகாது இறந்தால் எந்தவகையான சடங்கும் இல்லை. திருமணம் ஆன ஆண் இறந்தால் பிணத்தைச் சாவுக்கேரியில் வைப்பர். பிணத்திற்குப் புதுத்துணி உடுத்தி, முகம், கழுவி, திருநீறு அணிவித்து, சோறு ஊட்டுவர். பிணத்திற்குச் சோறு ஊட்டுவது ஒரு சடங்காகும்.

'சாவுக்கேரி'யில் பிணத்தைச் சுற்றி தேர் கட்டுவர். சாவுச் செய்தி கேட்ட அனைவரும் தவறாமல் வருவர். பகல் சுமார் இரண்டு மணிவரை பிணத்தைச் சாவுக்கேரியிலேயே வைத்திருப்பர். வரும் உறவினர்களில் ஆண்கள் வயதில் மூத்தவர்களாக இருந்தால் பிணத்தின் தலையைத் தொட்டும் கும்பிடுவர். வயதில் இளையவர்களாக இருந்தால் காலைத் தொட்டுக் கும்பிடுவர்.

பகல் சுமார் இரண்டு மணிக்குப் பின் பிணத்தை எடுத்து வாய்க்கரிசி போடுவதற்கான இடத்தில் வைப்பர். கட்டில் மேல்தான் பிணத்தை வைத்திருப்பர். அதன்பிறகு பாவபுண்ணியப் பாடல் சொல்லப்படும்.

பிறகு இறந்த ஆணுக்கு அண்ணன், தம்பி, மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், மேற்கண்ட

முறையுள்ள மற்ற உறவினர்கள் அனைவரும் வாய்க்கரிசியைக் கையில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு வந்து நிற்பர். இறந்தவர்கள் மனைவியின் நகைகளை எல்லாம் தாய்விட்டார் வந்து சுழற்றி எடுத்துவிட்டுக் கையில் பிடியில்லாத கோதுமை அறுக்கப் பயன்படும் கத்தியைக் கொடுத்துத் தலையில் வைக்கச் செய்வர்.

மனைவிக்கும் முதல் வாய்க்கரிசி போடுபவருக்கும் குடை பிடிப்பர். இவர்கள் எல்லோரும் சேர்ந்து பிணம் வைத்திருக்கும் இடத்திற்குச் சென்று வாய்க்கரிசி போடுவர். வாய்க்கரிசி போடுபவர்கள் இடப்பக்கமாக வர 'ஓலைக்கட்டும்' பெண் மட்டும் வலப்பக்கமாகப் பிணத்தை மூன்று முறை சுற்றி வந்து கடைசியில் எல்லோரும் சேர்ந்து பிணத்தின் வாயில் வாய்க்கரிசி போடுவர்.

எல்லோரும் போட்டபின் மனைவி பிணத்தின் காலைத் தொட்டு வணங்கிப் போர்த்தியிருக்கும் போர்வை'யிலிருந்து நூல் எடுத்துப் பிணத்தின் பெருவிரல் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து நூலால் சுற்றிவிட்டுக் கையிலிருக்கும் சுத்தியுடன் காலைத் தொட்டு வணங்கிவிட்டு வீட்டிற்குத் திரும்பிவிடுவாள்.

பெரும்பாலும் பெண்கள் அக்காலத்தில் சுடுகாட்டிற்குப் போக மாட்டார்கள். ஆனால், இறந்தவரின் குடும்பத்தில் வயதில் மூத்த பெண் மட்டும்

கீரை விதைகளைச் சாவுக்கேரியிலிருந்து சுடுகாடு வரை பிணத்திற்கு முன்பு தூவிக்கொண்டு செல்லும் பழக்கம் உள்ளது.

ஆண்கள் எல்லோரும் சுடுகாட்டிற்குப் பிணத்தைக் கட்டிலுடன் தூக்கிச் செல்ல, ஒருவர் முன்னால் நெருப்புச் சட்டியை எடுத்துக்கொண்டு செல்வர்.

பிணத்தை அடக்கம் செய்த பிறகு பக்கத்திலேயே எடுத்து வந்த நெருப்பைப் போட்டு அதில் தண்ணீரை ஊற்றிச் சாம்பல் இல்லாமல் அணைந்த பிறகு அதில் முதலில் வாய்க்கரிசி போட்டவர், தான் வைத்திருக்கும் கத்தியுடன் சாமை, நெய், அருகம்புல், சாணி இவற்றில் சாமையைத் தவிர மற்ற மூன்றையும் தீயணைத்த குழியில் தண்ணீர் இருக்கும்பொழுதே போட்டுவிடுவர்.

பிறகு முதலில் வாய்க்கரிசி போட்டவர் தன் மடியில் வைத்திருக்கும் சாமையுடன் சுடுகாட்டிற்கு இடதுபுறமாக சுற்றிவந்து அங்குள்ள எல்லோரும் சாமையை எடுத்துக் கொள்ளுமாறு நிற்பார்.

பின் பெரியவர் ஒருவர்,

*உரியோகி சிரிபரலி*
*சாவுகேடு நில்லலி*

என்று சொல்ல எல்லோரும் கையிலிருக்கும் சாமையை ஒரே நேரத்தில் தண்ணீருள்ள குழியில் போடுவர்.

அதன்பிறகு வாய்க்கரிசி போட்டவர் அனைவரும் ஆற்றுக்குச் சென்று அங்கு மொட்டை அடித்துக்கொள்ளுவர். அதில் ஒருவர் மட்டும் மொட்டை அடிக்காமல் இருக்கவேண்டும். அவர் கருமாதி நடக்கும் நாளில் மொட்டை அடிக்க வேண்டும்.

சுடுகாட்டிலிருந்து வந்தபின் சமைத்த சாமைச் சோற்றில் ஒரு பகுதியைத் தனியாக வைத்துச் சுடுகாட்டிலிருந்து வரும்போது கொண்டுவந்த மூன்று கொம்புள்ள 'தவட்டைக்கோலை' வாசலில் நட்டு அதன்மீது 'மீனிகெலை' என்ற ஒரு வகை இலையை வைப்பர். பிறகு பானையிலிருந்து சோற்றை எடுத்து இலைமீது போடும்போது இது இறந்துபோனவருக்கு வைக்கும் சாப்பாடு என்று சொல்லி வைப்பர்.

பின்னர் அந்த இலையிலுள்ள சோற்றில் முதலில் வாய்க்கரிசி போட்டவர் தண்ணீர் ஊற்றிக் கையிலுள்ள கத்தியால் இலை, கோல் எல்லாவற்றையும் தள்ளிவிடுவர். அந்தச் சோற்றுக்கு 'பிதிக்கூ' என்று பெயர். இத்துடன் அன்றைய சடங்கு முடிந்துவிடும். அன்று இரவு முழுவதும் மண்விளக்கு எரிந்து கொண்டேயிருக்கும்.[15]

### பாவமன்னிப்புப் பாடல்

பிணத்தைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லும் முன், இறுதிப் பிரார்த்தனை ஒன்றைப் படிப்பது படக

மக்களின் மரணச் சடங்குகளில் முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும்.

மனிதன் தன் வாழ்க்கையில் அநேகத் தவறுகளை செய்கிறான். அதனால் சமூகம் பாதிக்கப்படுகிறது. சமூகத்தைப் பாதிக்கும் செயல்கள் பாவச் செயல்கள் என்று அன்றே படக முன்னோர் சொல்லிச் சென்றனர். பரம்பரையாக வந்த அந்தச் சுலோகங்களை செத்தவர்களின் சவத்திற்கு இன்றும் சொல்லுகின்றனர்.

அச்சமயம் அங்குக் கூடும் ஆண், பெண் பலர் அமைதியோடு கேட்கின்றனர். பாபச் செயலினின்று விலக இது வாய்ப்பளிக்கிறது என்று நம்புகின்றனர்.

கொல்லாமை, அன்பு, சத்தியம் இம்மூன்றையும் சுருக்கத்தில் விளக்கமாக அளித்துச் சென்ற முன்னோரின் பாடலைக் கீழே காணலாம்.

***ஆண்டி ஒருவன் மாண்டனன் இந்நாள்***
***அவன் நினைவுக்கு ஆவொன்று விடுதலை செய்யப்படும்***
***மண்ணிலிருந்து மறுவுல குக்கு***
***மாட்சிமை மிக்க தேரிலே பறப்பான்***
***சிவன் கொடுத்த உயிர் அவனுக்குச் சேரட்டும்***
***செத்த மனிதன் இந்த உலகிற் செய்தனவும்***
***இவன் தன் முப்பாட்டன், பாட்டன்***
***பெற்றோர், அண்ணன், தம்பி அனைவரும் செய்தனவும்***

மற்றும்,

எல்லைக்கோட்டை அழித்தது பாவம்
வரப்பை வெட்டி வைத்த பாவம்
உடன் பிறந்தாரைக் கொன்றபாவம்
கள்ளிச் செடியை யாருங் காணாத
நள்ளிரவிலே வெட்டிய பாவம்
எல்லைக் கப்பால் இலங்கிய ஒரு
முள்ளிச் செடியை முளையில் கிள்ளிய பாவம்
பெருக்கு மாற்றால் பிறர் தானியம் கூட்டிய பாவம்
பசுங்கிளைகளை வெட்டிய பாவம்
மெய்ம்மை விடுத்துப் பொய்யுரைத்த பாவம்
விதைத்த விதையைக் கவர்ந்த பாவம்
வளரும் பயிரை வதக்கிய பாவம்
பூனைகள் புசிக்கப் பறவையளித்த பாவம்,
ஏழை மக்களை ஏங்கச் செய்த பாவம்

மற்றும்,

கழிவு நீரைத் தெருவில் விட்ட பாவம்,
கிரகணம் கண்டபின் உறங்கச் சென்ற பாவம்,
மாற்றார் எருமை மழை போல் சொரியும்
தீம்பால் கண்டு பொறாமை கொண்ட பாவம்
அயலார் விளையுள் கண்டு அழுக்காறடைந்த பாவம்,
எல்லைக்கல்லை எடுத்து வைத்த பாவம்,
கருமாதியில் விடுத்த கன்றைக் கொண்ட பாவம்,
பனிக்கு நீரைப் பாழாக்கிய பாவம்,
எரியும் நெருப்பில் சிறுநீர் கழித்த பாவம்,
ஆசிரியன் செய்த நன்றி மறந்த பாவம்,

மேலோரிடத்தில் தீக்கோள் புகன்ற பாவம்,
உண்ணும் உணவில் நஞ்சைக் கலந்த பாவம்,
குளிர்காயத் தீத்தர மறுத்த பாவம் மற்றும்
மாற்றார் பசிக்க மறைந்திருந்து புசித்து பாவம்,
தப்பான வழியைச் செப்பிய பாவம்,
மாமியார் இருக்க மாடி ஏறியது பாவம்,
மாமனார் இருக்க கட்டில் ஏறியது பாவம்,
இயற்கை இயலாச் செய்கை உணர்வுக்கு
இரையாகியே இயலாதன செய்த பாவம்
மகன் மருவும் மாதரைத் துன்புறத்திய பாவம்
குலத்தையும் குட்டையையும் உடைத்த பாவம்
மாற்றார் ஊரின் மாபெரும் செழிப்பைக் கண்டு
பொறாமை கொண்ட பாவம்,
அக்கம் பக்கத்து மக்களோடு பொறாமை,
காட்டுவழிச் செல்லும் மக்களிடம்,
கயமைத் தனம் புரிந்த பாவம்,
இன்னும் எத்தனை எத்தனையோ
கொடிய பாவங்கள் செய்தாலும்
அத்தனை பாவமும் கன்றுடன் கழிவனவாக!
பாவம் முழுவதும் நீக்கப்படுவனவாக!
குற்றம் எல்லாம் பொறுக்கப்படுவனவாக!
வீட்டின் கதவு திறக்கப் படட்டும்!
நரகத்தில் கதவு மூடிக் கொள்ளட்டும்!
அறத்தின் கை அனைத்துலகும் நீளட்டும்!
கொடுமைகள் பலவும் குறைவனவாக!
எழிலும் வளமும் எங்கும் மலிக!
வெம்மை மடிக! தண்மை மலர்க!

**நூலின் பாலம் எளிதில் கிடைக்க**
**பாவம் பள்ளம் மேவப்படட்டும்!**
**தங்கத் தூணை எங்கள் மகன்**
**சடுதியில் அடைக! அடைக!!**
**ஆயிரம் அதிகளின் அடியைப் பார்த்துப்**
**பன்னீராயிரம் பதிகளின் பாதம் பார்த்து**
**நான்முகன் செல்லும் தாள்களைப் பற்றி**
**எந்நாடும் போற்றும் இறைவன்**
**தவ உலகை இவன் அடைவானாக!**
**ஆம்! ஆம்!! அப்படியே ஆகட்டும்!!![16]**

இப்பாடல் மூன்று முறை பாடப்படும். பெரியவர் ஓர் அடியைச் சொல்லுவர். மற்றவர்கள் அடியின் இறுதிச் சொல்லாகிய ‘பாவம்’ என்பதனைச் சொல்லுவர்.

## *கொரம்பு*

‘கொரம்பு’ என்றால் கருமாதி என்பது பொருள். இறந்தது ஆணாக இருந்தால் ஞாயிற்று கிழமையும், பெண்ணாக இருந்தால் வியாழன் அல்லது திங்கள் ஆகிய நாட்களில் மட்டும் இச்சடங்கள் நடைபெறும். இச்சடங்கு இரவு நேரத்தில் தான் நடைபெறும்.

வாய்க்கரிசி போட்டவர்கள் கருமாதி முடியும் வரை எங்கும் போகக்கூடாது. கருமாதி நாளில் ஊரில் அனைவரும் உற்றார் உறவினரும் இறப்பு வீட்டார் அழைப்புக்கு இணங்க வருவார்கள்.

கருமாதி செய்யும் போது 'கெர்சி' என்று சொல்லப்படும் வட்டக் கூடையை 'மதில்' என்று வழங்கும் விளக்குமாடத்தில் வைப்பர். இது உள்ளகத்தையும் வெளியகத்தையும் பிரிப்பதாக அமைந்திருக்கும்.

'கெர்சி'யில் சாமை அரிசியைக் கொட்டி, இறந்தவரின் ஏதாவது ஒரு நகையை வைப்பர். பெண்கள் எல்லோரும் வாசலில் இருப்பர். உள்ளகத்தில் ஒருவர்,

**முந்து இந்து இல்லாதே**
**இந்து முந்து இல்லாதே**
**தொட்டவக்ர சுலோகப்படிக நடது பன்னையோ**

என்ற முன்னே பின்னே இல்லாமல், பின்னே முன்னே இல்லாமல் பெரியவர்கள் சொல்லிய சொல்படி நடந்து வருவோம் என்னும் பொருளமைந்தப் பாடலைச் சொல்ல, மற்றொருவர் மணியடிக்க, வாசலில் உள்ள பெண்கள் ஒப்பாரி வைப்பார்கள்.

ஒப்பாரி இரண்டு நிமிடங்கள்தான் நீடிக்க வேண்டும். அதன் பிறகு முதலில் வாய்க்கரிசி போட்டவர் அன்று எடுத்த கத்தியால் 'கெர்சி'யிலுள்ள சாமை அரிசியை மூன்று முறை சிதறி அவர் அங்கு வீழ்ந்து வணங்குவார். பின்பு எல்லோரும் வணங்குவர்.

அதன்பிறகு பிணத்திற்கு முதலில் வாய்க்கரிசி போட்டவர் புதுப்பானையில் ஆற்றிலிருந்து எடுத்துவந்த

தண்ணீர் கொண்டு சாமை அரிசியையும் அவரையையும் வேகவைப்பார். வெந்தபின் விடிகாலை நான்கு மணியளவில் அச்சாமைச் சோற்றையும் அவரையையும் பிசைந்து உருண்டை செய்து அவர் வைத்துள்ள கத்தியால் ஐந்து பாகம் செய்வார்.

அதன்பின்பு, முப்பாட்டனுக்கு ஒன்று, பாட்டனுக்கு ஒன்று, சாதி சனங்களுக்கு ஒன்று, உறவினர்களுக்கு ஒன்று, குருவுக்கு ஒன்று எனும் பொருளுடைய,

**முத்தே முத்தப்பக ஒந்து**
**எத்தே எத்தப்பக ஒந்து**
**சாதி சனக ஒந்து**
**பந்து மித்திரக ஒந்து**
**அருகுருக ஒந்து**

பாடலைப் பாடி அதை வீட்டின் கூரைமேல் வைப்பர். அதன்பிறகு புதுத்தண்ணீரைக் கூரைமேல் தெளிப்பர். பின் எல்லாச் சோற்றையும் ஒரே தட்டில் போட்டு வாய்க்கரிசி போட்டவர்கள் எல்லோரும் சடங்கிற்கு உண்பர். இச்சோற்றுக்கு 'இண் டேக் கூ'என்பது பெயர்.

பிறகு பானையைக் கழுவி பரண்மேல் வைத்து விடவேண்டும். முதலில் வாய்க்கரிசி போட்டவர் அதே வீட்டில் தலைக்குத் தண்ணீர் ஊற்றிக் குளித்த பிறகு குடும்பத்திலுள்ள அனைவரும் குளிக்கவேண்டும்.

மனைவி குளித்ததும் ஓலைக்கட்டுக் சடங்கின்போது கழற்றிய நகைகளைத் திரும்பவும் மாட்டிவிடுவார்கள். இத்துடன் சாவுச்சடங்கு முடிந்துவிடும். இவர்களின் ஒவ்வொரு சடங்கும் மக்களின் ஒற்றுமையை காட்டுவனவாக அமைந்திருக்கும்.

இவ்வாறு படகரின் நம்பிக்கைகளும், சடங்குகளும், மரபும் பரம்பரை பரம்பரையாகக் காக்கப்படுகின்றன. இன்றைய நிலையில் சில நம்பிக்கைகள் மறுக்கப்படுவதைப் படகரிடம் காணமுடிகிறது.

திருமணச் சடங்குகள் மற்ற இனத்தவரிடம் காணமுடியாத தனித்தன்மையுடன் படகரிடம் காணமுடிகிறது.

பெண்களுக்கான சடங்குகள், சாவுச் சடங்குகள் இன்னும் மாற்றம் அடையாமல் இருப்பதைக் காண முடிகிறது.

# குறிப்புக்கள்

1. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.215.
2. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.193.
3. க.காந்தி, தமிழர் வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 261.
4. நச்சினார்க்கினியர் (உரையாசிரியர்), தொல்காப்பியம், பொருளதிகரம், ப.521.
5. நச்சினார்க்கினியர் (உரையாசிரியர்), தொல்காப்பியம், பொருளதிகரம், ப. 140
6. வெரியர் எல்வின், எல்வின் கண்ட பழங்குடி, மக்கள், ப.49,
7. அ.திருமலை முத்துசுவாமி, மலைவாழ் மக்கள் (நீலமலை), ப.48.
8. திருமதி சுங்கியம்மாள் என்பவரிடம் கேட்டு எழுதியது.

9. க. காந்தி, தமிழார் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.91.

10. மு. சண்முகம் பிள்ளை, சங்க இலக்கியத்தில் காணும் வழிபாட்டுமுறை, ப.36.

11. இளவழகனார் (உரையாசிரியர், கலித்தொகை, ப.234.

12. ஆறு. அழகப்பன், நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு, ப.85.

13. திரு. நந்திகவுடர் என்பாரிடம் கேட்டு எழுதியது.

14. திருமதி கங்கியம்மாள் என்பாரிடம் கேட்டு எழுதியது.

15. திரு. நந்தி கவுடர் என்பாரிடம் கேட்டு எழுதியது.

16. அ. திருமலை முத்துசுவாமி, மலைவாழ் மக்கள் (நீலமலை), பப. 73-75.



### இயல் : ஆறு

# மாறிவரும் படகர் வாழ்வு

படகஇன மக்கள் மரம் செடிகள் நிறைந்த மலைகளுக்கிடையில் வாழ்வதால் அவர்களை சமவெளிப்பகுதி மக்கள் சென்று பார்க்க முடியவில்லை. 14ஆம் நூற்றாண்டு வரை அயலார் தாக்குதலுக்கு ஆளாகாமல் இருந்தனர்.

அதன்பிறகு பல இனமக்களின் தொடர்பு ஏற்பட்டது. அதன் மூலம் அவர்களின் வாழ்க்கை முறைகளில் மாறுதல் ஏற்பட்டது. இன்று படகஇன மக்கள் எல்லாவகையிலும் முன்னேறியவர்களாகக் காணப்படுகின்றனர்.

## *மாறிவரும் பழக்கவழக்க நிலைகள்*

படகஇன மக்களின் பழக்க வழக்கங்களிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. தற்காலத்தில் எல்லா இன மக்களுடனும் நல்ல முறையில் பழகுகின்றனர். இவர்கள் எல்லா ஊர்களிலும் அனைவருடனும் கூடி வாழ்கின்றனர்.

படகர் தங்கள் குடும்பத்தில் எவருக்கேனும் உடல்நிலை சரியில்லையென்றால் மற்ற ஊரிலுள்ள உறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவிப்பது பழக்கம். அது இன்றும் தொடர்ந்து வருகின்றது.

படகர்கள் கலப்புத் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள். யாராவது கலப்புத்திருமணம் செய்து கொண்டால் அவரைத் தம் இனத்திலிருந்து ஒதுக்கி வைத்துவிடுவர். இதற்கு 'ஜாத்திக தள்ளுவது' என்று பெயர். இந்நிலை இன்னும் மாறவில்லை. திருமணத்திற்கு முன்பு ஆண்வீட்டார் பெண் வீட்டாருக்கு 60 (அறுபது) ரூபாய் பரிசப் பணம் கொடுத்துப் பெண்ணை அழைத்துவரும் பழக்கம் இன்றும் உண்டு. ஆனால் பரிசப்பணத்தின் தொகை 60 ரூபாயிலிருந்து 201¼ ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் படகர் பலர் நகரங்களில் வாழ்வதால் இவர்கள் பழக்க வழக்கங்கள் சற்று மாறுபட்டுக் காணப்படுகின்றன. திருமணத்தின்போது பெற்றோர்கள் தாங்களாகவே விரும்பிப் பெண்ணுக்கு நகைகள், பாத்திரங்கள், தானியங்கள் போன்றவற்றை அளித்து வருகின்றனர். சில இடங்களில் ஆண்வீட்டார் சீர்வரிசையை கேட்டு வாங்குவதும் உண்டு.

இந்நிலைக்குக் காரணம் பல இனமக்களுடன் படக இன மக்கள் ஒன்று சேர்ந்து பழகிவரும் நிலைதான் என்று கூறலாம்.

வீட்டிற்கு விலக்கான பெண்கள் வீட்டிற்கு வெளியே உள்ள தாழ்வாரத்தில் ஐந்து நாட்கள் தங்கும் பழக்கம் படகரிடம் உண்டு. சில இடங்களில் ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள 'ஒலுகுடி' என்றழைக்கப்படும் வீட்டில் தங்குவதும் உண்டு.

வீட்டிற்கு விலக்கான பெண்கள் வெளியே இருக்கும்போது மற்றவர்கள்தாம் உணவு சமைத்துத் தருவர். ஐந்து நாட்கள் கழித்து நீராடிவிட்டுத்தான் அப்பெண் வீட்டிற்குள் வந்து சமையல் செய்வாள். இந்த பழக்கத்தை எல்லாப் படக மக்களும் கடைப்பிடிப்பதில் மிகக் கண்டிப்பாக இருந்தார்கள்.

இன்று பெரும்பாலான பெண்கள் விலக்கான அன்றே நீராடிவிட்டுச் சமையலை மேற்கொள்கின்றனர். ஏனெனில் கணவன்மார்கள் அலுவலகங்களிலும், பள்ளி கல்லூரிகளிலும் வேலையில் இருப்பதால் அவர்களால் உணவு சமைத்துக்கொண்டிருக்க நேரம் இருப்பதில்லை எனலாம்.

அக்காலத்தில் படகப் பெண்கள் நெற்றியிலும் கைகால்களிலும் பச்சை குத்திக் கொண்டிருந்தனர். நெற்றியில் இரண்டு கண்களுக்கு நேராக மேல் புறத்தில் இரண்டு வட்டமும் நடுவில் ஒரு கோடும் அதற்கு மேல் ஒரு புள்ளியும் வைத்து அழகாகப் பச்சை குத்திக் கொள்வார்கள். ஆனால் இன்று அப்பழக்கம் இல்லை.

பண்டைக் காலங்களில் படகர்கள் பிற சாதியினரை தம் இல்லத்தினுள் சேர்க்க மாட்டார்கள். இன்றைய நிலையில் 'ஓகமனை' என்று சொல்லும் உள்ளகத்திற்கு மட்டும் சேர்க்க மாட்டார்கள். மற்ற எல்லா அறைகளுக்கும் அவர்கள் வர அனுமதிக்கின்றனர்.

படகர் திருமணத்தின்போது செய்யும் சடங்குகளில் தற்காலத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முன்பெல்லாம் திருமண நாளன்று தாலிகட்டும் வழக்கமில்லை. பெண் கருவுற்ற ஏழாவது மாதத்தில் செய்யும் சடங்கின் போதுதான் தாலி கட்டுவர்.

ஆனால் இன்று திருமணம் நடக்கும் நாளிலேயே தாலிகட்டி விடுகின்றனர். தங்கத்தால் செய்த தாலியையும் படகப் பெண்கள் அணிகின்றனர். தற்போது படகர் திருமணங்கள் மண்டபங்களிலும் நடைபெறுகின்றன. கோயிலில் மணமகன் மணமகளுக்குத் தாலிகட்டியபின் மண்டபத்தில் விருந்து நடைபெறும். எல்லா உறவினர்களும் அழைக்கப்படுவார்கள். திருமணத்தின் போது 'மொய்' எழுதும் வழக்கம் உள்ளது. முன்பெல்லாம் பணத்தை 'மொய்யாக' போடுவார்கள். தற்போது நாகரிகப் பொருட்களை மொய்யாக அளிக்கின்றனர். திருமணத்தின்போது மணப்பெண் இக்காலத்தில் சேலை கட்டிக் கொள்ளலாம்.

## *நடை, உடை மாற்றங்கள்*

இன்றைய நிலையில் படகர்கள் நடை, உடை, பாவனைகளில் மாற்றமடைந்துள்ளனர். பெண்கள் அனைவரும் தற்காலத்தில் படகர்களுக்கே உரிய உடைகளிலிருந்து மாறிச் சேலை கட்டுகிறார்கள். படிக்கும் பெண்கள் மட்டுமல்லாமல் கிராமத்தில் விவசாயம் செய்யும் பெண்களும் இன்று சேலை கட்டுவது படகப் பெண்களின் உடை முன்னேற்றத்தைக் குறிக்கிறது எனலாம்.

முன்பெல்லாம் தலைப்பாகையைக் கொண்டு படக ஆண் மக்களை அடையாளம் கண்டு கொள்ளலாம். ஆனால் இன்று முடிவதில்லை. காரணம் அவர்கள் தலைப்பாகை அணிவதில்லை. நாகரிகமாக ஆடை அணிகின்றனர். ஆண்மக்கள் பெரும்பான்மையோர் படித்துப் பட்டம் பெற்று வேலையில் இருக்கின்றனர். இவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடிவதில்லை.

படகஇன பெண்கள் இரவில் தனியே வெளியில் செல்லுதல் கூடாது என்றும் பூமி அதிர பெண்கள் நடக்கக் கூடாது என்றும் கூறுவர்.

பெரியவர்களிடம் பேசும்போது கைவிரலை நீட்டிப் பேசுதல் கூடாது என்று சொல்லுவர். இந்நிலை இன்றும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

படகரிடம் உள்ள விருந்தோம்பல் பண்பு அன்றும் இன்றும் ஒரே நிலையில்தான் உள்ளது.

பெண்கள் முன்பு வெள்ளியால் செய்த அணிகலன்களை மட்டும் அணிவர். இன்று அந்நிலை மாறித் தங்கத்தால் செய்த அணிகலன்களையும் அணிந்துகொள்கின்றனர்.

## *மாறிவரும் பொருளியல் நிலைகள்*

படகஇன மக்கள் கடினமான உழைப்பாளிகள். அவர்களின் முக்கியத்தொழில் விவசாயம். அவர்கள் தங்கள் தொழில் மூலம் கிடைத்த சாமை, ராகி, கோதுமை, கஞ்சே இவற்றைக் களியாகச் செய்து உண்டு வந்தனர். இந்நிலை மாறி இன்று எல்லோரும் அரிசிச் சோற்றையும், காய்கறிகளையும் ஊன்வகைகளையும் தங்கள் உணவாகக் கொள்கின்றனர்.

அவரை, வெள்ளைப்பூண்டு, சாமை, கோதுமை, கஞ்சே இவற்றையே முன்பு பயிரிட்டு வந்தனர். தற்காலத்தில் காய்கறிகள், கீரைகள் உருளைக்கிழங்கு, காப்பி, தேயிலை, முட்டைக்கோஸ் முதலான பயிர்களை அதிகமாகப் பயிரிடுகின்றனர்.

உழவுத்தொழில் மட்டுமல்லாமல் தற்காலத்தில் பிறதொழில்களும் செய்கின்றனர். மரம்வெட்டுதல், செங்கல் சுடுதல், தச்சுவேலை செய்தல், கட்டிடம்

கட்டுதல் போன்ற தொழில்களையும் செய்கின்றனர். படித்தவர்கள் ஆசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் எழுத்தர்களாகவும் பல வேலைகளைச் செய்து வருகின்றனர்.

படகர்களின் வீடுகள் உள்ளகம், வெளியகம், வாசல் என்னும் அமைப்புடன் இருக்கும். ஆனால் இன்று மாறிவரும் சமுதாயச் சூழலுக்கேற்பவும் பொருளியல் நிலைக்கு ஏற்பவும் வீடுகள் மாடிகளைக் கொண்டதாகவும், பல அறைகள் கொண்டதாகவும் அமைந்துள்ளன.

முன்பு மண்வீடாக இருந்தது. இன்று சிமெண்ட்டுப் போட்டு அழகுபடுதத்தப்பட்டுள்ளன. முன்பு புல்வேய்ந்த கூரைகள்தான் இருந்தன. இன்று வீடுகளின்மேல் ஓடுகள் போடப்பட்டுள்ளன.

படகர்களின் வீடுகளில் மண்விளக்குகள்தான் முன்பு இருந்தன. இன்று மின்விளக்குகள், வானொலிப்பெட்டி, பதிவு நாடாப்பெட்டி போன்ற நாகரிகப் பொருட்களை வைத்துள்ளனர்.

இக்கால நாகரிக நிலைக்கேற்பப் பல புதிய முறைகளைக் கையாண்டு வேளாண்மைத் தொழிலைச் செய்கின்றனர். புதிய புதிய கருவிகளைப் பயன்படுத்துகின்றனர்.

மண்வெட்டி, கொத்து, சிறுகொத்து, வெட்டுக்கத்தி, தினைக்கொய்யும் கத்தி முதலியன பயன்படுத்தப்படுகின்றன. மேலும் முட்டைக்கோய், உருளைக்கிழங்கு, தேயிலை, காப்பி போன்றவற்றை விஷப்பூச்சிகளில் இருந்து பாதுகாக்கப் பலவிதமான பூச்சிக்கொல்லி மருந்துகளையும் பயன்படுத்துகின்றனர்.

சமையல் செய்வதற்குப் பண்டைக்காலத்தில் மண்சட்டி, மட்பானை, கொட்டாங்குச்சியால் செய்த அகப்பை, மரவட்டில் இவற்றை பயன்படுத்தியவர்கள் நிகழ்காலத்தில் சமையலுக்குத் தேவையான புதுவகையான எல்லாப் பொருள்களையும் கருவிகளையும் பயன்படுத்துகின்றனர்.

இதன் மூலம் படக இன மக்களின் முன்னேற்றத்தையும் மாறிவரும் சமுதாய மாற்றத்திற்கேற்பத் தங்கள் வாழ்க்கை முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளமையையும நன்கு அறியலாம்.

படகர்கள் இவ்வாறு பொருளியல் உயர்வால் மாற்றங்கள் எய்தியுள்ளவர். இதற்குக் காரணம், படகர்கள் வேளாண்மைப் பருவ முறைகளை நன்கு தெரிந்து வைத்திருப்பதுடன் வேளாண்மையில் புதிய முறைகளைக் கையாண்டு மகசூலைப் பெருக்குவதாகும்.

படகர்கள் நீலமலையில் உள்ள போட்டோ பிலிம் கம்பெனி, ஊசிக் கம்பெனி, கார்டைட் பேக்டரி, எச்.எம்.டி.கம்பெனி போன்ற தொழிற்சாலைகளில் வேலை செய்வதும் படகர்களின் பொருளியல் உயர்வுக்கு மற்றொரு காரணம் எனலாம்.

## கல்வி நிலையில் முன்னேற்றம்

படகர்கள் ஒரு காலத்தில் பள்ளி கல்வி என்பதை என்னவென்று அறியாமல் இருந்தனர். கடினமாக உழைப்பது என்ற நிலை இருந்து வந்துள்ளது. 1904 - 1905ஆம் வருடக் கணக்குப்படி 39 பள்ளிகள் நீலமலையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. 39 பள்ளிகளில் 1222 மாணவர்கள் படித்தார்கள். 1907 இல் படக இனத்து ஆண் ஒருவர் மெட்ரிக்குலேஷன் தேர்ச்சி பெற்று உதகையில் உள்ள வழக்காடு மன்றத்தில் எழுத்தராகப் பணிபுரிந்துள்ளமை தெரிய வருகிறது.[1]

இன்று அந்நிலை மாறிக் கிராமத்திற்கு ஒரு பள்ளியாக வளர்ந்துள்ளது. இன்று நீலமலையில் சுமார் 428 ஊர்கள் உள்ளன. ஆனால் பள்ளிகளோ 489 ஆக இருக்கின்றன.[2]

கிராமங்கள் தோறும் குழந்தைகளுக்கான பால்வாடிகள் (குழந்தைகள் காப்பகம்) திறக்கப்பட்டுள்ளன. முதியோர்க்கான மாலைநேர வகுப்புகள் நடைபெறுகின்றன. பெரும்பாலோர் இன்று

பள்ளிகளில் படிக்கின்றனர். மாணவர்களுக்கு அரசாங்கத்தார் உதவித்தொகை வழங்குகின்றனர்.

இக்காலத்தில் படகஇன மக்களிடையே படித்தவர்களுக்குத்தான் மதிப்பு மிகுதி.

ஒரு காலத்தில் யாரும் செல்ல இயலாத மலை சூழ்ந்த பகுதியாகிய நீலமலையில் இன்று மூன்று கல்லூரி உள்ளன. உதகையில் 'அரசினர் கலைக் கல்லூரி' உள்ளது. இதில் ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர் பயில்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் படக மாணவ மாணவியர் ஆவர். இக்கல்லூரியில் படக ஆசிரியர்களும் பணி புரிகின்றனர்.

மேலும், உதகையில் 'எமரால்ட் அயிட்ஸ் மகளிர் கல்லூரி ஒன்று உள்ளது. குன்னூருக்கருகில் உள்ள வண்டிச்சோலை என்னுமிடத்தில் 'பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி ஒன்றும் உள்ளது. இவ்விரு கல்லூரிகளிலும் வெளிநாட்டிலிருந்து மாணவிகள் வந்து தங்கிப் படிக்கின்றனர். பல படக மாணவியர் இதில் படிக்கிறார்கள்.

குன்னூரில் உள்ள தொழில் பயிற்சிக் கல்வியகத்திலும் பல படக மாணவர்கள் படிக்கிறார்கள்.

இக்காலத்தில் படகர்கள் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர். படித்துப் பட்டம் பெற்றவர்கள் இன்று உலகில் பல இடங்களில் வேலை மேற்கொண்டுள்ளனர். பெரும்பாலான பெற்றோர்கள் இன்று தங்கள்

குழந்தைகளை ஆங்கிலப் பள்ளியில் படிக்க வைக்கின்றனர். அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப மக்களின் வாழ்க்கை முறையிலும் மாற்றம் நிகழும் என்பதற்குச் சான்றாக இன்று நீலமலை படக இன மக்கள் இருப்பதனைக் காணலாம்.

படக மொழிக்கு எழுத்து வழங்கும் முயற்சியில் அரசின் கவனம் இருப்பதாகத் தெரியவில்லை. படகமொழியில் தொடக்க நிலைக் கல்விக்கான முயற்சியும் இல்லை. படகர்களின் கல்வி தமிழ்மொழிக் கல்வியாகத்தான் உள்ளது.

### *பெண்களின் வளர்ச்சி நிலை*

இப்பொழுது படக பெண்களின் நிலை உயர்ந்துள்ளது. அயல் நாடுகளில் பெண்கள் சென்று படிக்கிறார்கள், வேலை பார்க்கிறார்கள். பலர் பள்ளி, கல்லூரிகளில் ஆசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் நாகரிகமான உடைகளை அணிந்து கொள்கின்றனர்.

கிராமங்களில் பெண்களுக்கு இன்று எல்லா வகையிலும் உரிமைகள் வழங்கப்படுகின்றது.

பண்டைக் காலத்தில் மருத்துவமனைகள் இல்லை. இருந்தாலும் மக்கள் விரும்பிச் செல்வதும் இல்லை. முன்பெல்லாம் மகப்பேறு, வீட்டிலேயே நடக்கும். படகப் பெண்களே மருத்துவச்சிகள் போல் இந்த வேலையை

மேற்கொண்டிருந்தனர். உடல் நலம் இல்லாதவர்களுக்குப் பச்சிலைகளை அரைத்துக் கொடுத்து நாட்டு வைத்தியம் செய்வர்.

இக்காலத்தில் இம்முறை ஒரு சில கிராமங்களில் இருந்தாலும் பெரும்பாலானவர்கள் மருத்துவமனையையே நாடுகின்றனர். இன்று தனியார் மருத்துவ மனைகளும் உண்டு. அரசாங்க மருத்துவமனைகளும் உண்டு. எல்லா மக்களும் உடல்நலமில்லாதபோது இன்று மருத்துவரையே நாடுகின்றனர்.

பழைய காலத்தில் படக்காட்சிக்கான அரங்கங்கள் அதிகம் கிடையாது. இன்று அரங்கங்கள் அதிக அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. படக இன மக்கள் 'கால தப்பித பயிறு' என்ற படத்தைப் படகமொழியில் சொந்தமாக எடுக்கும் அளவிற்கு படகர்கள் வளர்ந்துள்ளனர்.

படகப் பெண்களிடம் அவர்களுக்கே உரிய படக நடனத்தைத் தவிர, பரத நாட்டியம், மெல்லிசைக்கு ஏற்றாற்போல் ஆடும் நடனம் போன்றன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சில முழுநேரப் பள்ளிகளில் மாலை வகுப்புகளில் பரத நாட்டியம் விரும்புபவர்களுக்குக் கற்றுத் தரப்படுகின்றது.

நாடகம் போடும் வழக்கம் அன்றும் உண்டு, இன்றும் உண்டு. ஆனால் இதில் சில மாற்றங்கள் உண்டு. காலத்திற்கேற்ப, கதையமைப்பும் உடையலங்காரமும்

செய்யப்படுகின்றது. இக்காலத்தில் நாடகங்களில் வரும் பெண்வேடத்திற்குப் படகப் பெண்கள் போல் உடை அலங்காரம் செய்வதில்லை. சேலை கட்டி விடுகிறார்கள்.

படகர்களின் பாடலுடன் இன்று தவிர்க்க முடியாத நிலையில் சினிமாப்பாடல்கள் கலந்துள்ளன. விழாக்களில் இசைதான் முதன்மை இடத்தை இன்று பெறுகிறது. அதுவும் பெரும்பாலான பாடல்கள் சினிமாப் பாடல்களாக உள்ளன.

ஒவ்வொரு கிராமத்திற்கும் நல்ல போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கேற்ப, சாலைகள் நன்கு அமைக்கப்பட்டுள்ளன. முன்பு ஆற்றிலிருந்தும் குளத்திலிருந்தும் பெண்கள் குடிக்கும் நீர் கொண்டு வந்தனர். இன்று ஒவ்வொரு கிராமத்திலும் குடி தண்ணீர் வசதி செய்து தரப்பட்டுள்ளன. மின் விளக்கு வசதி எல்லாக் கிராமங்களிலும் உள்ளன.

மரம் செடி கொடிகளாலும் மலர்களாலும் சூழப்பட்டுச் சமவெளி பரப்பிலுள்ள மக்கள் சென்று பார்க்க முடியாது, காடுகள் நிறைந்த நீல மலையில் எந்த வகையான நாகரிகமும் இல்லாது வாழ்ந்த படக மக்கள் இன்று அந்நியர் வருகையாலும் பல இன மக்களின் தொடர்பாலும் பெருமளவில் மாறியுள்ளனர். வாழ்க்கை முன்னேற்றமும் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# குறிப்புக்கள்

1. Edgar Thurston, Castes and Tribes of Southern India, Vol.I, p.64.
2. நீலமலை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டன.



# ஆய்வு முடிபுகள்

நீலமலைத் தொடரின் இயற்கை அமைப்பு தமக்குத் தாமே தேவைகள் நிறைவேற்றிக் கொள்ளும் பழங்குடி இன மக்களின் வாழ்நிலைக்கு ஏற்ப அமைந்துள்ளது. இம்மலைத்தொடரில் படகரோடு குறும்பா, தொதுவர், இருளர், கோத்தர், தொரையர் ஆகிய பழங்குடி இன மக்களும் வாழ்கின்றனர்.

படகர் மற்ற பழங்குடி இன மக்களை விடத் தங்களை உயர்ந்தவர்களாகக் கருதிக் கொள்கின்றனர். குறும்பர் பில்லி, சூனியம் செய்து கொன்றுவிடுவர் என்ற நம்பிக்கை காரணமாகப் படகர் இவர்களுக்கு அஞ்சுவர்.

படகரைச் சந்திக்கும்போது தொதுவர்தான் முதலில் வணக்கம் செய்யவேண்டும். படகர்களிடம் சடங்குகள் அதிகமாக உள்ளன. படகர் வீடுகளில் நடக்கும் திருமணம், சாவு முதலியவற்றிற்கு இசைக்கருவிகள் வாசிப்பவராகக் கோத்தர் இருப்பர்.

படகர் கோத்தரைத் தாழ்ந்த இனத்தவராகக் கருதுவர்.

கன்னடியரும் படகரும் ஒரே இனத்தவர். படகர்களில் சிலர் கிறித்துவராகவும் மதம் மாறியுள்ளனர். இக்கிறித்துவப் படகர்களிடம் படகர்கள் திருமண உறவு வைத்துக் கொள்வதில்லை. படகர்கள் மற்ற இனத்தவர்களிடம் அன்பாகவும் பொருள் உதவி செய்பவர்களாகவும் உள்ளனர்.

வடுகர்தாம் படகர் என்பதற்கு மொழியியல் அடிப்படையில் பல சான்றுகள் உள்ளன. படகர்கள் மைசூரிலிருந்து வந்தவர்கள் என்பதால் அவர்கள் மொழியும் கன்னடமொழி சார்புடையது என்பதை அறியமுடிகிறது.

படகர்களிடையே உடையர், ஆருவர், அதிகாரிகள், கணக்கர், படகர், தொரையர் என ஆறு பிரிவுகள் உள்ளன. இப்பிரிவினருள் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரோடு திருமண உறவு வைத்தக் கொள்வதில்லை.

படகர்கள் பொதுவாக மலைஉச்சியில் அல்லது சரிவிலுள்ள கிராமங்களில் வசிக்கின்றனர். படகப் பெண்களின் உடைகள் எல்லாம் வெண்மையாகவே இருக்கும்.

படகர்களுக்கு உழவுத் தொழில் தான் முதன்மையான தொழிலாகும். வீட்டிற்கு வரும்

விருந்தினரை நல்லமுறையில் விருந்தோம்பும் பண்புடையவர்கள்.

தமிழ் இலக்கியம் கூறும் ஊராட்சி முறையோடு படகரிடம் காணப்படும் ஊராட்சி முறை ஒப்பிடத்தக்கது.

படகர்கள் ஹெத்தேஹப்பா, தெவ்வஹப்பா, ஜடேய சுவாமி ஹப்பா, மாங்காளியம்மன் விழா போன்ற பெருவிழாக்களையும் கொண்டாடுகின்றனர். இவைகள் இறை நம்பிக்கையின் அடிப்படையில் சமய விழாக்களாகத் திகழ்கின்றன.

இவ்வாறான படகர் வாழ்வு முறைகள் இன்றைய நிலையில் நவீன அறிவியல் வளர்ச்சி, கல்வி வளர்ச்சியின் அடிப்படையில் மாறி வருவதை அறிய முடிகிறது. பெண்களும் எல்லா வகையிலும் வளர்ச்சி நிலையில் உள்ளனர் என்பதும் தெரிய வருகிறது.

நவீன விவசாயம், தொழில்துறை மேம்பாடுகளால் படகர் பொருளியலில் மேம்பட்டிருக்கின்றனர் என்பதை படகர் வாழ்வியலை நோக்கும்போது அறியமுடிகிறது.

# பின்னிணைப்பு - 1

## படக சிறப்புச் சொற்பொருள் அகராதி

| | | |
|---|---|---|
| அத்திகெ | - | அண்ணி |
| அத்திகெனானி | - | நாத்தனார் |
| அம்மெ | - | தங்கை |
| அய்யபெட்டா | - | மருமகன் |
| இன்டேக்கூ | - | கருமாதி சடங்கின் போது செய்யப்படும் சோறு |
| இதமனை | - | வெளியகம், வெளிவீடு |
| எடபாயிலு | - | வெளியத்தையும் உள்ளகத்தையும் பிரிக்கும் தீபமாடத்துடன் கூடிய வளைவு வாயில் |
| எத்தெ | - | பாட்டி |
| என்னஹென்னு | - | என் மகள் |
| என்னகூசு | - | என் மகன் |

| | | |
|---|---|---|
| ஒலக்குடி | - | விலக்கானப் பெண்கள் ஐந்து நாட்கள் வரை தனியாக தங்கும் இடம் |
| ஒன்னு கட்டுதல் | - | பரிசம் போடுதல் |
| ஒகமனை | - | உள்ளகம், உள்வீடு |
| ஓலைக்கட்டுதல் | - | தாலி நீக்குதல் |
| கண்ட | - | கணவன் |
| கும்பிடுசு | - | வாழ்த்துங்கள் |
| குன்னப்பா | - | சித்தப்பா |
| கொர்சி | - | வட்டமான கூடை |
| கேரி | - | வாசல் |
| கொரம்பு | - | கருமாதி |
| சவுன அக்கி | - | திருமணத்தின் போது பெண்வீட்டிலிருந்து ஆண்வீட்டிற்கு கொண்டுவரும் சாமை அரிசி |
| சாவுக்கேரி | - | பிணத்தை வைத்து சடங்கு செய்யும் வாசல் |
| சிக்கவ்வே | - | சித்தி |

| | | |
|---|---|---|
| சுத்தகல் | - | ஊராட்சி நடக்கும் இடம் |
| சொசே | - | மருமகள் |
| தம்ம | - | தம்பி |
| தவட்டைக்கோல் | - | நீலமலை காடுகளில் உள்ள ஒரு வகைச்செடி, இதை சாவு கடங்கின் போது பயன்படுத்துவர் |
| தொட்டப்பா | - | பெரிய அப்பா |
| தொட்டவ்வே | - | பெரிய அம்மா |
| தோ | - | கால்நடைகள் அடைத்து வைக்கும் இடம், தொழுவம் |
| பதக் | - | வாழ்த்துதல் |
| பிதிக்கூ | - | சாவு சடங்கின் போது பயன்படுத்தும் சோறு, கூ என்றால் சோறு, உணவு என்பது பொருள் |
| பெட்டு | - | மலை |
| பெல்லக்கூ | - | சாமை அரிசியும் பனைவெல்லமும் சேர்த்து செய்யப்பட்ட ஒருவகை களி உணவு. திருமணத்தின்போது சடங்கிற்கு இதை பயன்படுத்துவர் |

மண்டைப்பட்டு - படகப்பெண்கள் தலையில் கட்டிக் கொள்ளும் துண்டு

மதுவே - வதுவை, திருமணம்

மம்ம - மாம

மம்மி - மாமி

மறுமனை - மறுவீட்டு அழைப்பு

மாலைமணி - வெள்ளியால் செய்த ஒருவகை அணி, இது கழுத்தில் அணிவிக்கப் பயன்படும் திருமண சடங்கின் போது இதை மணப்பெண்ணுக்கு அணிவிப்பர்

மீணிகெலை - ஒருவகை இலை

மைதா - கொழுநன்

ஜாத்திகத் தள்ளுவது - சாதியிலிருந்து விலக்குவது

ஹட்டி - ஊர், கிராமம், பட்டி

ஹப்பா - பண்டிகை, திருவிழா

ஹாகோட்டு - உள்ளகத்தின் ஒரு பிரிவு, பால்படு பொருள்கள் வைக்குமிடம்

ஹெண்டுரு - மனைவி

# பின்னிணைப்பு - 2

படகர் மொழியிலுள்ள பாவ மன்னிப்புப் பாடல்

## 1. சாவு ஹரக்கே

இதற்கு பாவ மன்னிப்பு பாடல் என்பது பொருள். CRtÏ 'கருஹரசுவது' என்று படக மொழியில் பொருள்படும். கீழ்வரும் பாடல் படக மொழியில் அமைந்தது.

சத்த நொந்து சாவு

புட்ட தொந்து கூளி,

மத்தியலோக தெந்த மஹாலோககா

தேர் திருப்த்தி ஒந்திகே பயண

மனுஷனக்கட்டெ மண்ணுக திருகலி

சிவகொட்ட சிவிலு சிவக சேரலி

மத்திய லோகனொ அர்த்திய ஹோக்கிதது பாப்ப

அவர முத்தே முத்தப்பன மாடிதது பாப்ப

ஹெத்தெ ஹெத்தப்பன மாடிதது பாப்ப

தாயி தந்தைய மாடிதது பாப்ப

மாயி மாவன மாடிதது பாப்ப

சொசய சிசுவ மாடிதது பாப்ப

அண்ணா தம்மன அகல மாடிதது பாப்ப

திட்ட தெவர ஒத்திதது பாப்ப

நட்ட கல்ல கித்தது பாப்ப

உட்டொப் பெயா ஹொரே தட்டிதது பாப்ப

கட்டொப் பெயா கை ஹாக்கிதது பாப்ப

ஹொடெயா முள்ள எளதது பாப்ப

ஹச்சய சிகத்தது பாப்ப

பரல பாக்கிதது பாப்ப

ஹச்சிய கித்து பிசிலுக ஹாக்கிதது பாப்ப

எளவாக பயிலா மொளய ஜிள்ளிதது பாப்ப

கூளிய உத்தது பாப்ப

ஜன்னிகெய கரதது பாப்ப

சுரத எம்மைய கண்ணெத்தி நோடிதது பாப்ப

பேத ஹொலக பெரல தோரிதது பாப்ப

ஊர மேலே உரிதது பாப்ப

நாட மேலே ஐரதது பாப்ப

அர்த்து பந்தமக அன்னவா கொடாதது பாப்ப

பெரத்து பந்தமக பெங்க்சிய கொடாதது பாப்ப

தாரிய தோருயெந்தமகா காடதோரிதது பாப்ப

மாடித தருமகா அட்டலாதது பாப்ப

கங்கிக உகித்து பாப்ப

ஹரிதோப்ப கங்கிய அப்பணே இல்லாதெ
லகா ஏரிதது பாப்ப

கட்டிதா கெரைய ஓடத்தது பாப்ப

தும்பிதா பாவியா கரதது பாப்ப

உரிதகிச்சுகா உச்செ ஹீதது பாப்ப

சூரியன முந்தே இண்ட செல்லிதது பாப்ப

சந்திரன சர்ப நுங்குவனே நோடி நித்திரெ மாடிதது பாப்ப

ஓரகண்ணெத்தி நோடிதது பாப்ப

ஹுட்டிதா ஹுட்டுகா முந்தே ஹல்லுகிரிதது பாப்ப

மாயியா பீத்து மச்ச எறிதது பாப்ப

மாவனா பீத்து ஜகிலி ஏறிதது பாப்ப

ஆவா, கோவா கொத்தது பாப்ப

ஹக்கிய ஹிடித்து பெக்குகா கொட்டது பாப்ப

அன்னகா நஞ்சு ஹாக்கிதது பாப்ப

அரமனெகா மொரெ ஹேகிதது பாப்ப

அவரெத்து அவரு மாடிதது பாப்ப

சருவ முன்னுறு பாப்ப ஹட்டலியு

பாப்ப பரிகார ஆகலி

கரும கடெகா திருகலி

தரும தாரிக பரலி

அந்து கொட்ட பிரம தேவ பாத ஹிடிது ஹிடிது

இந்து புட்ட பசவன பாத ஹிடிது ஹிடிது

அத்திகளா ஆறுசாவிர பாத ஹிடிது ஹிடிது

பதிகள் ஹன்னெருடு சாவிர பாத ஹிடிது ஹிடிது

அதிபதிகள் ஒந்தாகி ஒந்தாகி

பதி பரிசரணகா சேரலி

சக்கதடி தரயலி

சவுந்தூரா நெரெயலி

நூலா பாலா பிகியலி

முள்ளுமொர மெட்டு கொடலி

கருமதமனே கதா முச்சலி

தருமதமனே தாரி புடலி

ஹீனகுண்டி முச்சலி

கருமதகை சுருணலி

தருமதகை நிகியகி

சின்னத கம்புக சேது

பெள்ளிய கம்புக ஓரது

செவசந்தாகை சேரலி அகே, ஓகே
(மூரு ஹீட்டு ஹேக பேக்கு)

மூன்று முறை சொல்லுதல் வேண்டும்.

# துணைநூல் பட்டியல்

## தமிழ் நூல்கள்

அருணை வடிவேல் முதலியார், சி., (1964) - சுந்தரர் தேவாரம் திருமுருகன் பூண்டிபதிகம், ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுரம்.

அழகப்பன், ஆறு., (1980) - நாட்டுப்புறப் பாடல்கள் - திறனாய்வு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை- 600 001.

இராசு, க.ப., (1982) - ஆராய்ச்சி மலர் 1 இதழ் 4, சாந்தி வனம், உதகமண்டலம்.

இராமநாதன், ஆறு., (1982) - நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழ் வாழ்வியல், மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

இளவழகனார் (உரையாசிரியர்) (1958) - கலித்தொகை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 001.

கணேசன், சா., (1967) - கையேடு, இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு, சென்னை.

காந்தி, க., (1980) - தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 028.

கைலாசபதி, க., (1970) - அடியும் முடியும், பாரி நிலையம், சென்னை - 600 001.

சண்முகப் பிரசுதம், கொடுமுடி, (1973) - ஆய்வுத்தேன், கொங்குப் பதிப்பகம், சென்னை - 600 020.

சண்முகம் பிள்ளை, மு., (1978)- சங்க இலக்கியத்தில் காணும் வழிபாட்டு முறை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 001.

சாமுவேல், ஜான், ஜி., (1975)- திராவிட மொழிகளில் ஒப்பாய்வு - ஓர் அறிமுகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை 600 020.

சோமசுந்தரனார், பொ.வே., (உரையாசிரியர்) (1955) - குறுந்தொகை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை - 600 001.

சோமசுந்தரனார், பொ.வே., (உரையாசிரியர்) (1956)
- பத்துப்பாட்டு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 001.

சோமசுந்தரனார், பொ.வே., (உரையாசிரியர்) (1970).
- அகநானூறு, சைன சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை - 600 001.

சோமலெ, (1975) - தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

திருமலை முத்துசுவாமி, அ., (1959)
- மலைவாழ் மக்கள் (நீலமலை), ஔவை நூலகம், சென்னை 600 001.

துரைசாமிப் பிள்ளை, க., ஔவை. (உரையாசிரியர்), (1962)
- புறநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 001.

நச்சினார்க்கினியர் (உரையாசிரியர்), (1956)
- தொல்காப்பியம் - பொருளதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 001, இரண்டாம் பதிப்பு.

நாராயணசாமி ஐயர், அ. (உரையாசிரியர்), (1956)
நற்றிணை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 001.

பரமசிவானந்தம், அ.மு., (1967)-மலைவாழ் மக்கள் மாண்பு, தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை - 600 030.

பிலோ இருதயநாத், (1965) - நீலகிரி படகர்கள், மல்லிகைப் பதிப்பகம், சென்னை - 17.

பொடோஸெட்னிக், வி. ஸ்பிரிகின். ஏ., (1978)
- சரித்திர இயல் பொருள் முதல் வாதம் பற்றிய ஒரு பார்வை, நியூ செஞ்சுரி புக் உறவுஸ், சென்னை.

வெரியர் எல்வின், (1967) - எல்வின் கண்ட பழங்குடி மக்கள், புக்வென்சர் நிறுவனம், சென்னை - 600 017.

வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உரையாசிரியர்), (1956)
- சிலப்பதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 001, ஐந்தாம் பதிப்பு.

வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உரையாசிரியர்), (1959)
அகநானூறு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 001, நான்காம் பதிப்பு.

## ஆங்கில நூல்கள்


Alchin, F.R., (1962) - Neolithic Cattle Keepers of Southern India, Cambridge University Press, London

Emeneau, M.B., (1967) - Collected Papers Annamalai University, Annamalai Nagar.

Thurston Edgar, (1975) - Castes and Tribes of Southern India, Cosmo Publications, Delhi.




குறிப்புகள் :

குறிப்புகள் :

# நமக்குத் துணை நல்ல புத்தகங்களே!


**சங்கநூலாய்வும் சாமியும்** (பி.எல்.சாமி, ஐ.ஏ.எஸ்.)
தொகுப்பு : வில்லியனூர் ந. வேங்கடேசன் ரூ. 75.-

**விண்ணைத் தொடும் எண்ணங்கள்**
- என். இராஜசேகர், ஐ.ஏ.எஸ். ரூ. 40.-

**வியர்வையின் வெளிச்சங்கள்**
- என். இராஜசேகர், ஐ.ஏ.எஸ். ரூ. 40.-

**வளமையின் வாயில்கள்**
- என். இராஜசேகர், ஐ.ஏ.எஸ். ரூ. 32.-

**செந்தமிழ்க் கனிகள்**
- கவிமாமணி கல்லாடன் ரூ. 40.-

**வாணிதாசன் பாடல்களில் உவமை நலம்**
- பாவலர் இலக்கியன் ரூ. 46.-

**தமிழ்ப் புனல்**
- பாவலர் இலக்கியன் ரூ. 36.-

**அறிஞர் பார்வையில் கவிஞர்**
- கோப்பெருந்தேவி கல்லாடன் ரூ. 28.-

**தமிழ்விடு தூது**
- புலவர் ம. அய்யாசாமி, எம்.ஏ. ரூ. 45.-

**நளன் கதை**
- புலவர் ம. அய்யாசாமி, எம்.ஏ. ரூ. 22.-

**நீதி நூல்கள் - 8**
- புலவர் ம. அய்யாசாமி, எம்.ஏ. ரூ. 26.-

**கல்வெட்டுகளில் காரைக்கால் பகுதிகள்**
- புலவர் ந. வேங்கடேசன் ரூ. 80.-

**கல்வெட்டுகளில் நீர்நிலைகளும் வரிகளும்**
- புலவர் ந. வேங்கடேசன் ரூ. 32.-

**வரலாற்றுச் சுடர்**
- வி. இராமலிங்கம், எம்.ஏ. ரூ. 25.-

**திருமுடிப் பெருமகன்றார்**

- வி. மணிமாறன், எம்.ஏ. ரூ. 30.

**புதுச்சேரி முதல்கவர்னர் பிரான்சுவா மர்த்தேன்**

- அ. செபஸ்தியான் ரூ. 65.-

**பிறந்த மண்**

- கோவி. கலியபெருமாள் ரூ. 22.-

**பாரதி கட்டுரைகளில் சமுதாயச் சிந்தனைகள்**

- வில்லியனூர் ஞானகுமாரன் ரூ. 52.-

**தவோ - தெளிவாக வாழும் கலை**

- செ. இலக்குவன், எம்.ஏ. ரூ. 26.-

**உலக சென் கதைகள்**

- செ. இலக்குவன், எம்.ஏ. ரூ. 50.-

**சிற்றூரில் ஒரு சித்தர்**

- முனைவர் நாகப்பா நாச்சியப்பன் ரூ. 30.-

**உயர்ந்தவர்கள்**

- பேராசிரியர் சுந்தர. கலிவரதன் ரூ. 52.-

**அழகின் ஆட்சி**

- கவிஞர் சோதிதாசன் ரூ. 32.-

**பாவேந்தர் படைப்பிலக்கியம்**

- ஓவியப் பாவலர் வலவன் ரூ. 40.-

**இனிக்கும் இலக்கியம்**

- அறிஞர் அ.வெ.சுப்பிரமணியன் ரூ. 46.-

**சுரதா ஓர் ஒப்பாய்வு**

- கவிஞர் முருகுசுந்தரம், எம்.ஏ., ரூ. 45.-

**குடந்தை என். சேதுராமன் ஆய்வுக் கட்டுரைகள்**

- பாகம் - 1 ரூ. 60.-

- பாகம் - 2 ரூ. 60.-

**நடிகமணி டி. வி. நாராயணசாமி**

(தொகுப்பு : வெள்ளையாம்பட்டு சுந்தரம்) ரூ. 45.-

**கைகொடுத்த கலையுலகம்**
இயக்குநர் திலகம் கே.எஸ். கோபாலகிருஷ்ணன் ரூ. 60.-

**மண்வாசனையும் திரைக்கலையும்**
- க. ஜெயபாலன், எம்.ஏ. ரூ. 45.-

**பன்முகப் பார்வையில் பட்டுக்கோட்டை**
- க. ஜெயபாலன், எம்.ஏ. ரூ. 26.-

**சேக்கிழார் கவித்திறம்**
- க. ஜெயபாலன், எம்.ஏ. ரூ. 28.-

**வரலாற்றில் திருக்கண்ணீச்சுரம்**
- அனந்தபுரம் கோ. கிருட்டிணமூர்த்தி ரூ. 70.-

**தமிழர் பண்பாட்டில் சங்கு**
- அனந்தபுரம் கோ. கிருட்டிணமூர்த்தி ரூ. 45.-

**நல்லொழுக்கச் சிந்தனைகள்**
- மு. அழகப்பன், எம்.ஏ., எம்.எட்., ரூ. 40.-

**மலைவிருந்து** - அமல்ராஜ் ரூ. 16.-

**அறிவியல் மனப்பான்மை** - ப. செங்குட்டுவன் ரூ. 16.50

**பேரறிஞர்களின் உவமைகள்**
- கே. எஸ். லெட்சுமணன் ரூ. 16.50

**திருக்குறள் கதைகள்**
- திருக்குறளார் வீ. முனிசாமி ரூ. 16.-

**மங்கையின் மாண்புக் கதைகள்** - பாகம் - 1 ரூ. 28.-
- பாகம் - 2 ரூ. 27.-
- புலவர் க. அரசுமணி

**வாசகர் வட்டம் - 2000 திருக்குறள் கவியரங்கம்**
- ஆர். இராமசாமி, எம்.ஏ. ரூ. 32.-

**கிந்தனாரின் சிந்தனைகள்** - முகம் மாமணி ரூ. 75.-

**நெடுநல்வாடை** - கவிரத்ன நலங்கிள்ளி ரூ. 18.-

**கல்விக் கனிகள்** - வெள்ளையாம்பட்டு சுந்தரம் ரூ. 28.-

**கல்விக் கதைகள்** - வெள்ளையாம்பட்டு சுந்தரம் ரூ. 28.-

**தாயுமானார் கதை** - வெள்ளையாம்பட்டு சுந்தரம் ரூ. 24.-



Toda Temple with Poojari